பக்கங்கள் : 22+X=32

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 8 ஞாயிற்றுக்கிழமை (24.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :240

## தமிழர் தாயகத்திலிருந்து ஆயுதக் குழுக்களை அகற்றுமாறு

# இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுக்க

# சர்வதேச சமூகத்தை வலியுறுத்துங்கள்!



## நோர்வேக் குழுவினரிடம் நேற்று மதியுரைஞர் பாலா எடுத்துரைப்பு

லண்டன்,ஜூலை24

"இலங்கைத் தீவில் யுத்தநிறுத்தம் முறிந்துவிடாமல் இருக்க வேண்டுமானால் முதலில் அது தொடர்பான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தமிழர் தாயகத்திலிருந்து துணைப் படைகள், ஆயுதக் குழுக்கள் போன்றவற்றின் ஆயுதங்கள் களையப்பட்டு அக்குழுக்கள் அங்கிருந்து அகற்றப்படவேண்டும். அப்படிச் செய்யுமாறு வெறும் அறிக்கைகளை விடுவதில் பயனில்லை. அதற்குரிய சரியான அழுத்தத்தை - உரிய நிர்ப்பந்தத்தை - அதற்கே உரிய முறையில் இலங்கை அரசு மீது சர்வதேச சமூகம் பிரயோகிக்கவேண்டும். அப்படிப் பிரயோகிக்குமாறு சர்வதேச சமூகத்தை நோர்வே அனுசரணையாளர்கள் வழிப்படுத்தவேண்டும்"

- இவ்வாறு நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதிகளிடம் நேற்று நேரில் வலியுறுத்தினார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

நோர்வே அனுசரணைத் தரப்பின் சார்பில் அதன் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான அதன் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் உயர் பிரதிநிதி சொன்ட்ரி பிஜோட்வெற் ஆகியோர் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது துணையவியார் அடேல் பாலசிங்கத்தையும் அவர்களது இல்லத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு சுமார் மூன்று மணி நேரம் நீடித்தது.

இலங்கையில் பாதுகாப்பு நிலைமை சீர்கெட்டு யுத்தநிறுத்தம் முறியும் என்ற ஏதுநிலை தென்படுவது குறித்தே நேற்றைய சந்திப்பில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தயிர் வியாபாரி சுட்டுக்கொலை!

திருகோணமலை,ஜூலை24

திருமலை தம்பலகாமம், பொற்கேணி நான்குவாசல் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியிளவில் தயிர் வியாபாரி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் தயானந்த என அழைக்கப்படும் பெரும்பான்மை இனத்தவர் என்று

(18ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசித்த நால்வருக்கு நீதிமன்றம் பிணை

வவுனியா,ஜூலை24

வவுனியா இரணைஇலுப்பைக்குளம், கல்மடு ராணுவப் பாதுகாப்பு வலயத்தினுள் நுழைந்ததாகக் கூறி ராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு வவுனியா நீதிமன்றம் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

கல்மடு ராணுவப் பாதுகாப்பு முன்னணிக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகாந்தியில்

- சமாதானத்துக்குக் குறுக்கே நிற்கும் துணைப் படைகளை அரசு விலக்குமா?
- தமிழருக்கு உரிமை வழங்க அரசமைப்பு இடம்தருமா?
- தமிழ்த்தேசியத்தை வீறு கொண்டு எழவைத்த ஆடிக் கலவரம்...
- ...பழைய பாடல் போல புதிய பாடல்கள் இல்லை...
- வாய்ச்சொல்லில் வீரரடி!- ஒரு கற்பனைச் சித்திரம்.

இவற்றுடன் மற்றும் பல அம்சங்கள்.

## தமிழர் பிரதேசத்தின் இயற்கை வளங்களை அழிப்பதில் ஆட்சியாளர்கள் அதிக முனைப்பு

### சூழல் ஆணையத்தின் தொடக்க விழாவில் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஜூலை24

தமிழ்மக்களுடன் சேர்த்து தமிழர் பிரதேசத்தின் இயற்கை வளங்களை அழிப்பதிலும் சிங்கள ஆட்சியாளர்கள் முனைப்புடன் செயற்பட்டு வந்துள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் .

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தின் தொடக்க நிகழ்வில் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

எமது எதிர்காலத்தில் சூழலியல் தொடர்பாக கோட்பாடுகள் சம்பந்தமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உற்சாகமான பல விடயங்களை இந்த ஒன்று கூடல் உருவாக்கும் என நினைக்கின்றேன்.

எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலேயே எமது தேசத்திலுள்ள இயற்கை வளங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே மிக நெருக்கடியான காலகட்டத்திலும் தலைவர் அவர்கள் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலேயே அக்கறை கொண்டு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார்.

முக்கியமாக எமது தேசத்தில் இலங்கைத் தீவின் தமிழர் தாயகத்திலேயே இருக்கின்ற இயற்கை வளங்களை அழிப்பதில் சிங்கள அரசு அக்கறை காட்டிவந்தது.

கடந்த காலங்களில் எவ்வளவு உயிரிழப்புக்களைச் சந்தித்தோமோ அதேபோன்று இயற்கை அழிவுகளையும் சந்தித்துள்ளோம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் நாயகத்தை திடீரெனப் பதவி விலக்கினார் ஜனாதிபதி!

### கிழக்கு வன்செயல்களின் பின்னணி காரணமா?

கொழும்பு,ஜூலை24

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் கபில கெந்தவிதாரணவைத் திடீரென அப்பதவியில் இருந்து நீக்கியிருக்கின்றார் ஜனாதிபதி.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக நீண்டகாலம் பணியாற்றி வந்தவர் கெந்தவிதாரண. அண்மைக் காலமாக இவரது நடவடிக்கைகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுவந்த முறைப்பாடுகளை அடுத்தே அவரை ஜனாதிபதி பதவிநீக்கம் செய்திருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதவி நீக்கப்பட்டிருக்கும் கெந்தவிதாரண தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தின்

(18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் துணைத் தூதரின் வாகனம் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது!

கொழும்பு,ஜூலை24

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதர் கே.ஆர்.ஆர்.பிள்ளையின் சொகுசு வாகனம் நேற்றுக் கண்டி அம்பேபுச பகுதியில் வைத்து ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டிருக்கிறது.

கண்டியில் உள்ள தமது தூதரக இல்லத்தில் இருந்து நேற்று மு.ப. 11 மணியளவில் தூதரும் அவரது துணைவியாரும் 'அந்த வாகனத்தில் வெளியே சென்றிருந்த சமயம் இந்தக் கடத்தல் இடம்பெற்றிருக்கிறது. அம்பேபுச பகுதியில் ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டுத் தூதரும் துணைவியாரும் தேநீர் அருந்தச் சென்ற சமயம் இனந்தெரியாத ஆயுதபாணிகள் இருவர் வாகனத்தின் சாரதியைத் துப்பாக்கி கொண்டு பயமுறுத்திவிட்டு

(18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்துக்கான சட்டச் செயலகம் வன்னியில் செவ்வாயன்று திறப்பு

கிளிநொச்சி,ஜூலை24

தமிழீழத்துக்கான சட்டங்களைத் தயாரிப்பதற்குரிய செயலகம் ஒன்று நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்படவிருக்கின்றது.

ஸ்ரீலங்காவுக்கான சட்டவாக்கங்களைச் செய்யும் சட்டமா அதிபர் திணைக்களம் போன்று தமிழீழத்துக்கான சட்டவாக்கங்களைச் செய்ய இச்செயலகம் திறக்கப்படுகின்றது.

இந்தச் செயலகத்தை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் தமிழீழத்தின் சகல பிரதேசங்களிலும் இருந்து சட்டவாளர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (ஐ-3)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





மாவீரர் லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 22ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நேற்றுப் பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபி முன்றிலில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பொதுச்சுடரினை புலிகளின் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றுவதையும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலிசெலுத்தியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் பிரபா)

# செல்லக்கிளி அம்மானின் நினைவாக நேற்று திருநெல்வேலியில் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை24

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி திருநெல்வேலியில் நடத்தப்பட்ட முதலாவது கண்ணிவெடித் தாக்குதலில் வீரச்சாவடைந்த செல்லக்கிளி அம்மானின் 22ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை இடம்பெற்றன.

யாழ். - பலாலி வீதியில் தபாற்பெட்டிச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபி முன்றிலில் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்விற்குச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பிரதிநிதி இ.புவிராஜ் தலைமை வகித்தார்.

பொதுச்சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், பொது அமைப்புகள் ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன், பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ், தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் யசோ ஆகியோர் ஏற்றினர்.

உருவப் படத்திற்கான ஈகச்சுடரினை யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஏற்றிவைத்தார்.

மலர் மாலையினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பொறுப்பாளர் கண்ணன், நல்லூர் கோட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து பொது மக்களும் போராளிகளும் மலரஞ்சலி செலுத்தினர்.

நினைவுரைகளை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழியும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் சிறியும் நிகழ்த்தினர்.

மாலை நிகழ்வுகள் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றன

இந்நிகழ்வின் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.சிறில், லெப்.கேணல் செல்வகுமாரின் தந்தை சிங்கராசா, மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை நல்லூர் பிரதேச அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள் ஏற்றிவைத்தார்.

யாழ். பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலாளர் சு.ஜேசுதாஸ் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் செல்லக்கிளியின் சகோதரருமான கனரத்தினம் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

நினைவுரைகளை யாழ். பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், நடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் சிவராசா ஆகியோர் நிகழ்த்தினர். கலை நிகழ்வுகளாக 'தாயகம்' நாடகம், நடனம் என்பன இடம்பெற்றன. (ஐ-7-86-30)

# 552 கருத்திட்டங்களுக்கு எம்.பிக்கள் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூலை24

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திற்கு 552 கருத்திட்டங்களிற்கு 3 கோடியே 16 லட்சத்து 73 ஆயிரத்து 400 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் 10 கருத்திட்டங்களுக்கு 6 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் வேலணையில் 25 கருத்திட்டங்களுக்கு 12 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் ஊர்காவற்றுறையில் 17 கருத்திட்டங்களுக்கு 13 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவும் -

காரைநகரில் 6 கருத்திட்டங்களுக்கு 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் யாழ்ப்பாணத்தில் 53 கருத்திட்டங்களுக்கு 36 லட்சத்து 18 ஆயிரத்து 400 ரூபாவும் -

நல்லூரில் 38 கருத்திட்டங்களுக்கு 23 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் சண்டிலிப்பாயில் 26 கருத்திட்டங்களுக்கு 14 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் சங்கானையில் 74 கருத்திட்டங்களுக்கு 32 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் -

உடுவிலில் 27 கருத்திட்டங்களுக்கு 16 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் தெல்லிப்பழையில் 24 கருத்திட்டங்களுக்கு 9 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் -

கோப்பாயில் 63 கருத்திட்டங்களுக்கு 40 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் தென்மராட்சியில் 94 கருத்திட்டங்களுக்கு 53 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் கரவெட்டியில் 55 கருத்திட்டங்களுக்கு 29 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் -

பருத்தித்துறையில் 29 கருத்திட்டங்களுக்கு 16 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் மருதங்கேணியில் 11 கருத்திட்டங்களுக்கு 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலக புள்ளிவிவர அறிக்கை தெரிவிக்கின்றது. (எ-202-203)

## ஞானபாஸ்கரோதய ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை24

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 85ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 7 மணிக்கு ஆண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறும். ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தை தயா நகைப்பூங்கா உரிமையாளர் செ.தயானந்தனும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தை கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வமும் ஆரம்பித்து வைப்பர்.

மாலை நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யர்ழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் முதன்மை விருந்தினராகவும் கோப்பாய் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கல்வியங்காடு கிர்ாம அலுவலர் எஸ்.முத்துக்குமாரசாமி, வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் து.செம்பரிதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக கலை நிகழ்வுகள் இடம்பெறும். (எ-7-203)

# வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசுத் தரப்பில் அதிரடி அறிவிப்புகள்

## டீஸலுக்கான 'வற்'வரி நீக்கம், ஆனால் விலை மட்டும் குறையாது

கொழும்பு,ஜூலை24

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையில் அரசு திடீரென பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக டீஸலுக்கு விதிக்கப்பட்டிருந்த 15 வீத வற்வரி நீக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய்க்கு இனி எந்தவிதமான வரியும் கிடையாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான மாற்றுத் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

டீஸலுக்கான வற்வரி நீக்கத்தால் டீஸலின் விலை குறையமாட்டாது. எனினும், எதிர்காலத்தில் அதன் விலை அதிகரிக்கவும் மாட்டாது.

அரசின் இந்த அதிரடி நடவடிக்கையால் எரிபொருள்கள் மற்றும் மின்சாரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பொருள்களின் விலைகளும் கட்டுப்படுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார நல நோம்புத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வகையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் சில்வா இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

அன்றாட வாழ்கையில் மின்சாரமும் எரிபொருள்களும் அத்தியாவசியமாகியுள்ளன. அத்தியாவசிய பொருள்களின் உற்பத்தி, விநியோகம், போக்குவரத்து என்பன இவற்றுடன் தொடர்புடையனவாகவே இருக்கின்றன.

இதனைக் கருத்திற்கொண்டே நடுத்தர மக்களின் சுமையைக் குறைக்கும் வகையில் டீஸலுக்கான 15வீத வற்வரியை நீக்கியுள்ளது. மண்ணெண்ணெய்க்கு எந்தவிதமான வரியும் இனி அறவிடப்படமாட்டாது. அதே வேளை, பெற்றோலுக்கான வற்வரி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை 60 டொலராக அதிகரித்துள்ளது. தொடர்ந்து அதிகரிக்கவும் இடமுண்டு.

இதுவரை எரிபொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் பாவனையாளர்களிடம் 15 வீத வரி அறவிடப்பட்டு'சிபெக்கோ' மற்றும் இந்தியன் ஒயில் நிறுவனம் என்பனவற்றிற்கு மானியம் வழங்கப்பட்டது.

இனிமேல் இந்த நிலை ஏற்படாது. பாவனையாளர்களுக்கான வற்வரியும் இறக்குமதியாளர்களுக்கான வற்வரியும் நீக்கப்படும். வற்வரி நீக்கப்பட்டதன் மூலம் அரசிற்கு மாதாந்தம் 700 கோடி ரூபா நட்டம் ஏற்படும். எனினும், பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலேயே எரிபொருளுக்கான வற்வரி நீக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வாழ்க்கைச் செலவை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். - என்றார். (ஐ-க)






நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமம் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் பவனி நேற்றுக் காலை ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது. வேல் பவனியில் இடம்பெற்ற ஐராவதம், நவவீரர் ஊர்தி, வேல்ரதம் ஆகியவற்றைப் படங்களில் காணலாம். (படங்கள் : தமிழினியன்)

# இருபத்தைந்து வருடங்களாக அபிவிருத்தி இல்லை! இருந்த சில வளங்களையும் இராணுவம் அழித்தது!!

## வன்னிப் பிரதேசக் கல்வி நிலை இதுவே என்கிறார் இளங்குமரன்

## தமிழர் பிரதேசத்தின் வீழ்த்தப்படும் கல்வி – 3

*இந்த நாட்டில் காலத்துக்கு காலம் ஆட்சிப்பீடம் ஏறிய அரசுகள் தமிழர் கல்வியை திட்டமிட்ட முறையில் புறக்கணித்தே வந்திருக்கின்றன.*

*இவ்வாறான அரசுகளின் கல்விப்புறக்கணிப்புத் தொடர்பாக ஒருசில செயற்பாடுகளே நேரடியாக வெளித்தெரிந்தன. ஆனால், தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆப்பு வைக்கின்ற பல செயற்பாடுகளை மறைமுகமாக - வெளித்தெரியாத வகையில் - சிங்கள அரசுகள் மேற்கொண்டு வந்திருக்கின்றன; இப்போதும் மேற்கொள்கின்றன.*



*இந்த நிலையில் தமிழர் கல்வி எந்தெந்த வகையில் புறக்கணிக்கப்படுகிறது, ஒடுக்கப்படுகிறது என்ற விடயங்கள் தொடர்பாக தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி இது.*

*தமிழர் தாயகத்தின் கல்விநிலை வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதற்கான காரணங்களை தகுந்த ஆதாரங்களுடன் - புள்ளி விவரங்களுடன் விவரிக்கிறார் இளங்குமரன். இவரது செவ்வியின் இரண்டாம் பகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் வெளியாகியிருந்தது.*

*கேள்வி:* அரசினால் வழங்கப்படுகின்ற புத்தகங்களில் ஏராளமான பிழைகள், குறைபாடுகள், வரலாற்றுத் திரிபுகள் இருப்பதாகக் கூறினீர்கள். அப்படியானால் இலவசப் பாடநூல் திட்டமே தமிழ் மாணவர்களுக்குப் பாதிப்பைத்தான் ஏற்படுத்துகின்றது என்கிறீர்களா?

*பதில்:* ஆம் அரசினால் வெளியிடப்படுகின்ற பாடநூல்களில் காணப்படுகின்ற குறைபாடுகளைப் பார்க்கின்றபோது அரசின் இலவச பாடநூல் திட்டத்தினால் எமது மாணவர்கள் அதிக பாதிப்பை அடைந்திருக்கின்றார்கள் என்றுதான் கூறவேண்டும்.

ஏனென்றால், இலவச பாடநூல் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் சிங்கள மாணவருக்கான நூல்களை சிங்களவரும் தமிழ்மாணவருக்கான நூல்களைத் தமிழர்களும் எழுதினார்கள். அந்த நூல்கள் பாடத்திட்டத்துக்கு அமைவாக இருக்கின்றனவா என்று பார்த்து அங்கீகரிக்கப்பட்ட பிறகு அதனைப் பயன்படுத்த முடியும்.

ஆனால், 70 களுக்குப் பிறகு அரசின் இலவச கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது.

அதற்குப் பின்னர் அரசினால் கொடுக்கப்படுகின்ற புத்தகங்களை மட்டுமே எமது மாணவர்களுக்குக் கற்பிக்கமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டது. எந்த வெளிநூலையும் யாரும் பயன்படுத்த முடியாது.

அப்படி ஒரு திட்டத்தை அமுல்படுத்திவிட்டு அவர்கள் இங்கு வழங்குகின்ற நூல்கள் அனைத்தும் சிங்கள மொழி நூல்களின் மொழிபெயர்ப்புக்களே. தமிழ்மொழி, இந்துசமயம் ஆகிய நூல்கள் மட்டுமே நேரடியாக தமிழில் எழுதப்பட்டவை. நான் முன்னர் குறிப்பிட்டது போல தமிழ்ப் பிரதேச மாணவர்களுக்கு ஏராளமான குறைபாடுகளுடன் நூல்களை வழங்குகின்றபோது அது எமது மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது .

**உண்மையான வரலாற்றை அறிவதற்குப் புதிய நூல்!**

*கேள்வி:* பிழையான வரலாறுகளைத் தமிழ் மாணவர்கள் படிப்பது எதிர்காலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துமல்லவா?

*பதில்:* ஆம், அதற்காகத் தரம் 7,8,9 ஆகிய வகுப்புகளில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கெனப் புதிய வரலாற்று நூல்களைத் தமிழீழக் கல்விக்கழகம் அச்சிட்டு வழங்கியுள்ளது. ஆசிரியர்களுக்கான கைநூலையும் வழங்கியுள்ளோம்.

அதிலே உண்மையான வரலாறுகள், தரவுகள் எல்லாம் இடம்பெற்றிருக்கின்றன. சிங்களவர்களின் திட்டமிட்ட முறையிலான வரலாற்றுத் திரிபுகளை எமது மாணவர்கள் உண்மை என்று நம்பிவிடக்கூடாது என்பதற்காக - எதிர்கால சந்ததிக்குப் பிழையான வழிநடத்தல் இருக்கக்கூடாது என்பதற்காக- இதனை நாங்கள் செய்து வருகிறோம். தற்போது எங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருக்கின்ற பாடசாலைகளில் இந்த நூல்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். தொடர்ந்து ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்கும் அதனை அறிமுகப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

*கேள்வி:* அப்படியனால் இரண்டு வரலாற்று நூல்களிலும் வேறு வேறு தகவல்கள், தரவுகள் இருப்பதால் மாணவர்களுக்கு குழப்பம் ஏற்பட வாய்ப்பிருக்கிறதல்லவா? பரீட்சைகளில் எதனை அவர்கள் எழுதுவார்கள் ...?

*பதில்:* எங்களைப் பொறுத்த வரைக்கும் எங்களுடைய மாணவர்கள் சரியான வரலாற்றையறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவேப் புதிய வரலாற்று நூலை எழுதினோம்.

ஆனால், ஜி.சீ.ஈ. சாதாரண தரம் போன்ற அரசாங்கப் பரீட்சைகளில் அரசினால் வழங்கப்பட்ட நூலில் உள்ளவாறான தகவல்களையே எழுதுமாறு ஆசிரியர்கள் ஊடாக அறிவுறுத்துகின்றோம்.

உண்மையை அவர்கள் தெரிந்து வைத்திருந்தால் அதுவே போதும். அரசின் பொதுத் தேர்வுகளிலே சித்தியடையவேண்டும் என்றால் அவர்கள் அரசினால் வழங்கப்பட்ட நூலில் உள்ளவாறு எழுதவேண்டியது தவிர்க்க முடியாதது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கல்விச் சீர்திருத்தங்களால்' தமிழருக்குப் பயனில்லை!**

*கேள்வி:* அவ்வவ்போது கொண்டு வரப்படுகின்ற கல்விச் சீர்திருத்தங்கள் தமிழர் கல்வி நிலையில் வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன என்று கருதுகின்றீர்களா?

*பதில்:* ஒவ்வொரு கல்விச் சீர்திருத்தங்களும் ஏறக்குறைய 5 அல்லது 6 ஆண்டுகளுக்கே செயற்படுகின்றது.

கவ்வி நிர்வாக சேவை, கல்வி அமைச்சு உட்பட கல்வி தொடர்பான நிர்வாகக் கட்டமைப்புகளில் தமிழ்மொழி மூல ஆளணி போதியளவு இல்லாததால் கல்விச் சீர்திருத்தங்கள் காலம் தாழ்த்தியே தமிழ்ப் பகுதிக்கு வருகின்றன.

எங்கள் பகுதிகளிலும் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதால் அந்தத் திட்டங்களை உடனடியாக - சரியாக நடைமுறைப்படுத்த முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு கல்விச் சீர்திருந்தங்களும் வந்து அது திரும்பவும் மாற்றப்படுகின்ற நேரத்தில்தான் அது தொடர்பான முழுமையான ஓர் அறிவும் விளக்கமும் எமது பகுதி ஆசிரியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கிடைக்கிறது. அப்படி ஒரு கல்விச் சீர்திருத்தம் தொடர்பான முழுமையான விளக்கம் கிடைக்கின்ற நேரத்தில் வேறொரு புதிய கல்வித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுவிடும்.

இதனைவிட இன்னொரு விடயம் என்னவென்றால், ஒவ்வொரு கல்விச் சீர்த்திருத்தங்களும் அவை தொடர்பான வேலைத்திட்டங்களும் முழுமையான ஆளணிக்கு ஏற்றவகையிலேயே தயாரிக்கப்படுகின்றன. எனவே அந்த ஆளணியில்லாத இடங்களில் குறித்த கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விடும். எனவே, ஆளணிப் பற்றாக்குறையுள்ள தமிழ்ப் பிரதேச ஆசிரியர்களுக்கு வேலைப்பளுவும் அதிகமாகிவிடுகிறது.

இதனால், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றதே ஒழிய எந்தவொரு முன்னேற்றமும் இல்லை.

**பௌதிக வளப் பற்றாக்குறை தமிழ்ப் பாடசாலைகளில் தாராளம்!**

*கேள்வி:* தமிழ்ப் பாடசாலைகளில் கட்டடத் தளபாட வசதிகள் மற்றும் பௌதிக வளங்களின் பற்றாக்குறைகள் தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள்...?

*பதில்:* கடந்த வருடங்களுக்கு மேலாக போரைக் காரணம் காட்டி எமது பிரதேசங்களின் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு பின்னடித்து வந்தது. இதனால் வளப்பற்றாக்குறைகள் தமிழர் பகுதிப் பாடசாலைகளில் சொல்லமுடியாத அளவுக்கு அதிகமாக இருந்தன. குறிப்பாக, வன்னிப் பிரதேசத்தில் கட்டட வசதிகள், தளபாடவசதிகள் என்பன இல்லாமல் மரநிழல்களில்- நிலத்தில் இருந்தே மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்தனர். பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும்கூட கட்டடப்பொருள்கள் வருவதற்கான தடைகள் நீக்கப்பட்டனவே ஒழிய அந்தப் பொருள்களைக் கொண்டுவந்து இங்கு பாடசாலைகளைக் கட்டுவதற்கான ஒதுக்கீடுகளை அரசு செய்யவில்லை.

சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தொண்டு அமைப்புகள், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யுனிசெவ் போன்ற அமைப்புகள் குறிப்பிட்ட அளவு பௌதிக வளங்களை ஏற்படுத்தி வழங்கிவருகின்றன. ஆனால், அரசினால் தமிழர் பகுதிப் பாடசாலைகளில் பெரியளவிலான பௌதிகவள ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை.

போரைக் காரணங்காட்டி எமது பிரதேசங்களுக்கான ஒதுக்கீடுகள் வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டன. அமைதிச் சூழலிலும் அந்த நிலைமை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இது ஒருபுறமிருக்க உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழர் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றுக்குள் இருக்கின்ற எத்தனையோ பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன.

குறிப்பாக, 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற யுத்தத்துக்குப் பிறகு எமது பாடசாலைகள் பலவற்றில் இராணுவத்தினர் முகாம் அமைத்துத் தங்கியிருக்கின்றனர்.

அத்தகைய நீண்டகாலமாக இயங்காமல் இருந்த பாடசாலைகளில் யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி, மெதடிஸ் போன்ற - விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில பாடசாலைகள் இயங்கத் தொடங்கியிருக்கின்றன.

இருந்தாலும் இன்னும் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் சிங்களப் படைகளின் பிடிக்குள் சிக்கி இயங்கமுடியாமல் இருக்கின்றன. எமது பிரதேசத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து கொண்டுசெல்வதற்கு இதுவும் ஒரு முக்கியகாரணமாகும்.

**வன்னியில் நிலைமை மோசம்!**

*கேள்வி:* கடந்த காலங்களில் வன்னிப் பெருநிலப்பரப்பில் கல்விக்கான வசதி வாய்ப்புகள் - வளங்கள் எப்படியிருந்தன?

*பதில்:* இதுவரை நான் கூறிய ஆசிரியர் பற்றாக்குறை, ஏனைய கல்விசார் அதிகாரிகள் பற்றாக்குறை மற்றும் வளப்பற்றாக்குறைகள் என்பன வடக்கு-கிழக்கு பகுதிகள் யாவற்றுக்கும் பொதுவானவை. ஆனால், எங்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதிகளான திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், மட்டக்களப்பு, வன்னி போன்ற பகுதிகளில் இந்தப் பற்றாக்குறைகளும் வசதியீனங்களும் இன்னும் ஏராளம்.

குறிப்பாக, வன்னியில் கடந்த காலங்களில் பாடசாலைகளுக்கு எந்த வசதிகளும் வளங்களும் அரசினால் கிடைக்கவில்லை. இருந்த பாடசாலைகளின் வளங்களும் கூட போரின்போது இராணுவத்தால் அழிக்கப்பட்டே வந்திருக்கின்றன. மாணவர்கள் மரநிழல்களில், வெறும் தரைகளில் இருந்து கல்வி கற்கின்ற அவலநிலை நீண்டகாலமாகத் தொடர்ந்தது.

தமிழர் தாயகப் பகுதிகளில் பொதுவாக ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருகிறது. ஆனால், வன்னியில் ஆங்கில பாடஆசிரியர்கள் இல்லை என்றே கூறலாம்.

**பின்தங்கிய கல்வித்தரம் ஆழிப்பேரலையால் மேலும் பாதிப்பு**

*கேள்வி:* ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தமிழ்ப்பிரதேசங்களில் கல்விச் செயற்பாடுகள் மேலும் சீர்குலைந்தனவே இப்போது நிலைமை எப்படியிருக்கிறது?

*பதில்:* யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பல பாடசாலைகள் அழிவுற்றன. ஏராளமான பாடசாலைகள் அகதிமுகாம்கள் ஆகின. ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டதற்குப் பிறகு பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளையும் சரி அடுத்த கட்ட மனிதாபிமானப் பணிகளையும் சரி அரசு செய்யவில்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற தொண்டு நிறுவனங்கள்தான் அந்தப் பணிகளைச் செய்தன.

இரண்டாம் கட்டப் பணிகளில் மக்களுக்கு இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டது போல பாடசாலைகளும் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்தகைய கொட்டகைகளில் இருந்து கல்விகற்கக் கூடிய சூழ்நிலை இல்லை. வகுப்பறைகளாக தகரக்கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. வெயில் காலத்தில் அவற்றுக்குள் இருந்து கல்வி கற்பது மிகவும் கடினமானதாகும்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 14 பாடசாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றாம் கட்டப் புனர்வாழ்வுப் பணிகளின் போது அந்தப் பாடசாலைகளையும் புனரமைப்பதற்கு உரிய தரவுகளை அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கக்கூடிய தொழில்நுட்பவியலாளர்கள் இங்கில்லை.

இடைத்தங்கல் முகாம்களைப் போல தற்காலிக கொட்டகைகளில் இயங்கிக்கொண்டிருக்கின்ற பாடசாலைகளின் நிலை இன்னும் நீண்டகாலத்துக்கு அப்படியே தொடரும் சாத்தியம் இருக்கிறது. எனவே, அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் பின் தங்கிப் போய்க்கொண்டிருந்த எமது கல்வித்தரம் ஆழிப்பேரலையால் இன்னமும் மோசமடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

*கேள்வி:* ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வியியற்கல்லூரிகள் என்பனவற்றின் ஊடாக ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சிகள் வழங்கக் கூடியதாக இருக்கிறதா?

*பதில்:* தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் செயற்பாடு போதுமானதாக இல்லை.

ஆசிரியர்பயிற்சிக் கலாசாலைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் - அதன் நிர்வகிப்பில்தான் இருக்கின்றன. எனவே, மத்திய அரசில் சரியான தமிழ்மொழிமூல ஆளணி இல்லாததால் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் செயற்பாடுகள் மந்தநிலையில்தான் இருக்கின்றன.

**செவ்வி: அற்புதன்**

அது எமது பிரதேசத்துக்கு மிகவும் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. உளவியல், கல்வி கற்பித்தல் உத்திகள் போன்ற விடயங்கள் கற்பிக்கப்பட்டு வருகிறதே ஒழிய புதிய பாடத்திட்டத்துக்கு ஏற்றாற்போல - கல்விச் சீர்திருத்தத்துக்கு ஏற்றவகையில் போதிய பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. அந்த வகையில் தமிழ் ஆசிரியர்களின் தரம்கூட திட்டமிட்ட முறையில் ஒடுக்கப்பட்டே வருகின்றது.

தேசிய கல்வியியற்கல்லூரிகள் தான் ஓரளவுக்கு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை சிறப்பான முறையில் வழங்கிவருகின்றன. ஆனால், அவற்றில் மிகக் குறைந்தளவானோருக்குத்தான் பயிற்சி வழ்ங்கலாம் நாடுபூராவும் 17 தேசியகல்வியியற்கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், தமிழர்களுக்கென்று ஆக மூன்று கல்லூரிகளே உள்ளன.

வடக்கு-கிழக்கில் உள்ள தேசிய கல்வியற்கல்லூரிகளிலும் போதிய ஆளணியில்லை. ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க அங்கு விரிவுரையாளர்கள் போதியளவில் இல்லாததால் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களே அங்கு சென்று விரிவுரையாளர்களாக கடமையாற்றுகின்றனர். இதனால், ஆசிரியர் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கிறது. அத்துடன், தரமான பயிற்சியை ஆசிரியர்கள் பெறுவதிலும் சிரமம் ஏற்படுகிறது. இத்தகைய தமிழ் மொழிமூல விரிவுரையாளர்களில் 64வீதம் பற்றாக்குறை இருக்கிறது. *(வளரும்)*

# காரைநகரில் செவ்வாயன்று மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

காரைநகர்,ஜூலை24

ஜப்பான் மூளைக்காய்ச்சல் நோய்க்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை காரைநகர்ப் பிரதேசத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது என காரைநகர்ப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் வைத்து இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது எனறும் -

முதற்கட்டமாகத் தடுப்பூசி ஏற்றப்பட்ட அனைத்துக் குழந்தைகளும் இந்தத் தடுப்பூசியையும் ஏற்றிக்கொள்ளவேண்டும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

தரம் ஒன்று தொடக்கம் 4 வரையான பாடசாலை மாணவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளிலேயே தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது.

(எ-73)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 14 | | 24 |
| 03 | | 06 |
| 1930 | | 2005 |



### திருமதி நாகலிங்கம் உமையம்மை

*(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.)*

*"எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்*
*எங்கள் அன்புத் தாயாக- நீங்கள்*
*வரவேண்டும்"*

எங்கள் குடும்ப விளக்காக இருந்து இறைபதம் எய்திய எமது அன்புத் தாயாரின் இறுதிக்கிரியையின்போது அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கலந்துகொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் அன் னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: திருமதி சு.கலைச்செல்வி, -குடும்பத்தினர்.
'கலையகம்', மீசாலை வடக்கு, மீசாலை. (38115)(33-17-18-39)

## சதாசிவம்பிள்ளையின் நூல்களின் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது

வலி.தெற்கு,ஜூலை24

கிறிஸ்தவ பெரியார் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை எழுதிய நூல்களின் தொகுப்பு அவருடைய குடும்பத்தினரால் உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வண.எஸ்.சி.ஆர்னல்ட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு வண.எஸ்.கே.கதிர்காமரின் ஜெப ஆராதனைகளுடன் ஆரம்பமாகியது.ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய 'கருணைக் கடைக்கண் பாரையா காலமிதிலே வந்திங் வாலயத்தினை' ஆகிய இருபாடல்கள் வண. தேவ மித்திர போதகரால் விழா ஆரம்பத்தில் பாடப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை என்ற தலைப்பில் உரையாற்றினார்.கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் குடும்பத்தினரால் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டனர். நூல் தொகுதியின் முதற் பிரதியை எஸ்.எஸ்.ஆர்னல்ட் பெற்றுக்கொண்டார்.

(எ-152)

## வடக்குக்கு சேவை புரிய வாரீர்!

வடக்கில் வறுமையால் வாடும் மக்களைக் கைதூக்கி விடுவதற்கும் வசதிகளின்றித் தவிக்கும் மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் சமூக வேலை அமைப்பொன்றை வடக்கிலும் வடக்குக்கு வெளியேயும் உடனடியாக ஏற்படுத்த வேண்டியுள்ளது. எனவே, கொழும்பிலும் மற்றைய பகுதிகளிலும் வசிக்கும்/தங்கியிருக்கும் சேவை மனப்பான்மை உள்ள அன்பர்களை இதில் சேர்ந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அன்பர்களே, தங்கள் பெயர், முகவரி வடக்கில் தங்கள் சொந்த ஊரின் பெயர் ஆகிய விவரங்களுடன் எம்முடன் கூடிய விரைவில் தொடர்புகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய மார்க்கத்தையும் அறிவிக்கவும்.

**விளம்பர இல. 2658**
C/O உதயன்
யாழ்ப்பாணம்.

(38104)(33-17-18)

## மரண அறிவித்தல்

### திருமதி இரகுநாதன் அருந்தவாஸ்வரி

சங்கரத்தை கதிரேச உடையார் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இ.அருந்தவாஸ்வரி அவர்கள் 22.07.2005 வெள்ளிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரைப்பிள்ளை - செல்லக்கண்மணி தம்பதியினரின் அருமை மகளும் அமரர் இ.இரகுநாதனின் மனைவியும் மற்றும் செல்வி செந்திற்செல்வம் அவர்களின் அருமைத் தாயாரும் ஆவார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஒடிற்றர் அ.தாமோதரம்பிள்ளையின் சகோதரியும் இராசா - சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகளும் அ.சங்கரப்பிள்ளை (புலோலி) தம்பதியினரின் பெறாமகளும் திருமதி சிவபாக்கியம் கனகசபை (மலேசியா), திருமதி சிவஞானவதி முத்துத்தம்பி (வர்த்தலை விளான்), திருமதி செல்வநாயகி பாலரத்தினம் (நீர்வேலி மத்தி), டாக்டர் சச்சிதானந்தம் (உடுவில்), சி.அம்பலவாணர் (மூளாய்றோட், வட் டுக்கோட்டை) மற்றும் மு.ஒப்பிலாமணி (யாழ்ப்பாணம்), திருமதி வே.தங்கரத்தினம் (ஹற்றன்), திருமதி மா.கமலாம்பிகை, திருமதி அ.தையல்நாயகி (மூளாய் றோட், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உடையார்வீடு, சங்கரத்தை இல்லத்தில் நேற்று (23.07.2005) சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(38109)(26)

தகவல்:
*உடையார் வீடு, சங்கரத்தை, வட்டுக்கோட்டை*
*செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்* (மகள் இளைப்பாறிய அதிபர்)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## சர்வதேச சமூகத்தின் முன் அம்பலமாகும் உண்மைகள்

தென் தமிழீழத்தில் - கிழக்கிலங்கையில் - இதுவரை இலங்கை அரசுப் படைகளின் புலனாய்வுப் பிரிவு 'கருணா குழு' என்ற போர்வையில் நடத்திவந்த இருள்யுத்தம் இப்போது பரகசியமாகிவிட்டது.

அரசுப் படைகளின் புலனாய்வுப் பிரிவு அரசுத் தலைமையின் ஆசீர்வாதத்துடனும் - சற்று விரிவாகக் கூறுவதானால் அரசுத் தலைமையின் மறைமுக அனுமதி மற்றும் வழிகாட்டலுடனும் - நடத்திவந்த இந்தச் சதி நாசகார வேலை இனிமேலும் ஒளித்து மறைத்து பேணத்தக்க இரகசிய விடயமல்ல என்பது தெளிவாகிவிட்டது; அப்பட்டமாகிவிட்டது.

இலங்கைக்கு உதவும் நாடுகளினது டோக்கியோ மாநாட்டினதும் இலங்கை சமாதான நடவடிக்கைகளினதும் இணைத்தலைமை அமைப்புகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை கடந்த செவ்வாயன்று இலங்கை விவகாரம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கை, அரசுப் படைகளின் மேற்படி ஒளிவுமறைவு நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தின் முன் அம்பலமாகிவிட்டன என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு தனது துணைப்படைகள் மற்றும் தமிழ்க் குழுக்கள் போன்றவற்றுக்கு வழங்கியுள்ள ஆயுதங்களைக் களைந்து, அவற்றின் மூலம் இடம்பெறக்கூடிய வன்முறைகளைத் தடுத்துநிறுத்த வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் வெளிப்படையாகக் கூறியிருப்பது, அரசுப் படைகளின் ஒளிவுமறைவு நாடகம் சர்வதேச சமூகத்தின் முன்னால் இனிமேலும் எடுபடாது என்பதையே உறுதிப்படுத்தி நிற்கிறது.

கிழக்கில் - தென் தமிழீழத்தில் எந்தெந்தப் படைமுகாமில், எந்தெந்தப் படை அதிகாரிகளின் வழிகாட்டலில், எந்தெந்தக் குழுக்களில், யார், யார் செயற்படுகின்றார்கள்; அவர்கள் புரியும் வன்செயல்கள், திட்டங்கள் எவை என்பன உட்பட சகல விவரங்களையும் கனகச்சிதமாகக் கண்காணிப்புக்குழுவினரிடமும் நோர்வே அனுசரணைத் தரப்பினிடமும் புட்டுப்புட்டு வைத்திருக்கின்றனர் புலிகள்.

இத்தகவலை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனே உதயனுக்கு கடந்த புதனன்று அளித்த விசேட செவ்வியில் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவல்கள் சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாக அம்பலப்படுத்தப்பட்டு விட்டன. அதன் விளைவே இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை.

இதுவரை காலமும் அமெரிக்காவும், இப்போது ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தலைமை வகிக்கும் பிரிட்டனும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகக் குறிப்பிட்டு ஒதுக்கிவந்தன. அவற்றின் அறிக்கைகள் பெரும்பாலும் புலிகளுக்கும் அவர்களது செயற்பாட்டுக்கும் பயங்கரவாத முலாம் பூசி அந்தச் செயற்பாடுகளையும் கண்டிப்பனவாகவே அமைந்திருந்தன. வழமையான இலங்கை அரசாங்கத்தை - ஓர் இறைமையுள்ள அரசை - கௌரவப்படுத்தியே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தின் நிமித்தம் போலும் - இலங்கை அரசு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பட்டும்படாமலும், தொட்டும் தொடாமலும் விமர்சிப்பதாகவே அவற்றின் அறிக்கைகள், கருத்துகள் வெளியிடப்பட்டு வந்தன.

ஆனால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை நாடு என்ற கோதாவில் பிரிட்டன் ஆகியவை ஜப்பான், நோர்வே ஆகியவற்றுடன்சேர்ந்து இலங்கை அமைதி முயற்சிகளுக்கான இணைத் தலைமை என்ற அந்தஸ்தை - பொறுப்பை - சுயமாகவே தமக்குத் தாமே ஏற்றுக்கொண்ட பின்னர், கடந்த செவ்வாயன்று வெளியிட்ட அறிக்கையில் முன்னர் போல் அவை நடந்து கொள்ளவில்லை; இலங்கை அரசு சம்பந்தப்பட்ட விடயத்தை அமுக்கி - அமர்த்தி - வாசிக்கவில்லை.

புலிகள் தரப்பில் கொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்று புலிகளை ஒரு வரியில் குறிப்பிட்ட இந்த நாடுகள், இலங்கை அரசு தொடர்பாக வெளியிட்ட கருத்து படுசூடானதாகவே அமைந்திருந்தது.

தென்னிலங்கைத் தரப்பு எதிர்பாராத திடீர் மாற்றம் இது. அதனால், இந்த அறிக்கை அரசுத் தரப்புக்கு ஓர் அதிரடித் தாக்குதல் என்று கூறினாலும் மிகையாகாது.

துணைப் படைகள், தமிழ்க் குழுக்கள் போன்றவற்றை மறைமுகமாக இயக்கி, அவற்றின் மூலம் புலிகள் மீது தாக்குதல்களை நடத்தி, அவர்களை அரசுத் தரப்பு குழப்பியமையே இன்றைய பதற்ற - நெருக்கடி - சூழலுக்குக் காரணம் என்ற உண்மை சர்வதேச சமூகத்திற்கு மெல்ல மெல்லப் புரியத் தொடங்கிவிட்டது. இதனை அரசுத் தரப்பும் நன்கு உணர்ந்துகொண்டுவிட்டது.

இந்தப் பின்னணியில் யுத்தநிறுத்தம் முறிந்து, மீண்டும் போர் வெடிக்குமானால், அதற்கான குற்றச்சாட்டைப் புலிகள் மீது சுமத்தமுடியாது; அது அரசுத் தரப்பின் மீதே வீழும் என்ற யதார்த்தத்தை அரசுத் தரப்பு நன்கு புரிந்துகொண்டதால்தான், எந்த நகர்வை மேற்கொண்டாவது யுத்தம் வெடிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற கடைசிநேர சுறுசுறுப்பு முயற்சியில் - ஓட்டத்தில் - அது இறங்கியிருக்கிறது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தனி மனிதப் பிறழ்வுகளை - காட்டிக்கொடுப்புக் கும்பல்களை - கருவியாக வைத்துக்கொண்டு, யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு முரணாகத் தென் தமிழீழத்தில் தான் புரிந்துவரும் மறைமுக வன்முறைப் போக்கை அரசுத் தரப்பும், அதன் படைகளும், அதன் புலனாய்வுப் பிரிவும் முற்றாகக் கைவிட்டு, அந்தக் குழுக்களைத் தமிழர் தாயகத்திலிருந்து மூடை, முடிச்சுகளோடு குண்டுக் கட்டாகக் கட்டி அப்புறப்படுத்தும் வரை அரசுத் தரப்புடன் இறுக்கமான போக்கை - கடும் நிலைப்பாட்டை - எடுத்தே தீருவது என்று கங்கணம் கட்டி நிற்கின்றது புலிகளின் தலைமை.

அதன் சீற்றத்தின் ஆழ, அகல, அர்த்த பரிமாணத்தை - பெறுபேற்றை - அடுத்துவரும் நாள்கள் அல்லது வாரங்கள் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

# ஜி.சீ.ஈ. சாதாரணதர வினாப்பத்திர கட்டமைப்பில் விரைவில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

ஜி.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சை வினாப் பத்திரங்களின் கட்டமைப்பு மற்றும் தயாரிப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு 2007ஆம் ஆண்டு முதல் அது நடைமுறைப்படுத்தப்படும்.

வினாப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்வது தொடர்பாகக்கல்வி அமைச்சின் செயலர் கலாநிதி தாரா டி மெல், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்குச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுவிடயமாக அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

பழைய வினாப்பத்திர அமைப்பில் வினாப் பத்திரத் தயாரிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், மாணவர்கள் விடையளிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் என்பவற்றைக் குறைத்துக் கொள்ளும் வகையில் பரீட்சை வினாத்தாள்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போதுள்ள பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது. வினாப் பத்திரக் கட்டமைப்பில் மட்டும் மாற்றங்கள் செய்யப்படும்.

முதலில் மொழியும் இலக்கியமும், கணிதம் ஆகிய பாடங்களிலும் இரண்டாவதாக சமயம், ஆங்கிலமொழி, விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், சமூகக் கல்வி மற்றும் வரலாறு ஆகிய பாடங்களிலும் மாற்றங்கள் செய்யப்படும்.

தற்போது தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப் பத்திரம் பகுதிI பகுதிII பகுதிIII என மூன்று கட்டமைப்புகளில், 200 புள்ளிகள் வழங்கப்பட்டு, அதனை இரண்டாகப் பிரித்து இறுதிப் புள்ளி வழங்கப்படுகிறது. இப்பரீட்சை நேரம் 6 மணித்தியாலங்கள். புதிய நடைமுறையின்படி இந்தப் பரீட்சை நேரம் 4மணித்தியாலமாக மாற்றப்பட்டு வினாப்பத்திரம் பகுதிI பகுதிII எனப் பிரிக்கப்படும். பகுதிIவினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகளும் பகுதிII வினாப்பத்திரத்திற்கு 60 புள்ளிகளுமாக மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

கணித பாடத்திற்கான வினாப் பத்திரங்கள் 2 மணித்தியாலங்கள் வீதம் இருக்கும். முதலாவது வினாப் பத்திரத்திற்கு 40 புள்ளியும், இரண்டாவது வினாப் பத்திரத்திற்கு 60 புள்ளிகள் வழங்கப்படும்.

இரண்டாவது கட்டமாக மாற்றங்கள் மேற் கொள்ளப்படும் பாடங்களான சமயம், ஆங்கிலம் மொழி, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சமூகக்கல்வி மற் றும் வரலாறு வினாப்பத்திரங்களில் பகுதிI வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டிருக்கும். இதற்கு ஒரு மணி நேரம் வழங்கப்படும். பகுதி IIவினாப்பத்திரம் 2மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும்.

இந்த மாற்றங்கள் மூலம் வினாப் பத்திரங்களைத் தயாரிப்பது, மதிப்பீடுகள் மேற்கொள்வது. மாணவர்களிற்கு விடையளிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-11-204-203)

## தொலைபேசி இணைப்புக்காகக் காத்திருப்போரின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்து


கொக்குவில்,ஜூலை24

தொலைபேசி இணைப்புக்காக விண்ணப்பித்து இதுவரை இணைப்புக் கிடைக்கப்பெறாதவர்களின் பட்டியலை அனுப்பிவைக்குமாறு தபால், தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வடக்கு - கிழக்கு மாவட்ட அரச அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இது விடயமாக தபால், தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் வடக்கு - கிழக்கு மாவட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தபால், தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் அண்மையில் வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அச்சமயம் வடக்கு - கிழக்கைச்சேர்ந்த மாவட்டங்களில் தொலைபேசி இணைப்புகளுக்காகப் பெருமளவான மக்கள் விண்ணப்பித்துவிட்டு நீண்டகாலமாகக் காத்திருகின்றனர் என்று- நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரிடம் முறையிட்டனர். இதனையடுத்து வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் தொலைபேசி இணைப்புக்காக விண்ணப்பித்துவிட்டு காத்திருப்பவர்களின் பட்டியலை அனுப்பிவைக்குமாறு அரச அதிபர்களைக் கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டது - என்று அதில் உள்ளது.

எனவே, தொலைபேசி நிறுவனங்களில் தொலைபேசி இணைப்புக்காக விண்ணப்பித்துள்ளவர் தமது கிராம அலுவலர் மூலமாக பிரதேச செயலர்களிடம் பெயர், முகவரி, விண்ணப்ப இலக்கம் போன்ற விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் - என்றும் கூறப்பட்டது. (எ-76)



கரவெட்டி, கலிகைச் சந்தியில் நேற்றுமுன்தினம் மணல் ஏற்றி வந்த லொறியின் அச்சு உடைந்து லொறி தடம்புரண்டது அதில் நசியுண்டு இறந்த இளைஞனின் சடலத்தை படத்தில் காணலாம்.
(படம்:சி.சுந்தரலிங்கம்)

## கட்டாக்காலிகளைப் பிடிக்கவேண்டாம்; தென்மராட்சியில் படையினர் அறிவுறுத்து

தென்மராட்சி தெற்குப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலையும் மாடுகளைப் பிடிக்கவேண்டாம் அப்பகுதி இரா ணுவ அதிகாரி உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மறவன்புலா, கைதடி - நாவற்குழி, கோயிலாக்கண்டி, தனங்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களில் பலர் இன்னமும் தமது இருப்பிடங்களில் மீளக் குடியமராததால் அந்தப் பகுதிக் குடும்பங்களின் வளர்ப்பு மாடுகள் கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்றன.

இதனையடுத்து இந்த மாடுகளை தற்போது மீளக்குடியமர்ந்த சிலர் பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்துவருகின்றனர் என்றும் -

எனவே, சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களும் மீளக்குடியமரும்வரை கட்டாக்காலியாக அலையும் மாடுகளைப் பிடிக்க அனுமதிக்க வேண்டாமென்றும் - மறவன்புலோ விவசாய சம்மேளனத்தினர் இராணுவ அதிகாரியிடம் முறையிட்டிருந்தனர். இதற்கிடையில் - இதுவிடயமாக நடவடிக்கை எடுத்த படையினர், கட்டாக்காலியாக அலையும் மாடுகளை பிடிக்கக்கூடாது என துண்டுப்பிரசுரம் மூலம் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (எ-31-117)

### உதயவாக்கு

உடல்நலம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும் நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே இருக்கும்.
- டுமாஸ் .

### நாளை

ஆடி 09
திங்கட்கிழமை
25.07.2005
திதி: சதுர்த்தி
பிற்பகல் 08.12 வரை
நட்சத்திரம் : பூரட்டாதி
முன் இரவு : 08.38 வரை
சுபநேரம்: 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02
(யாவும் பழைய நேரப்படி)

## காரைநகர் பிரதேச செயலகத்துக்கு நிரந்தர உதவி அரச அதிபர் தேவை

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

காரைநகர்,ஜூலை24

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனைக்கு நிரந்தரமாக உதவி அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் உதவி அரச அதிபர் பணிமனையின் நிதி உதவியாளருமான வே.குமாரசாமி கோரியுள்ளார்.

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் இறுதியாக நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரும், காரைநகருக்கான பதில் உதவி அரச அதிபருமான க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்காளன எம். கே.சிவாஜிலிங்கம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், பிரதிநிதி கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வே.குமார சாமி தமது உரையில்:-

காரைநகருக்கு நிரந்தரமாக உதவி அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படாமையால் இங்கு வசிக்கும் பொதுமக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அத்துடன் அரச வர்த்தமானிமூலம் அறிவிக்கப்படாத பிரதேச செயலகமாக காரைநகர் உள்ளது. இதனால், எமது பணிமனைக்கு அரச வர்த்தமானி சுற்றறிக்கைகள் எதுவும் அனுப்பிவைக்கப்படுவதில்லை. இதனால் இங்கு பணிபுரியும் அலுவலர்களுக்கு நன்மைதரக் கூடிய அறிவுறுத்தல்கள் கிடைப்பதில்லை- என்றார்.

இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

* காரைநகர் சுற்றயல் கூறு வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் நோயாளர்களை தனியார் மருந்தகங்களில் மருந்துவகைகளை கொள்வனவு செய்யுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.
* காரைநகர் பிரதேசத்திற்கான ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அதனை நிறுவுவதற்கான நிலம் கிடைக்கவில்லை. எனவே அதனை வழங்க பொது மக்கள் முன்வரவேண்டும்.

(எ-73)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய மிருதங்கம், தபேலா, டோல்க்கி போன்றவை விற்பனைக்கும் உண்டு. ஓடருக்கு குறிப்பிட்ட நாளில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590382. (38073)

## காணி விற்பனைக்கு

நெல்லியடிச் சந்திக்கு அருகில் தடங்கன் புளியடி முருகன் கோயிலுக்கு முன்பாக உள்ள 1¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 0777664946.(37937)

நல்லூர் கோயில் வீதிக்கும் இராசாவின் தோட்ட வீதிக்கும் இடைப்பட்ட றோட்டில் 2 பரப்புக் காணி மட்டும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 011-2598122. (சி-44300)

பருத்தித்துறை வீதி, வீரமாகாளியம்மன் கோயிலுக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 4 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (காணியைச் சுற்றி மதில் உள்ளது) தொடர்பு: க.சிறிதரன் T.P.: 021 4591966. (38098)

வவுனியா, தோணிக்கல் அண்ணாவீதியில் தபால் நிலையம், கோயில், பஸ் வசதிகளுள்ள நல்ல அமைதியான சூழலில் பயன்தரும் தென்னைகளுள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கவிதா T.P.: 024 2222774, 077 3164424 (வைரவப் புளியங்குளத்தில் ஒரு பரப்பு விலை 40 லட்சம் அதிலிருந்து 1½ கி.மீ தூரத்திலுள்ள இந்த உறுதிக் காணி பரப்பு 10லட்சம் மட்டுமே). (38063)

சாவகச்சேரி நகரசபை, சிவன்கோயில் வீதியில் (ஏழு) 7 பரப்பு (இரண்டு துண்டுகள்) காணி விற்பனைக்குண்டு. (A -9 பாதையிலிருந்து 100 யார் உள்ளே). விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0779184574 (37980)

## அலுமாரி விற்பனைக்கு

4'x 8' அளவு உள்ள கடைப் பாவனைக்குரிய அலுமினியப் பிட்டிங் அலுமாரி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 86, பொற்பதி வீதி, கொக்குவில்.
**T.P.: 077 6203797.** (38077)

## நாய்குட்டிகள்விற்பனைக்கு

காவலுக்குரிய **Great Dane** நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38051)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

1,2, 3 மாதம் நிரம்பிய கலப்பின பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒரு நாள் கலப்பினக் குஞ்சுகளையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ச.ஜெகன், நெசவுசாலை ஒழுங்கை, கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில். (38043)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் 1 **Kg** 160/-. சுத்தம் செய்தது 240/-. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.கல்பேட் மற்றும் புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: **New R.S.K Farm,** மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். **New R.S.K Farm,** பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (37663)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன் கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (38056)

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (**Electronic** நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (38050)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள் (ரூபா 40) பேட்டுக் குஞ்சுகள் 25-07-2005 திங்கட்கிழமை பிற்பகல் முதல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (37948)

## வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும். தொடர்பு: **T.P.**:0114613157 (37979)

பண்டத்தரிப்பு சந்தைக்கு அருகில் 100 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக் காணியில் 3 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: **A.B.** துரையப்பா, சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. **T.P.**:077 6271361 (38082)

## வீடு வாடகைக்கு

கொக்குவில், பிரம்படி ஒழுங்கை / மில் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியில் 4 அறைகளுடன் அண்மையில் கட்டப்பட்ட கார் தரிப்பிடத்திற்கான இடவசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும் (உடனடியாகக் குடியிருக்கக்கூடிய வீடு). தொடர்பு: **T.P.**: 0773151641 (38015)

திருநெல்வேலி, சைவப் பாடசாலை வீதி, வைரவர் கோயின் ஓரமாக அமைந்துள்ள வீட்டில் மேல்மாடி சகல வசதிகளுடன் வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது. விரும்புபவர்கள் 11/5, ஸ்ரான்லி வீதியிலுள்ள காயத்திரி இரும்பு விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும். (38084)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகர் எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்று தங்குவதற்கு தனியாகவோ இணைந்ததாகவோ வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:077 3146042. (சி-44294)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் உள்ள வீட்டிற்கு சிறு குழந்தைகளை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 077 6745864, 077-6226360. (38094)

## மணமகன்கள் தேவை

1973இல் பிறந்த, லண்டன் **P.R** உடைய, கணக்காளர், கிரகபாவம் 5, 1979இல் பிறந்த (பிரான்ஸ்) **P.R.** உடைய, மூல நட்சத்திரம் உடையதும், 1981இல் பிறந்த (கனடா) **P.R.** கிரகபாவம் 28, மூல நட்சத்திரம் உடையவர்களுமான மணப்பெண்களுக்கு தராதரமுள்ள மணமகன்கள் தேவை. ஜாதகம், முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு வி.இல.2650, மே/பா உதயன். (38022)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 29 வயது, திருவாதிரை நட்சத்திரம், 16½ பாவம், 5'4'' உயரமான மணமகனுக்கும் சதய நட்சத்திரம், 4ஆம் பாதம், 5'2'' உயரம், தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கும் 5'3'' உயரம், சதய நட்சத்திரம், 2ஆம் பாதம், உப அஞ்சலதிபர் மணமகனுக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: தொலைபேசி: 071 4841069, 077 6059585. (36516)

## திருமண சேவை

ஐந்து வயது வித்தியாசத்தில் பொருந்தக் கூடிய மணமகளின் சாதகக் குறிப்பைத் தேடியா அலைச்சல்? பதினெட்டு முதல் ஐம்பத்திரண்டு வரையான நூற்றுக்கணக்கான மணமகன்மாரின் சாதகக் குறிப்புக்களுள் மனம் விரும்பும் மணமகளின் சாதகக் குறிப்பைச் சுகமாகத் தெரிவுசெய்யலாம். முன்னேற்பாட்டு ஒழுங்கு முறையில் ' சுய தெரிவுமுறை' முன்னோடி, பிரபல திருமணப் பொருத்துநர் வேலமுதனை சந்தியுங்கள்! சந்திப்பு விவரங்களைத் கிழமை நாள்களில் மாலை 4.30 மணிக்கு மேல். வேலமுதனின் நேரடித் தொலைபேசி 2360488 இல் விசாரித்தறிக!. (சி-44299)

## A/L பௌதிகவியல்/ இணைந்த கணிதம்

பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத் திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். ஏராளமான M.C.Q. விவரமான விடைகளுடன்

**T.P.No:` `077-6648751**
**R.பாலசுப்பிரமணியம்**
B.Sc.(Cey.) Dip.in Ed.
**17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(37813)(21

## தேவை

**நியூ றோயல் ஐஸ் இன்டஸ்ரீஸ்**
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக) குளிர் கட்டி உற்பத்தி நிலையத்திற்கு இரவு நேரத்தில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. காலை 7 மணியிலிருந்து இரவு 9.மணிவரையும் நேரில் தொடர்புகொள்ளவும். (38099) (21-11-17)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து 1975ஆம் ஆண்டு, கிரகபாவம் 80, 8இல் செவ்வாய், 5½ அடி உயரமுள்ள அழகிய, தொழிலிலுள்ள பெண்ணுக்கு யாழ்.இந்து கௌரவ குடும்பத்து உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தொழில் புரியும் மணமகன் தேவை. முழு விவரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2651, மே/பா உதயன். (38023)

1969 ஆம் ஆண்டில் பிறந்த, கிரகபாவம் இருபது உள்ள அழகிய, சிறப்பான, சீதனமுள்ள தொழிலற்ற பெண்ணிற்கு செவ்வாயற்ற, ஏதாவது சொந்தத்தொழிலுள்ள யாழ்.இந்து கௌரவ குடும்பத்து மணமகன் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இலக்கம் 2648, மே/பா உதயன். (38020)

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1970, கேட்டை, விருட்சிக ராசி, 7இல் செவ்வாய் 71 கிரகபாவம், **A/L, Dip. in Computer Engineering and Programming** படித்த நிறுவன இயக்குநர் மணமகளுக்கு படித்த அரச பணியில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: சிவாலயா, 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (38072)

யாழ்.வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம் 2ஆம் பாதம், கிரகபாவம் 64, செவ்வாய் தோஷமற்ற, **A/L** படித்த மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: **T.P.**: 226- 3730. (38058)

## தவறிவிட்டது

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை என்ற முகவரியை உடைய தில்லையம்பலம் சத்தியபாமா என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டையும் ஒரு தொகைப் பணமும் புன்னாலைக் கட்டுவனுக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். குப்பிளான் கிழக்கு, வடக்கு குருக்கள் ஒழுங்கை, ஏழாலை. (38068)

கேக்கன் கோட்டம், அல்வாய் மேற்கு அல்வாயைச் சேர்ந்தவரான தனபாலசிங்கம் துரைராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.722841301V), விசேட அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் ( J 009022124), இன்சூரன்ஸ், ரக்ஸ் அடங்கிய பேர்ஸ் கடந்த 20.07.2005 புதன் கிழமையன்று அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடனோ **T.P.**: 0776617768 தொலைபேசியுடனோ தொடர்புகொள்ளவும். (38071)

## தேவை

**எமது வினஸ் பாமுக்கு**
- வேலையாள்கள் (ஆண், பெண் இருபாலாரும்)
- பெண் காசாளர் ஆபீஸோர் உடன் தேவை

தொடர்புகளுக்கு: **வினஸ் பாம்**
**உஆம் குறுக்கு ஒழுங்கை**
(நல்லூர் AGA Office முன்பாக)
(38076) **பலாலி வீதி, திருநெல்வேலி.** (21-11-17)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**
**10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.**

## யப்பான் சைக்கிள்

*1) கியர்,ஒட்டோமெற்றிக் லைட், கப்பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன் பல மொடல்களில் யப்பான் சைக்கிள்.*
*2) யாழில் யப்பான் சைக்கிள் விற்பனையாளர் நாம் மட்டுமே!*
*3) வதந்திகளை நம்பாதீர் சகல உதிரிப்பாகங்களும் எம்மிடமுண்டு.*
*4) சுலபமாக ஓடக்கூடியதும் நீண்ட காலம் செலவின்றிப் பாவிக்கக் கூடியதுமான சைக்கிள்*
*5) வியாபாரிகளுக்கும் மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கும் விசேட விலைக்கழிவு உண்டு.*
*6)* Sony Vedio Camera, *யப்பான் பாஸ்கட்டுகளும் விற்பனைக்குண்டு.*



**சித்திவிநாயகர் யப்பான் சைக்கிள் (இ) பஜார்**
*இல.631, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்*
*(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்).* (38103)

## மணமகள் தேவை

1965 ஆம் ஆண்டில் பிறந்த, கிரக பாவம் 45 உள்ள வர்த்தகர் மணமகனுக்கும், 1968 **Electronic**, வர்த்தகர் கிரகபாவம் 20 உள்ள மண மகனுக்கும் (சகோதரர்கள்) அழகான, தொழிலுள்ள மணப்பெண்கள் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2649, மே/பா உதயன். (38201)

1973 ஆம் ஆண்டில் பிறந்த, வங்கி உத்தியோகத்தர், எட்டில் செவ்வாயும் கிரகபாவம் இருபத்தெட்டும் உள்ள மணமகனுக்கு அரச தொழிலுள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதகம், முழு விவரத்துடன் தொடர்பு: கொள்ளவும் தொடர்பு: விளம்பர இல. 2652, மே/பா உதயன். (38024)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து, 1975ஆம் ஆண்டு, கிரகபாவம் - 17, பிரதேச செயலர் பதவியில் உள்ளவருக்கு படித்த குடும்பத்திலிருந்து தொழிலில் உள்ள அழகான மணமகள் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். மே/பா உதயன் விள.இல.2653. (38025)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 28 வயது, 5'6'' உயரம் புனர்பூசம் கிரகபாவம் குறைந்தது அரச உத்தியோக பட்டதாரி மணமகனுக்குப் பெற்றோர் பொருத்தமான மணமகளைத் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2655, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38047)

1973, இந்து சமயம் கிரகபாவம் சங்கியை 30, செவ்வாய் தோசமற்ற, புனர்பூசம் 4ஆம் பாதம், 5' 4'' உயரம் கனடாவில் நிரந்தர குடியுரிமை உள்ள கணனி பொறியியலாளராக பணிபுரிபவருக்கும், 1970 இந்து சமயம் கிரகபாவ சங்கியை 4½ மூல நட்சத்திரம், 5'6'' உயரம் கொழும்பில் பங்குதொழில் புரிபவருக்கும் பொருத்தமான மணப்பெண்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: ஆனந்தி திருமண சேவை இல.01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (38097)

ஐரோப்பாவில் பிரஜாவுரிமை பெற்றவருக்கு (திருமணமானவர்), 40 வயதிற்கு உட்பட்ட கௌரவ குடும்பத்து மிக நிறமான, அழகான நற்குணமுள்ள மணப்பெண் தேவை. புகைப்படத்துடனும் விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு விளம்பர இல. 2657, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38101)

## தையல் வேலைக்கு ஆள் தேவை

பெண்களின் ஆடைகள் தைப்பதற்கு அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
324, பலாலி வீதி (MCS நிறுவனத்திற்கு கீழ்) திருநெல்வேலி

## விற்பனைக்கு

16-ஐ தொடரிலக்கமுடைய நிசான்சனி (வெள்ளைநிறம்) கார் (Full Obtion) குளிரூட்டப்பட்டது. உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077-6043610, 077-6152992. (38110)

## குடிதண்ணீர் வழங்கலுக்கு நிதி ஒதுக்கீடு

நுணாவில் கிழக்கு சர்வசாதனா சனசமூக நிலையத்திற்கு கிணறு மற்றும் குடிதண்ணீர் விநியோகத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.


யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா இவ்வருட பன்முகப் படுத்தப் பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் மேற்படி வேலைத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளதாக யாழ். செயல திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (எ-117)

# தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் நாடுகள் மாற்றுக்கருத்துக்களை நசுக்கிவிடக்கூடாது

தீவிரவாதத்தை எதிர்த்துப்போராடுகிறோம் என்பதற்காக ஜனநாயகம் பேசும் நாடுகள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தலாகாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை கூறிவிட்டுத் திரும்பிவந்துள்ளார்.

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் மத்தியில் மன்மோகன் சிங் உரை

நாங்கள்தான் உலகத்திலேயே பெரிய ஜனநாயகவாதிகள், எங்களுக்கு எங்கேயோ இருந்துவந்து இந்தியப் பிரதமர் ஆலோசனை கூறத்தேவையில்லை என்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்ட உறுப்பினர்கள் எவரும் கூக்குரலிடவில்லை. இந்தியப் பிரதமரின் கருத்துக்களை மிகுந்த கௌரவத்துடன் செவிமடுத்துள்ளார்கள்.



அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் காங்கிரஸ் சபையின் கூட்டுக் கூட்டத்தில் மன்மோகன் உரைநிகழ்த்துகிறார்.

அரசு விருந்தாளிக்குரிய சகல விதமான மரியாதைகளோடும் அமெரிக்காவில் சிங் வரவேற்கப்பட்டுள்ளார். 2001ஆம் ஆண்டு ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அதிபராகப் பொறுப்பேற்றதன் பின்னர் காங்கிரஸ் சபையில் உரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்ட மிகச் சில ராஜதந்திர பிரமுகர்களில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் ஒருவர் என்ற கௌரவத்தைப் பெற்றுள்ளார். உலகப் பயங்கரவாதம் தொடர்பாக இந்தியா,அமெரிக்காவுடன் கொண்டுள்ள மிக முக்கிய பங்காளித்துவமான அக்கறையே இதற்குக் காரணம் என்று நோக்கர்கள் கருதுகிறார்கள்.

பயங்கரவாத அச்சுறுத்தல் இருந்தபோதிலும் ஜனநாயக நாடுகள் எதிர்க்கருத்துகளுக்கு இடந்தரவேண்டும். மாறுபட்ட கருத்துகளை வெளியிடுவதற்குச் சட்டபூர்வமான வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுப்பதை ஜனநாயக நாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டும் என்று சிங் காங்கிரஸ் சபையினரிடம் கூறினார்.

எதிர்க்கருத்துகளை வெளியிடுவதற்கும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். ஆனால், இந்த ஒரு காரணத்துக்காகப் பயங்கரவாதம் தொடர்பாக மென்மையாக இருந்துவிடமுடியாது என்று இந்தியப் பிரதமர் கூறியபோது அமெரிக்கக் காங்கிரஸ் சபையினர் பெரும் எடுப்பில் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள்.

இஸ்லாமியத் தீவிரவாதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாதத்தை உலகின் மிகப் பழைமை வாய்ந்த ஜனநாயக நாடுகளான அமெரிக்காவும் இந்தியாவும் எதிர்கொண்டு வருகின்றன. 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து அமெரிக்கா உலகப் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரை ஆரம்பித்தது. அதேசமயம், பிரிக்கப்பட்ட காஷ்மீர் பிராந்தியத்தில் இஸ்லாமிய அடிப்படையிலான தீவிரவாதத்தை இந்தியா எதிர்கொண்டு வருகின்றது. 1989ஆம் ஆண்டிலிருந்து பத்தாயிரக் கணக்கான மக்கள் இதில் பலியாகியுள்ளனர் என்று சிங் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை இந்தியப் பிரதமரை வாஷிங்ரனில் வரவேற்றபோது இரு நாடுகளுக்குமிடையில் "புதிய உலகப் பங்காளித்துவம்" ஒன்று உருவாகியிருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறினார்.

மக்கள் தேவைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கு இரு நாடுகளும் ஒத்துழைக்கவிருப்பதுடன் ஜனநாயகத்தை மேம்படுத்தவும் எயிட்ஸ் நோயையும் பயங்கரவாதத்தையும் முறியடிக்கவும் இருநாடுகளும் ஒத்துழைக்கவிருப்பதாகப் புஷ் கூறினார்.

சிவில் அணு சக்தித் தொழில்நுட்பம் தொடர்பாக அமெரிக்காவும் நேசநாடுகளும் இந்தியாமீது விதித்திருந்த தடையை நீக்கும்படி காங்கிரஸ் சபையையும் ஏற்ற நாடுகளையும் கேட்டுக்கொள்ளப்போவதாகப் புஷ் கூறினார்.

அணுசக்திப் பரவல் விடயத்தில் இந்தியாவின் செயற்பாடுகள் நம்பகமாகவே இருப்பதாகப் புஷ் கருதினார்.

### பொறுப்புள்ள அணு ஆயுத நாடு

இது பற்றி சிங் காங்கிரஸ் சபை உறுப்பினர்களிடம் கூறுகையில், இந்தியா ஒரு பொறுப்புள்ள அணு ஆயுத நாடு. எனவே, சிவில் மற்றும் கேந்திரத் துறைகளில் தேர்ச்சி பெற்ற தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறோம் என்ற பொறுப்புணர்ச்சியில் எப்பொழுதுமே மிகக் கவனமாக இருந்துவருகின்றோம் - என்றார்.

என்றாலும், இந்தியாவை ஒரு வளரும் நாடாகவும் சீனாவுக்கு மாற்றீடான ஒரு சக்தியாகவும் புஷ் நிர்வாகம் அங்கீகரிப்பதைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் விரும்பவில்லை. இந்தக் கொள்கை நகர்வை எதிர்க்கப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அணுவிசைத் தொழில்நுட்பத்தை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துவதில் இந்தியாவுக்கு உதவ அமெரிக்கா ஒப்புக்கொண்டிருக்கிறது. அத்தோடு, இந்தியாவின் எண்ணெய், எரிவாயு வளத்தையும் முழுமையாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். அத்துறையிலும் அமெரிக்கா எமக்கு உதவமுடியும் என்று சிங் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

இந்தியாவின் விசைத் தேவை அதிகரித்து வருகிறது. அத்தேவையை நிறைவேற்ற விசைத்துறையில் அதிகளவில் முதலீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

புதிதாக உருவாகும் ஜனநாயக நாடுகளில் தேர்தல் அமைப்பு, நாடாளுமன்றம், நீதி அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றைப் பலப்படுத்த உதவி செய்ய வேண்டும் என்பதில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், நானும் ஒத்தகருத்துக் கொண்டுள்ளோம் - என்றார் சிங்.

பிரதமர் மன்மோகன்சிங் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், இந்தியாவின் பொருளாதாரத்தை விரிவாக்க சீர்திருத்தங்களைக் கொண்டுவரப்போவதாகவும் பயங்கரவாதத்தை எதிர்ப்பதிலும் ஜனநாயகத்தை முன்னேற்றுவதிலும் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கப்போவதாகவும் அறிவித்தபோது உறுப்பினர்கள் நீண்டநேரம் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

* * *

## உலக வலம்

மேனா

## பிரி. இஸ்லாமியத் தலைவர்களுடன் பிரதமர் பிளேயர் மாநாடு

இங்கிலாந்தில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ரொனி பிளேயருடன் இஸ்லாமியத் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது பற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

சிரேஷ்ட இமாம்கள், முஸ்லிம் அரசியல்வாதிகள், பிரிட்டனிலுள்ள முஸ்லிம் சபையின் பிரதிநிதிகள் முதலியோர் பிரதமரின் டௌனிங் ஸ்ட்ரீட் அலுவலகத்துக்குச் சென்று சுமார் ஒன்றரை மணிநேரம் ஆலோசனை நடத்தினார்கள்.

முஸ்லிம் தலைவர்களும் அரசும் சேர்ந்து தீவிரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகச் செயற்படையொன்றை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மாநாட்டுக்குப் பிறகு பிரதமர் அறிவித்தார்.

ஆனால், தீவிர முஸ்லிம் தலைவர்கள் இந்த மாநாடு ஓர் ஏமாற்று வேலை என்று கண்டித்தார்கள்.

எல்லாவிதத்திலும் குற்றத்தை இஸ்லாம் மீதும், முஸ்லிம் தலைமைத்துவம் மீதும் சுமத்துவதற்கான முயற்சியே எடுக்கப்பட்டு வருகின்றது என்று பிரிட்டனில் அதிகம் விற்பனையாகும் முஸ்லிம் நியூஸ் பத்திரிகையின் ஆசிரியர் கூறினார்.

ஜூலை 7ஆம் திகதி லண்டனில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் பிரிட்டிஷ் பிரஜைகளான முஸ்லிம்களால்தான் நடத்தப்பட்டுள்ளது, வெளிநாட்டவர்களால் அல்ல என்பது பிரிட்டனில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் அதிர்ச்சி அலைகளை வெளிப்படுத்தியுள்ளது. பிரிட்டனில் சுமார் 10 லட்சத்து 60 ஆயிரம் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பாகிஸ்தான், இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

### இஸ்லாத்துக்கு மாறான செயல்

அண்மையில் லண்டன் மாநகரில் இடம்பெற்றதைப் போன்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் யாவும் இஸ்லாத்துக்கு முரணானவை. இஸ்லாமிய சமயத்தின் பேரால் நடத்தப்படும் இம்மாதிரியான தாக்குதல்கள் சமயத்தின் விழுமியங்களுக்கு மாறானவை.

இவ்வாறு கடந்தவாரம் லண்டனில் கூடிய இஸ்லாமியத் தலைவர்கள் அறிவித்துள்ளார்கள். கடந்தவாரம் லண்டனில் கூடிய பிரிட்டிஷ் - முஸ்லிம் அமைப்புக்களின் தலைவர்கள் ஜூலை 7ஆம் திகதி லண்டனில் 55பேர் வரை கொல்லப்பட்ட பயங்கரவாதக் குண்டு தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். இத்தாக்குதலுக்குக் காரணமாய் இருந்தவர்கள் தியாகிகள் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றும் அத்தலைவர்கள் அறிவித்துள்ளார்கள்.

உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம் சமூகங்களின் சார்பில் லண்டன் சம்பவத்தைக் கண்டித்துள்ள அத்தலைவர்கள், அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்கள்.


லீசெஸ்டர் மத்திய மசூதியின் இமாமாகிய முகம்மத் ஷாகிட் றெஸா இஸ்லாமியத் தலைவர்களின் சார்பில் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

இம்மாதிரியான நடவடிக்கைகளை நாங்கள் முழுமையான குற்றச்செயல்களாக - இஸ்லாத்துக்குமாறான செயல்களாக - கணிக்கின்றோம். இவைகளுக்கு இஸ்லாத்தில் முற்றிலும் அங்கீகாரம் இல்லை என்று உறுதியாக நம்புகின்றோம்.

இம்மாதிரி துர்செயலுக்கு உன்னதமான எமது சமயத்தில் எந்தவிதத்திலும் நியாயம் கற்பிப்பதற்கு இடமே இல்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரான்ஸில் மார்சீலஸ் அல் - இஸ்லாஹ் மசூதியின் தலைவர் அப்தெல்லி புவாலியா விடுத்த அறிக்கையில், குண்டுதாரிகளின் சமயத்தை அழுத்திக் கூறுவதன் மூலம் மேற்குலக ஊடகங்கள் அராபியர்கள் - இஸ்லாமியர்கள் தொடர்பாக அச்ச உணர்வைப் பரப்பிவருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர்கள் முஸ்லிம்கள், இஸ்லாமியர்கள் என்று குறிப்பிடப்படுவதை நிறுத்தவேண்டும். அந்நபர்கள் குற்றவாளிகள் உளக்குறைபாடுள்ளவர்கள் என்று கூறியுள்ளார் அவர்.

( ஆம் பக்கம் பார்க்க)



## மண்டேலாவின் 87ஆவது பிறந்தநாள்



பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர், பிரிட்டிஷ் முஸ்லிம் தலைவர்களுடன் மாநாடு நடத்துகிறார். லிபரல்கட்சித் தலைவர் சார்ள்ஸ் கென்னடி, கொன்சர்வேடிங் கட்சித் தலைவர் மைக்கல் ஹொவார்டும் அவருடன்



உ
அம்பாள் துணை

இலங்கை - சாவகச்சேரி

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# மகோற்சவ விழா (கொடியேற்றம்) 2005

அம்பிகை அடியார்களே!

சாவகச்சேரி அன்னை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின் வருடாந்த மகோற்சவம் நிகழும் பார்த்திப வருஷம் ஆடி மாதம் 11ஆம் நாள் (26.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு துவஜா ரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று, தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற உபயகாரர்கள், அடியார்கள் ஒத்துழைப்புநல்கவும்.

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!

கொடியேற்றம் ஆடி 11ஆம் நாள் 26.07.2005 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி
தேர்த்திருவிழா ஆடி 19 ஆம் நாள் 03.08.2005 புதன்கிழமை காலை 10.30 மணி
தீர்த்தத் திருவிழா ஆடி 20ஆம் நாள் 04.08.2005 வியாழக்கிழமை காலை 9.30 மணி (ஆடி அமாவாசைத் தினத்தன்று)
பூங்காவனம் ஆடி 21ஆம் நாள் 05.08.2005 வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணி
ஆடிப்பூரத் திருவிழா 08.08.2005 திங்கட்கிழமை
வரலக்ஷ்மி விரதம் ஆவணி 3ஆம் நாள் 19.08.2005 வெள்ளிக்கிழமை

**குறிப்பு:-** விழாக்கள் யாவும் புதிய நேரப்படி நடைபெறும். அடியார்கள் இயன்றவரை பூமாலை, பூக்கள், பலாப்பழம், பால், தயிர், இளநீர், பழவகை கொடுத்து உதவி புரியவும்.

*தாழையம்பதி வீதி,*
*சாவகச்சேரி.*

(38055) (33-11-34)

- தர்மகர்த்தா.

**விளம்பர அனுசரணை:-**

| | | |
|---|---|---|
| ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரத்தளபாடத் தொழிலகம்<br>12, பிரதான வீதி, சாவகச்சேரி. | அம்பாள் பார்மசி அன்ட் குறோசறி<br>இல.1, நவீன சந்தைக் கட்டடம்<br>சாவகச்சேரி. | ஜெகா எலக்றிக்கல்<br>இல.11, தனங்கிளப்பு வீதி,<br>சாவகச்சேரி. |
| தமிழ்ச்சோலைப் பதிப்பகம்<br>சக்தி தொலைத்தொடர்பகம்<br>யாழ். சாலை, சாவகச்சேரி. | சரவணாஸ் மியூசிக் சென்ரர்<br>கண்டி வீதி,<br>சாவகச்சேரி. | கதிரவன் இரும்பகம்<br>22, டச்சு வீதி,<br>சாவகச்சேரி. |


# Study in India

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து
**பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு**

A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

- Garden City College Affiliated to Bangalore University
- SSM College of Engineering affiliated to Anna Engineering University
- Muthayammal Art and Science College affiliated to Periyar University
- Bishop Heber College affiliated to Bharathidasan University

**Courses**

• B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering,
• B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering,
• B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology,
• B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology
• B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design),
• B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology).
• BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management).
• BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths,
• B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical Collegeல் சேர்ந்து 3 வருட Diplomaவை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

- ஆண்கள் - பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாட நெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


**MBBS** இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது ~ A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு **Call 0777 - 767818 / (011) 4512591**

**SCHOLARS INFORMATION CENTER**
**2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.**

SKA Print's


# மரண அறிவித்தல்



## சிவக்கொழுந்து சின்னத்துரை

யாழ்ப்பாணம், தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சின்னத்துரை 22.07.2005 கொழும்பில் காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம் - கொழும்பு சி.சின்னத்துரை அன் பிறதேர்ஸ்,கல்கிநிறுவனங்களின் ஸ்தாபகரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து- கனகம்மா தம்பதியரின் புதல்வரும் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் புவனச்சந்திரன், சிவமலர், வசந்தமலர், இந்துமலர், ஞானச்சந்திரன் ஆகியோரின் தந்தையும் வாசுகி, விமலாதேவி சன்முகரட்ணம் (பபுவா நியூகினி), கனேந்திரன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராஜா (U.K.), ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மயில்வாகனம், காலஞ்சென்ற சிவஞானம், மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரரும் Dr.சிவந்தன், ஷர்மிலா, சிந்துஜா, சுபத்ரா, சசிதரன், Dr.சியாமா, கஜன், தர்ஷிகா, பிரியா, ஷைலஜா, ரம்யா, சௌமியா, சரண்யா, சாகின்யா ஆகியோரின் பேரனும் மீனாட்சி, பூஜிதா, துவாரகேஷ், கிரண், சந்தோஷ் ஆகியோரின் பூட்டனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24-07-2005) ஞாயிற்றுக்கிழமை 27/2,5 ஆவது லேன், கொள்ளுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 4 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு, பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

27/2, 5th Lane,
Colombo - 3. Phone: 2573627
E.mail: buvana@sltnet.lk

தகவல்:
சி.புவனச்சந்திரன்
(மகன்).

(சி-44316) (33-11-34)

# வடமராட்சியின் குடிசனத் தொகை அருகுகிறது மக்களின் தொழில்சார் வருமானமும் வீழ்ச்சி



யாழ்.பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், மூத்த புவியியல் பேராசிரியருமாகிய பொ.பாலசுந்தரம்பிள்ளை வடமராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திறமுறைகள் பற்றி இக்கட்டுரையில் ஆய்வு செய்கிறார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசா ஞாபகார்த்தமாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடத்தப்பட்ட நினைவுப் பேருரை நிகழ்வின்போது பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இக்கட்டுரையை நினைவுப் பேருரையாக வழங்கினார்.

**தே**சிய மட்டத்தில் துறைசார்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் மாண், இடை, நுண் மட்டப்பிரதேசஅபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதன் மூலம் நாடு தழுவிய அபிவிருத்தியைக் காணலாம். பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்காது விடின் நாட்டினுள் அபிவிருத்தி நிலையில் வேறுபட்ட, ஏற்றத் தாழ்வான பிரதேசங்கள் உருவாகலாம். இதனால் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம். பிரதேசங்களின் வளங்களையும் பிரதேசங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இனங்கண்டு, இப்பின்புலத்தில் வாழ்வாதாரங்களை விருத்திசெய்வதன் மூலமே வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், சமூக நீதிமேம்பாடு, தற்சார்ப்புப் பொருளாதார விருத்தி, பெண்களை வலுவூட்டல் செய்தல் போன்ற அபிவிருத்தி முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம். இத்தகைய முயற்சிகள் மூலம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும். இதனால் இன்றைய அபிவிருத்தித் திறமுறையில் பிரதேச அபிவிருத்தி குறிப்பாக கிராமிய மற்றும் அடிமட்ட நிலை அபிவிருத்தி முயற்சிகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

இலங்கையில், யாழ்ப்பாணக் குடாநாடு சிறப்பானதொரு புவியியற் பிரதேசமாகும். எனினும் குடாநாட்டை நுணுக்கமாக நோக்கும்போது இங்கு வேறுபாடு கொண்ட தமக்கெனத் தனித்தன்மை வாய்ந்த உப பிரதேசங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இவை பெரிய யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பளை, தீவுகள் ஆகியனவாகும். இவை தரைத்தோற்றம், நிலவளம், நீர்வளம், நிலப்பயன்பாடு, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பண்பாடு, கலாசார நிலைகளிலும் குறிப்பிடத்தக்க, தமக்கேயுரிய சிறப்புப் பண்புகளைக் கொண்டிருப்பதனைக் காணலாம். இதனால் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தித் திறமுறையில் இப்பிரதேச வேறுபாடுகளுக்கு ஏற்றதாக, அபிவிருத்தி நடவடிக்கைகள் அமையுமிடத்துதான் மாவட்டத்தில் அபிவிருத்தி சிறப்பாக அமையும்.

வடமராட்சி என இன்று அழைக்கப்படும் பிரதேசம் வடமாரட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகப் பிரிவு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவு, வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு ஆகிய மூன்று நிர்வாகப்பிரிவுகளை உள்ளடக்கியது. இதன்மொத்த நிலப்பரப்பு 262.07 சதுர கிலோமீற்றராகும்- இன்றைய வடமராட்சி கடந்த 30 வருடங்களாக நிர்வாக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் இணைக்கப்பட்டதாக இருந்து வருகின்றது. இப்பிரதேசத்தின் தென் எல்லையில் அமைந்துள்ள வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் பச்சிலைப்பள்ளிப் பிரிவுக்குட்பட்டவையாக இருந்து வந்தன. 1976இல் உருவாக்கப்பட்ட பருத்தித்துறைத் தேர்தல் தொகுதி தொண்டைமானாறு முகத்துவாரத்திலிருந்து சுண்டிக்குளம் - நல்லதண்ணித் தொடுவாய் வரை பரந்திருந்தது. வடக்கு-கிழக்கு கரையோர கிராமங்கள் யாவையும் உட்படுத்தியதாக இருந்தது. 1983இல் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி என இரு மாவட்டங்காளகப் பிரிக்கப்பட்டபோது பருத்தித்துறை தேர்தல் தொகுதி உட்பட்ட பச்சிளைப்பள்ளி கிராமங்கள் யாழ்ப்பாணமாவட்டத்துடன் இணைக்கப்பட்டன - இதன் மூலமே இக் கிராமங்கள் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிற்குக் கீழ்வந்தன - இன்று இக்கிராமங்கள் வடமாரட்சியுடன் பல வழிகளில் இறுகப்பிணைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேசம் இன்று மூன்று நிர்வாகப் பிரிவுகளையும், 88 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளன. உள்ளூராட்சி அமைப்பில் இரு நகரசபைகளையும் இரு பிரதேச சபைகளையும் கொண்டுள்ளன. பிரதேச சபைகள் ஆறு உபகாரியாலயங்களைக் கொண்டுள்ளன. அவையாவன புலோலி, நெல்லியடி, கட்டைவேலி, உடுப்பிட்டி, செம்பியன் பற்று, குடத்தனை ஆகியனவாகும்.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு இன்றும் தனியானதொரு பிரதேசசபை உருவாக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் ஆகியன இன்றும் பச்சிலைப்பளை பிரதேச சபைக்குட்பட்டு இருக்கின்றன. வடமராட்சிப் பிரதேசத்தில் 350 கிராமங்கள் அல்லது தனித்துவமான குடியிருப்புகள் காணப்படுகின்றன.

புவியியற் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வடமராட்சியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:-

1. யாழ்ப்பாணம்:- பருத்தித்துறை வீதிக்கு வடக்கேயுள்ள உயரமான பிரதேசம்.

2. யாழ்ப்பாணம்:- பருத்தித்துறை வீதிக்கு தெற்கேயுள்ள தாழ்நிலப் பிரதேசம்.

3. வல்லிபுரத்திலிருந்து சுண்டிக்குளம் வரையான ஒடுங்கிச் செல்லும் மணல்திடற் பகுதி.

4. வடமராட்சி கடல் நீரேரியை அண்டிய தாழ்நிலங்களும் சதுப்பு நிலங்களும்.

வீதிக்கு வடக்கேயுள்ள உயரமான பகுதி, வடக்கு நோக்கிப் போகப்போக உயரம் அதிகரித்துச் செல்கின்றது. இப்பகுதியில் கெருடாவிலில் காணப்படும் தரைகீழ் நிலவறைகளான சின்ன மண்டபம், பெரிய மண்டபம் ஆகியன சிறப்பான சுண்ணக்கல் நிலவுருவங்களாகும். இப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 30 அடிக்கு மேல் காணப்படுகிறது. கம்பர்மலை என்றும் இங்குள்ள குடியிருப்பின் பெயர் ஒப்பீட்டு ரீதியல் உயரமான பகுதியைக் குறித்து நிற்கின்றது. கெருடாவில், பொலிகண்டி, அல்வாய், புலோலி ஆகியன உயரமான பிரதேசங்களாகும். இப்பிரிவில் முக்கியமான குடியிருப்புகளும், தோட்டப் பயிர்ச்செய்கை நிலங்களும் காணப்படுகின்றன. புகையிலை, வெங்காயச்செய்கைகள் முக்கியமானவையாக உள்ளன. இப்பிரதேசம் முழுவதும் தரைகீழ் நீர் முழுவதும் நன்னீராகவே உள்ளது. குறிப்பாக வதிரி, மந்திகைப் பகுதிகள் சிறந்த நீர், செம்மண் நிலவளங்களைக் கொண்ட விவசாயப் பகுதிகளாகும்.

### தாழ் நிலப்பகுதி

வீதிக்கு தெற்கேயுள்ள பகுதி குறிப்பாக கரணவாய், கரவெட்டி, பிரதேசங்கள் ஒப்பீட்டுரீதியில் தாழ்நிலங்களாகவும் தாழ்நிலத்தன்மை தெற்கு நோக்கி அதிகரித்துச் செல்வதாகவும் உள்ளன. இப்பிரதேசத்தில் நெற்செய்கைப் பகுதிகள் அதிகமாக உள்ளன. வடமராட்சியில் 1580 ஹெக்டேயரில் நெற்செய்கை இடம்பெறுகின்றது. இவற்றுள் 1250 ஹெக்ரேயர் நெற்செய்கை நிலப்பரப்பு இப்பகுதியில் காணப்படுகின்றது. நெற்செய்கைப் பகுதிகளின்முடிவில் மேலும் உயரம் குறைந்த தரவைப் பகுதிகள் காணப்படுகின்றன. நெற்செய்கைப் பகுதிகளும் தரவைப் பகுதிகளும், மாரிகாலத்தில் வெள்ளம் சூழ்ந்து காணப்படும். கரணவாய், கரவெட்டிப் பிரதேசங்களில் குறித்த சில உயரமான இடங்களில் மாத்திரமே தோட்டச் செய்கையும் குடியிருப்புகளும் காணப்படுகின்றன. தரை உயரம் குறைந்ததாகவும் மண்வளம் குறைந்ததாகவும். நீர் உவர்த்தன்மை கொண்டதாகவும் இருப்பதனால் இப்பகுதியில் தோட்டச் செய்கை பெரியளவில் இடம் பெறுவதில்லை. மேலும் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இப்பிரதேசத்தில்விலங்குவேளாண்மை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

### மணற்பகுதி

வல்லிபுரத்திலிருந்து சுண்டிக்குளம் வரையான பகுதி மணற்பகுதியாகவும் குறிப்பாக மணற்காடு, நாகர்கோயில் பகுதிகளில் உயரமான சிறு மணற் குன்றுகளும் காணப்படுகின்றன. இப் பிரதேசம் வடக்கில் அகலமாகவும், தெற்கில் ஒடுங்கியும் செல்கின்றது. கரையோரப்பகுதிகளில் மீன்பிடிக் குடியிருப்புகள் காணப்படுகின்றன. கற்கோவளம், மணற்காடு, குடத்தனை கரையூர், நாகர்கோயில், குடாரப்பு, தளிப்பளை, மாமுனை, இறக்காகம், தாளையடி, வாதிரியாள், உடுத்துறை, ஆளியவளை, கட்டைக்காடு, சுண்டிக்குளம் போன்ற முக்கிய மீன்பிடிக் குடியிருப்புகளாகும். பருத்தித்துறை - சுண்டிக்குளம் வீதியோரமாக ஒடுக்கமான சில பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கரையோரப் பகுதிகளில் தென்னைச் செய்கை காணப்படுகின்றது. இப்பிரதேசம் முழுவதும் நன்னீர் காணப்படினும் மணற்பாங்கான பகுதியாக இருப்பதால் தோட்டச் செய்கை மிக மிகக் குறைவாகவே யுள்ளது.

### கடல்நீரேரி

வடமராட்சி கடல்நீரேரி 21 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்டுள்ளது. இது மழைகாலத்தில் நீர் நிறைந்து தொண்டைமானாறு வழியாகப் பாய்வதுண்டு. கோடை காலத்தில் கடல்நீரேரிப் பரப்பில் ஒரு சில ஆழமான பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் நீர் வற்றிக் காணப்படும். இப்பகுதிகளில் பல உயரமான திடல்கள் உள்ளன. இத்திடல்களில் கண்ணாக் காடுகளும், சதுப்பு நிலத் தாவரங்களும் பெருமளவுண்டு. இப்பிரதேசத்திற்குரிய சிறப்பான உயிரினங்களும், தாவரங்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்கு முதலைகள் காணப்படுவது முக்கிய அம்சமாகும். இப்பகுதியிலுள்ள கண்டல் காடுகளின் பரப்பளவு சுருங்கி வருவது அவதானிக்கத்தக்கது.

வடமாராட்சிப் பிரதேசம் இன்று அண்ணளவாக 125,000 மக்களைக் கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தின் குடித்தொகை விவரம் வருமாறு:-

**- 1971 - 2003 -**

| பிரிவு | | 1971 | 1981 | 2003 |
|---|---|---|---|---|
| வடமராட்சி தெற்கு | | 56054 | 62484 | 46343 |
| வடமராட்சி வடக்கு | | 43024 | 45256 | 50093 |
| வடமராட்சி கிழக்கு | x | 7500 | 13673 | 16393 |

(xவெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் ஆகிய பிரிவுகளின் மக்கள் தொகை இதனுள் அடக்கப்பட்டுள்ளது)

இப்பிரதேசத்தின் குடித்தொகையை நோக்கின் இது கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் குடிசனத் தொகைப் பருமனுக்கு ஒத்ததாகவுள்ளது. இங்குள்ள குடிசனத்தொகை வளர்ச்சியை நோக்கின் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக இதன் வளர்ச்சி விகிதம் மிகக்குறைவாகவேயுள்ளது. 1901 இல் 52541 பேராக இருந்த குடிசனத்தொகை 1971 இல் 106078 ஆக அதிகரித்துள்ளது. குடிசனத்தொகை இரட்டிப்பாக அதிகரிக்க 70 ஆண்டுகள் எடுத்துள்ளது. இது சராசரி ஒரு விகித அதிகரிப்பையே காட்டுகின்றது. குடிசனத்தொகை அதிகரிப்பில் 1940களுக்கு முற்பட்ட காலங்களுக்கும், பிற்பட்ட காலங்களுக்குமிடையே தெளிவான வேறுபாட்டைக் காணலாம். 1940, 1950களில் குடிசனத்தொகை அதிகரிப்பு உயர்வாக இருந்து அது 1970 களின் பின்னர் குறைவடைந்துவிட்டது.

இப்பிரதேசத்தின் குடிசனத்தொகை ஒரு பக்கம் குறைவான இயற்கை அதிகரிப்பாலும் மறுபக்கம் தொடர்ச்சியான குடிவெளியேற்றத்தாலும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. 1980களுக்கு முன்னர் உள்நாட்டு இடப்பெயர்வு முக்கியத்துவம் பெற்றிருந்தது. 1980 களுக்குப் பின்னர் இங்கு ஏற்பட்ட யுத்த நிலைமையால் உள்நாட்டு இடப்பெயர்வுடன் சர்வதேச இடப்பெயர்வு முக்கியம் பெறலாயிற்று. உள்நாட்டு இடப்பெயர்வால் விவசாயம் தொடர்பான மக்கள் வன்னிக்கும் அரசசேவை, வர்த்தகம் தொடர்பானவர்கள் கொழும்புக்கும் சென்றமை குறிப்பிடத்தக்கன. கடந்த 25 வருடங்களுக்கு இப்பிரதேசம் குடி அதிகரிப்பைப் பெறவில்லை. இப்பிரதேசத்திலிருந்து வெளியேறிய மக்கள் தொகையின் உண்மையான எண்ணிக்கையை குடி உள்வரவு எண்ணிக்கையுடன் தொடர்புபடுத்தி பார்க்கையில் குடி வெளியேற்றம் உயர்வாக உள்ளது. பலாலி உயர்பாதுகாப்பு வலய உருவாக்கத்தால் அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் குறிப்பாக மீனவ சமூகத்தினர் பலர் வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் இப்பிரதேசத்தின் 1980 களுக்குப் பிந்திய குடிசனத் தொகை அதிகளவில் குடிவரவு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

வடமராட்சியின் பொருளாதாரம் நீண்ட காலமாக அரசசேவை, விவசாயம், மீன்பிடி குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றைத் தழுவியதாகஇருந்து வந்துள்ளது. எனினும் அரசசேவை வருமானம், மீன்பிடித்துறை சார்ந்த வருமானம் - குடிசைக் கைத்தொழில் சார்ந்த வருமானம் கடந்த இரு தசாப்தங்களாகக் குறைந்து வருகின்றன. ஆனால், வெளிநாடுகளில் இருந்து இப்பிரதேச மக்களால் இங்கு அனுப்பும் பணத்தொகை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தின் பொருளாதாரச் செயற்பாட்டில் மக்களின் கடின உழைப்பு, சிக்கன வாழ்வு, சிறந்த வள முகாமைத்துவம் ஆகியன சிறப்புப் பண்புகளாக விளங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தக்கவைக்கவும் பங்களித்துள்ளன.

இப்பிரதேசத்தின் அபிவிருத்தித் திறமுறைகளை இனங்காண முன்னர் இகுள்ள தள நிலைமைகளை நோக்குவது பொருத்தமானது.

1. கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தம் காரணமாக இப்பிரதேசம் பாரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. பல உட்கட்டுமாணங்கள் அழிவுக்குட்பட்டன. முதலீடுகள் இடப்படவில்லை.

2. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆழிப்பேரலையால் இப்பிரதேசம் தொண்டைமானாறிலிருந்து சுண்டிக்குளம் வரையான கரையோரப்பகுதிபெரு அழிவுக்குட்பட்டன. குறிப்பாக மீனவ சமூகத்தினர் தமது தொழில் உபகரணங்களையும் குடியிருப்புகளையும் இழந்துள்ளதுடன் ஆயிரத்துக்கு மேற்பட்ட உயிர் இழப்புகளையும் சந்திக்க நேர்ந்தது. கரையோர மக்கள் யுத்த காலத்திலும் கடல்வலயத் தடைச்சட்டத்தாலும், இராணுவக் கெடுபிடிக்ளாலும் பாதிப்பிற்குள்ளானதுடன் காலத்துக்கு காலம் உயிர் இழப்புகளையும் சந்தித்தனர்.

3. பொருளாதார ரீதியாக முன்னர் விளங்கிய சாதகமான நிலைமைகளை இழந்தும், யுத்தத்தால் பெரும் அழிவுக்குட்பட்டு அபிவிருத்தியை முன்னெடுத்த நிலையில் இருக்கும். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகர்கள்.

4. வடமராட்சி கிழக்கின் தென் பகுதி புலிகளின் கட்டுபாட்டிலும், வடபகுதி இராணுவக் கட்டுப்பாட்டிலும் இருப்பதுவும், நாகர்கோயில் வழியாக போக்குவரத்து வசதி இல்லாதிருப்பது மக்கள் வாழ்விற்கும் அபிவிருத்தி முயற்சிகளுக்கும் தடையாக இருக்கின்றன.

5. வடமராட்சியில் வளர்ந்த, வளரும் மற்றும் கரையோர சமூகம் என மூன்று சமூகத்தவர்கள் காணப்படுகின்றனர். இம் மூன்று சமூகப்பிரிவினரின் நலன்கள் அபிலாசைகளையும் திருப்திப்படுத்தக் கூடிய முறையில் வள ஒதுக்கீடு, அபிவிருத்திமுயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். இதில் காலத்துக்குக்காலம் சிக்கல்கள், மனத்தாக்கங்கள் ஏற்படுவதுண்டு. *(வளரும்)*

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
**இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.** T.P.: 021 2225680, 0776627373. (37991) (32.14.18.42)


## குடத்தனையில் மருத்துவ சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை 24

வடமராட்சி லயன்ஸ் கழகம் குடத்தனைப் பிரதேச மக்களுக்காக நடத்தும் இலவச மருத்துவ சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை மண்டபத்தில் நடைபெறநவுள்ளது.

கண்பரிசோதனை நிபுணர் எஸ்.எம். பெர்னாண்டோ கண் பரிசோதித்து மூக்குக் கண்ணாடி வழங்குவார்.

மாவட்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளையுடன் இணைந்து யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதிகளும் பொது மருத்துவ பரிசோதனைகளை நடத்துவர்.

பல்வைத்திய நிபுணர் வி.ஜெயராசா பற்சிகிச்சை நடத்துவார்.

(3-202)

## முன்பள்ளி விளையாட்டு

சிறுப்பிட்டி கலைமகள் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்துகொள்வார். (3-204)

## பொதுக்கூட்டம்

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

(3-202)


## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்து கொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன்** அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9122836.

(37618) (42-14-18)



IOM

## VACANCY ANOUNCEMENT

Position Title: Project Officer
Duty Station: Jaffna

**General Functions:** Under the overall supervision of Chief of Mission, direct supervision of National Programme Officer and Head of Office, Jaffna the incumbent will be responsible for the implementation of project will carry out the following duties:

1. Undertake field visit implement and monitor the project activities, as specified by the project document and as specific instruction given by the national programme officer, related to reintegration of beneficiaries including provision of assistance for shelter, relief and livelihood and conduct periodic programme reviews with IOM Colombo office.
2. Undertake field visit to obtain information necessary for the implementation of community projects as specified in the project document and implement such projects in identified locations.
3. Conduct surveys on availability of resources and opportunities in different sectors important for the project in the Districts of Jaffna. Kilinochchi and Mullaitivu. Provide guidance and assistance to clients and maintain a good report with them.
4. Propose and undertake action on operational procedures affecting project implementation and management within the Northern Province.
5. Delegate daily work for project assistants and supervise their work. Obtain regular reports from them.
6. Build and maintain a network of linkages to local government authorities, organizations and other partners in the field.

*Qualifications:*

Relevant university degree or equivalent combination of education and experience, A minimum of 3 years combined experience in the field of technical cooperation, project development and implementation in a local or international NGO. High level of computer literacy is required. Good knowledge of MS Word, MS Excel and other Microsoft Office applications an advantage. Ability to draft reports clearly, concisely and quickly is a must.

Excellent communication, negotiation and mediation skill, Strong strategic thinking capacity. Personal commitment, efficiency, flexibility and drive for results. Respect for diversity. Ability to effectively collaborate and work harmoniously with colleagues.

Languages: Excellent knowledge of English working knowledge of Tamil.

Method of Application: Please submit a CV **with your Telephone Number** and cover letter to: Head - Programme Officer, International Organization for Migration, 70, Temple Road, Jaffna or E-mail to: **iomja@sltnet.lk.**

***Closing Date: 26th July 2005.***

(38087)



IOM

## VACANCY ANOUNCEMENT

Position Title: Receptionist
Duty Station: Jaffna

The International Organization for Migration, IOM is looking for a receptionist for its office in Jaffna. The work involves routine work of receptionist including maintenance of office premises, handling incoming calls and faxes, dispatching mails and other administrative tasks and assisting in preparing reports. The incumbent should possess the following qualifications.

Secondary education, Good communication and writing skills in English and Tamil. Knowledge of Sinhala and Computer literacy will be added qualification. Experience in similar position desired.

Languages: Excellent knowledge of English and Tamil. Method of Application: Please submit a CV **with your Telephone Number** and cover letter to: Head - Programme Officer, International Organization for Migration, 70,Temple Road, Jaffna or E-mail to:**iomja@sltnet.lk**

***Closing Date:26th July 2005***

(38088)



## இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்

**இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக் கொடுக்கப்படும்.**

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**

**ந. பாலகிருஷ்ணன்**
**கலைவாணி மில் ஒழுங்கை (Farm School Lane),**
**கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.**
T.P:- 0777290266, 0777512943

(36937) (54-



# STUDY IN

UK, U.S.A, Canada, Cyprus, Malaysia, Singapoor

After (A/L) Pending Result or (O/L) 3C, 3S தகமையுடன் உயர்கல்வி

Admission Fee Only 425£
Free English Class for Students

## Diploma & Undergraduate Courses...

- Architecture, Art, Fasion Design & Music
- Business Management, Accounting & Finance
- Law, Law with Business
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Biological, Chemical & Pharmaceutical Science
- Computer Information Systems Design
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering, Computer Science
- Arts, Social Science and Humanities - Psychology
- Foundation Degree in Aircraft Engineering
- Englineering Systems Management
- Education - Primary Teaching
- Mechanical Engineering
- Information Technology

✓ Maximum Gurantee for the Visa.
✓ Student Loan Facility.
✓ Part time job.
✓ 1/2 payment Accomadation System.

தற்போது September, October January2006 பதிவுகள் இடம்பெறுகின்றன.

Free Consulting

**SKY LINE** TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

No. 253- 1/2, Galle Road, Wellawatte, Sri Lanka. Tel: 0115512484, 0115522342
Mobile: 0773175767, Web: gatetolanka.com/skyline



## Spoken English With Grammer

*Monday I Friday : 5.00 pm - 7.00pm*
*(Saturday & Sunday: 4 Months)*
*Fee: Rs.4500/-*

3-1/2 Months Rs.4250/- Only

✓ Foundation Level ✓ Secondary Level
✓ Diploma Level

இரண்டு மாத முடிவில் சரளமாக, திறமையாக ஆங்கிலம் பேச முடியாத பட்சத்தில் அம்மாணவருக்கு மீண்டும் Free Special Class நடைபெறும்.

## Certificate in English Grammer

*Commencement : July*

- முற்றிலும் ஆங்கில அறிவு குறைந்த மாணவர்களுக்கு இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
- ஒரு வகுப்பில் 15 மாணவர்கள் மட்டுமே.
- ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனிக் கவனம் செலுத்தப்படும்.

3-1/2 Months Rs.3800/- Only

## Business and Office English

*Commencement : July*
*Saturday & Sunday only*
(தொழில் செய்பவர்களுக்கு மட்டும்)

- தொழில் செய்பவர்களுக்கு
- தொழில்வாய்ப்புக்களை எதிர்ப்பார்த்துக் கொண்டு இருப்பவர்களுக்கு.

4 Months Rs.4500/- Only

## IELTS and TOEFL

*Commencement : July*
*Saturday & Sunday Only*

1-1/2 Months Rs.5450/- Only

**SKY LINE** COLLEGE
Professional English Center

No. 253- 1/2, 1st Floor, Galle Road, Colombo 06. Sri Lanka.
(Opposite to Wellawatte Police Bus Halt)
Tel: 0773175767, 0115512484



## வேலை வாய்ப்பு

வெள்ளவத்தையில் இயங்கும் காஸ் கடைக்கு விநியோகம் செய்யும் ஆள்கள் தேவை. 18-30 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். நியாயமான சம்பளம் தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு: **2226131**
**2223262**

(38046) (42-14-18)



## UNIVAC

சங்கானை யுனிவெக் கணனிப் பயிற்சிக் கல்லூரியில் இந்தியாவில் இருந்து வந்திருக்கும் விரிவுரையாளர்களினால் கணனிப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

Hardware, Networking, DTP, Tally, Web designing, Software Engineering M.S.Office, Internet & E-mail

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 30.07.2005

T.P.: 077-6176476 **Director.**



## ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை



25% வரை விலைக்கழிவு



OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

# “...வருகிறார்; பார்க்கிறார்; போகிறார்; உதவுவார் எவருமில்லை....”

## வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாம் மக்கள் மனங்களில் இருந்து............... ④

**1990** ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் வலிகாமம் வடக்கில் இருந்து தமது உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு தப்பினோம் பிழைத்தோம் எனத் தமது சொந்த இடங்களை விட்டு, உடைமைகளை விட்டு, உற்றார், உறவினர் ஆளுக்கொரு பிரிவாகப் பிரிந்து இடம்பெயர்ந்தார்கள்.

அன்று தொடக்கம் இன்றுவரை என்றும் தீராத துன்பத்துடனும் துயரத்துடனும்தான் காலங்கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றும் அவர்களது அவலங்கள் தொடர்கின்றது. சொந்த நிலம் இல்லை, சொந்த வீடு இல்லை, கையில் பணம் இல்லை, இருக்கும் இடத்திலும் நிம்மதியில்லை.

தற்காலிக நிலச் சொந்தக்காரர்கள், தற்காலிக வீட்டுச் சொந்தக்காரர்கள் தமக்குத் தமது காணி தேவை. தமது வீடு தேவை எனத் தினம் தினம் நச்சரித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த அவலங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தபோது தான் ஆழிப்பேரலை அனர்த்தம் வந்து இவர்களை மீண்டும் சிதைத்து அழித்துவிட்டது.

நிவாரணம் வழங்குவதில் பாகுபாடு. பிள்ளைகளைப் பாடசாலைக்கு சீரும்சிறப்புமாக அனுப்ப முடியாத நிலை, தொழில் செய்யும் இடங்களிலும் வேற்றுமைகள். உரிய நிவாரணங்களும் உரியநேரத்தில் கிடையாமை. கடல் உபகரணங்கள் கிடைப்பதில் முரண்பாடு என பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள்.

இந்தநிலையில், வலிகாமம் வடக்கு மக்கள் தாம் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவே விரும்புகின்றனர். செத்தாலும் தங்கள் சொந்த மண்ணில் சாகவேண்டும் என்பது அவர்களது அவா.

இந்த மக்களின் அவலக்கதையை நீங்களே அவர்களிடம் நேரில் கேட்பதற்காக உங்கள் சார்பில் அவர்களைச் சந்தித்தோம். இதோ அவர்களின் கண்ணீர்க் கதை....

### உழுத்துப்போன அரிசியே நிவாரணமாகக் கிடைக்கிறது!

**மரியரட்ணம் ரமேஸ்குமார்**
*(வயது 30)*
*(வளலாய் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர்)*
*3 பிள்ளைகள்*
*தொழில்: கடற்றொழில்*



1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் எமது வீடு, உடைமைகள், நகை போன்ற சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்த நிலையில் வெளியேறினோம்.

அங்கிருந்து வடமராட்சிக்கு இடம்பெயர்ந்து வந்தோம். இங்கு திக்கம் பகுதியில் தனியாகக் காணி ஒன்றில் இருந்த பொருள்களை விற்று ஒரு தற்காலிக வீட்டைக் கட்டினோம். ஒரு பிளாஸ்ரிக் படகும் கட்டுமரமும் வலைகளையும் வாங்கி ஓரளவு உழைத்துவரும் வேளையில் ஆழிப்பேரலை வந்து எல்லாவற்றையும் சேதமாக்கி அடித்துச் சென்றுவிட்டது.

நானும் 3 பிள்ளைகளும் மனைவியும் இப்பாதிப்பினால் பாடசாலைகளில் தங்கினோம். ஏதோ சில தொண்டர் நிறுவனங்கள் உலர் உணவுப் பொருள்கள், பாத்திரங்கள், தளபாடங்கள் கொடுத்து உதவின.

தற்போது நாம் எமது திக்கத்தில் உள்ள தற்காலிக வீட்டிற்கு வந்துள்ளோம். ஆனால், தொழில்செய்ய முடியவில்லை காரணம் இதுவரை எனக்கு கடற்றொழில் செய்வதற்கு படகோ, கட்டுமரமோ, வலைகளோ வழங்கப்படவில்லை.

எமது வளலாய்ச் சங்கத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய பிளாஸ்ரிக் படகுகள் 17. ஆனால், தற்போது 9 படகுகள் தான் கொடுத்துள்ளார்கள். எனக்கு இதுவரை படகு கிடைக்காமையால் நான் கரைவலை போடுவதும் ஏனைய கடற்றொழில் செய்பவகளுக்குக் கூலியாகச் செல்வதுமாக பிழைப்பை நடத்துகிறேன். இந்த உழைப்பால் எனது குடும்பத்தைக் கொண்டு செலுத்த முடியவில்லை.

பெரும் கஷ்டத்தின் மத்தியில்தான் எனது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுவருகிறார்கள். அவர்கள் பாடசாலைக்கு சென்று வர ஒரு சைக்கிள் இல்லை. அவர்களுக்குப் போதிய சத்துணவு வழங்கமுடியவில்லை.

நிவாரணதிற்கென எமக்கு வழங்கப்படும் அரிசி, மா, பருப்பு போன்ற பொருள்கள் சிலவேளைகளில் ஒன்றுக்கும் உதவாத - சேதமுற்றதாக வருவதால் நாம் அவற்றை கால்நடைவளர்ப்போருக்குக் குறைந்த விலைக்குக் கொடுத்துவிட்டு அதிக விலை கொடுத்து நல்ல உலர் உணவுப்பொருள்கள் வாங்க வேண்டியுள்ளது.

எமக்கு இதுவரை இரு தடவைகள் தான் 5ஆயிரம் ரூபா தந்துள்ளார்கள். நிவாரணத்துக்கென 375 ரூபா முத்திரையும் கிடைக்கின்றது. இதில் தற்போது சீவியம் செய்ய முடியாதுள்ளது.

அடுத்து நாம் தங்கியுள்ள தற்காலிக வீட்டுக் காணிக்காரர் எம்மை எந்தநேரம் எழும்பச் சொல்கிறாரோ என்னும் பயம் இரவு பகலாக எம்மை அச்சுறுத்திக் கொண்டுள்ளது.

எமது வளலாய் கிராமத்தைச் சேர்ந்த 73 குடும்பத்தினர் தற்போது வடமராட்சியில் உள்ளோம். அனைவருக்கும் இதே நிலைமை தான்.

ஆழிப்பேரலைக்குப் பின்பு எமக்கென வலிகாமம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்ததன் பின்பு தற்போது ஓரளவு எமது நிலைப்பாடு சுமாராகவுள்ளது.

கடலுக்குச் செல்பவர்கள் முன்புபோல் அடையாள அட்டை காட்டவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனினும், இராணுவச் சென்ரியில் பெயர் விவரம் பதிந்து விட்டுச் செல்லவேண்டும். காலை 7 மணிக்கு முன்பு வரவேண்டும் பிந்திவந்தால் விடமாட்டார்கள்.

அப்படியிருந்தும் எமது சொந்த இடம் போல் வருமா? எமக்கு வளலாய்ப் பகுதியிலுள்ள காணிகளில் சொந்த வீடுகள் கட்டித் தந்தால் எமது துன்பதுயரங்களை நாம் தீர்த்துக்கொள்வோம்.

### அதிகளவு விலை கொடுத்து வலை வாங்க வசதியில்லை

**எஸ்.ஆனந்தமயில்** *(வயது 50)*
**ஆ.செல்வராணி** *(வயது 47)*
*தொழில்: கடற்றொழில்*
*3 பிள்ளைகள்*
*சொந்த இடம்: குகன் வீதி, மயிலிட்டி*
*தற்காலிகஇடம்: எரிஞ்சம்மன் கோயி லடி, இடைத்தங்கல் முகாம்.*



1990 ஆம்ஆண்டு இராணுவ நடவடிக்கையின்போது வீடு, தளபாடங்கள், வாகனங்கள், கால்நடைகள் போன்ற 50 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்து வடமராட்சிக்கு வந்தோம்.

சூரியக்கதிர் இராணுவ் நடவடிக்கையின் போது இங்கிருந்து மீண்டும் இடம்பெயர்ந்து வன்னி சென்றோம். பின்பு சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் திரும்பவும் வந்து வடமராட்சி சுப்பர்மடப் பகுதியில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்தோம்.






ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் சுமார் 15 லட்சம் பெறுமதியான பிளாஸ்ரிக் படகு, வலைகள், எஞ்சின்கள், கரைவலை போன்றவற்றை இழந்துள்ளோம்.

தற்போது எரிஞ்சம்மன்கோயில் இடைத்தங்கல் முகாமில் பெரும் நெருக்கடியான இடத்தினுள் சிரமத்துடன் வாழ்கின்றோம்.

எமக்குரிய படகுகள், மீன்பிடி உபகரணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் நாம் தொழில் செய்யமுடியவில்லை. மீன்பிடிப்பவர்களிடம் இருந்து மீன்களை வாங்கிக்கருவாடு போட்டு கூலருடன் வரும் கொழும்பு வியாபாரிகளுக்கு விற்று வருகின்றோம். வலைகளை மேலதிகமான விலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது. அதற்குத் தற்போது எம்மிடம் பண வசதிகள் போதாது.

தற்போதுள்ள இடைத்தங்கல் முகாமில் மலசலகூடவசதிகள் போதியனவாக இல்லை. ஒரு அறைக்குள் குடும்பத்தினர் அனைவரும் மிக நெருக்கமாகத் தங்கவேண்டியுள்ளது. தண்ணீர் வசதி போதாது. பவுசர்களில் நிரம்பும் தண்ணீருக்காக பல மணி நேரங்கள் காத்து நிற்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, கடற்றொழில் செய்வதற்கு எஞ்சின் வசதியில்லை .ஒரு மீன் வலையின் விலை பத்தாயிரம் ரூபா. இவைகளை இன்றைய நிலையில் எம்மால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை.

### கணவனைக் கொன்றது ஆமி! உடைமையைத் தின்றது சுனாமி!!

**திருமதி கைலாசபிள்ளை பத்தாமணி**
*(வயது 68)*
*10 பிள்ளைகளின் தாயார்*
*தொழில்: மீன் வியாபாரம்*



*சொந்த இடம்: மயிலிட்டி*

1987 ஆம் ஆண்டு எனது கணவர் கடலில் தொழில் செய்து கொண்டிருக்கும்போது இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். அதனைத் தொடர்ந்து பெரும் சிர மங்களின் மத்தியில் மீன் வியாபாரம் செய்து பிள்ளைகளையும் என்னையும் பாதுகாத்து வருகின்றேன்.

1990 ஆம் ஆண்டு படையினரின் நடவடிக்கையைத் தொடர்ந்து நானும் சுமார் 5 லட்சம் பெறுமதியான உடைமைகளை இழந்து வெளியேறி வடமராட்சிக்கு வந்தேன். இங்கும் கடற்றொழில் செய்பவர்களிடம் மீன்களை வாங்கிக் கருவாடு போட்டு விற்கிறேன்.

அவர்களின் மீன்களை கூறுவிலை கூறி விற்றால் அவர்கள் எனக்குக் கூலியாகக் கொடுக்கும் பணத்தின் மூலமாகவே என்பிள்ளைகளை காப்பாற்றி வந்துள்ளேன்.

இதன்பின் ஓரளவு சிறுகச்சிறுகச் சேமித்து வைத்த பொருள்களும் ஒரு தொகைப் பணமுமாக 3 லட்சம் ரூபா பெறுமதியான எனது உடைமைகளை திடீரென வந்த ஆழிப்பேரலை அடித்துச் சென்றுவிட்டது.

ஆழிப்பேரலையினால் இடம்பெயர்ந்து வடமராட்சியின் ஏனைய பாகங்களில் முகாம்களில் தங்கியிருந்து தற்போது மீண்டும் எரிஞ்சம்மன் கோயிலடி முகாமுக்கு வந்துள்ளேன்.

5 பிள்ளைகள் திருமணமாகிவிட்டார்கள். மீதிப்பிள்ளைகள்எனது உழைப்பில்தான் தங்கியுள்ளார்கள்.

இந்த நெருக்கமான இடைத்தங்கல் முகாமில் குடும்பத்தாருடன் நிம்மதியாக வாழ முடியாது; நிவாரணங்களும் ஒழுங்காக இல்லை. உலர் உணவுகளும் மனிதர்களால் உண்ண முடியாத முறையில் உள்ளது.

தொழில் செய்வதற்குக் கையில் காசு இல்லை. ஒரு நிரந்தரமான இடம் இருந்தால் தான் எம்மால் நிம்மதியாக வாழமுடியும். நாம் தற்போது தங்கியுள்ள இடைத்தங்கல் முகாமில் 6 மாதம் வரைதான் இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிம்மதியற்ற வாழ்க்கையில் இருந்து நாம் விடைபெறவேண்டும் எனில் நாம் எமது சொந்த ஊருக்குப் போனால் போதும்.

இதை இந்தப் பொது நிறுவனங்களோ அரசோ செய்து தந்தால் அது எமக்குப் பேருதவியாக இருக்கும்.

### மலசலகூட வசதி போதாது! தண்ணீர் பெறுவது மிகக் கஷ்டம்!!

**சுப்பிரமணியம் ஆனந்தராசா**
*(வயது - 53)*
*3 பிள்ளைகள்*
*சொந்த இடம்: - காங்கேசன்துறை*
*தற்போதய இடம்: - எரிஞ்சம்மன் கோயிலடி இடைத்தங்கல்முகாம்*



1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவ ஆக்கிரமிப்பினால் எனது படகுகள், வலைகள் எஞ்சின்கள், பொருள்கள் போன்ற சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்து அங்கிருந்து வெளியேறி வடமராட்சிக்கு இடம் பெயர்ந்தவர்க ளாக வந்துள்ளோம்.

தற்போது என்னால் கடலில் போய் மீன்பிடித்தொழில் செய்யமுடியவில்லை. இதனால், கடற்றொழிலுக்கு உதவியான எரிபொருள் கடை வைத்திருந்து எனது குடும்பத்தினரைக் காப்பாற்றிவந்தேன்.

ஆழிப்பேரலையால் எமது கடையும் முத வீடுகளும் தற்காலிகமாக எம்மால் அமைக்கப்பட்ட வீடும் போய்விட்டது. இதன் காரணமாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நான் எரிஞ்சம்மன் கோயிலடி இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளேன். எனது நிலையை நேரில் பார்த்த யாழ்.சீயோன் தேவாலய சபையினர் 70 ஆயிரம் ரூபா தந்து உதவியதால் மீண்டும் கரையோரத்தில் கடற்றொழிலாளர்களுக்கென எரிபொருள் நிலையம் ஒன்றைச் சிறிதாக ஆரம்பித்துள்ளேன்.

எமக்கு நிவாரணங்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. மேலும், நிவாரணம் வழங்குவதிலும் பாகுபாடு காட்டப்படுகின்றது. இதனால், நாம் பெரும் சிரமப்படுகின்றோம்.

இடைத்தங்கல் முகாமில் மலசலகூடவசதி போதாது. தண்ணீர்பெறுவதிலும் கஷ்டம். வலிகாமத்தில் இடம்பெயர்ந்த எமது மக்கள் பெரும் கஷ்டத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

ஒவ்வொருவரும் எமது சொந்த இடமான வலிகாமத்திற்கே மீண்டும் செல்ல விரும்புகின்றோம். இங்குபட்ட துன்பங்கள் போதும்.

**சி.சுந்தரலிங்கம்**

தற்போது ,வளலாய், தொண்டைமானாறு மேற்கு காற்றாடிப் பகுதிகளில் அரச காணிகளும் தனியாரின் வெற்றுக்காணிகளும் நிறைய உள்ளன. எனவே, தொண்டர் நிறுவனங்களையும் அரசையும் மேற்படி இடங்களில் எமக்கு தங்கும் வசதிகள் செய்து தருமாறு நாங்கள் கேட்கின்றோம்.

### இடைத்தங்கல் வாழ்க்கை இத்துடன் போதும்!

**விநாயகமூர்த்தி செல்வமயில்**
*(வயது - 55)*
*3 பிள்ளைகள்*
*தொழில்: கடற்றொழில்*
*சொந்த இடம்: மயிலிட்டி*
*தற்போதைய இடம்: எரிஞ்சம்மன் கோயிலடி இடைத்தங்கல் முகாம்*



1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைக்கு முன்பு நான் செல்வச் செழிப்புடன் 2 பிளாஸ்ரிக் படகுகள் வைத்திருந்து கடற்றொழில் செய்து என் குடும்பத்தினரைக் காப்பாற்றி வந்தேன்.

இராணுவ நடவடிக்கையின்போது ஒரு கோடி ரூபா ரூபா பெறுமதியான எமது குடும்பத்தாரின் நகைகள், பணம், கடற் றொழில் உடைமைகளைக் கைவிட்டு அநாதை களாக வடமராட்சிக்கு வந்தோம்.

இங்கு வந்து தனியார் காணியிலியிருந்த மூலதனங்களைக் கொண்டு ஒரு தற்காலிக வீடு போட்டுக்கொண்டு சிறுமீன்பிடித் தொழிலைச் செய்யத்தொடங்கினேன்.

குறிப்பாக, மீனவர்களிடமிருந்து மீன்களை வாங்கிக் காயப்போட்டுக் கொழும்பு மீன் வியாபாரிகளுக்கு விற்பனை செய்தேன்.

இந்தநிலையில்தான், ஆழிப்பேரலை வந்து எனது விலை உயர்ந்த கருவாடுகளையும் எனது தற்காலிக வீட்டையும் சிறுகச்சிறுகச் சேர்த்த சுமார் ஒரு லட்சம் பெறுமதியான உடைமைகளையும் அள்ளிச் சென்றது.

எனக்கு இதுவரை எனது தொழிலுக்கான எந்த நிவாரணங்களும் தரப்படவில்லை. மேலும், எமது தற்காலிக முகாமைக்கூட சீர்செய்ய எவரும் உதவிசெய்யவில்லை. எனது பிள்ளைகளும் எனது குடும்பமும் பெரும் கஷ்டத்தில் உள்ளனர்.

பல நிறுவனங்களிடம் உதவி கேட்டும் இதுவரை கிடைக்கவில்லை. பலரும் வருகின்றார்கள். எமது நிலையைப் பார்த்து விட்டுப்போகிறார்கள். ஆனால், எவரும் உதவிகள் செய்வதாக இல்லை. இடைத்தங்கல் முகாமில் இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டு எவ்வளவு காலம் தான் வாழ்க்கையை நடத்துவது. இனியாவது எங்களுக்கு ஒரு நல்ல இடத்தில் நிரந்தர வீடுகளை அமைத்துத்தர யாராவது முன்வருவார்களா? தற்போது நான் சிலரிடம் கடன்பெற்று மீன் கருவாடாக்கும் தொழில்செய்து வருகின்றேன்.

எனினும், எமது சொந்த இடமான வலிகாமத்திற்கே செல்ல விரும்புகின்றேன். ✱

## MANAGER
## S-LON CENTRE - JAFFNA

S-LON Distributor in Jaffna looking for a dynamic self motivated go getter to fill in the above post. Applicants should be above 30 years of age and be fluent in Tamil. Prior experience in Similar Capacity and the ability to communicate in English & Sinhala would be an added advantage

Interviews will be held in Colombo

Please apply within 7 days with names of two non rel[illegible]d referees to:

P.o.Box 2129
COLOMBO.

(C/44304)(42)


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### அம்பலவாணர் குலசேகரம் J.P.

*(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)*

தோற்றம்: 26-08-1937
மறைவு: 24-07-2000

***என்றும் உங்கள் நினைவுடன்***

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(38057)(42.14.17)


## வவுனியாவில்

*உலகத் தரத்துடனும்*
*உத்தரவாதத்துடனும்*

**NOKIA**

(Authorized distributor softlogic)

*சகலவித'மான* **NOKIA** *கையடக்கத் தொலைபேசிகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

*இலங்கையின்* **NOKIA** *நிறுவனமாகிய* **Softlogic** *நிறுவனத்தின் ஏகமுகவர்*




**Grand Mobile**
68/1, 2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா.
தொடர்புக்கு: T.P.: 0714181600

one year warranty
Handset
Battery
Charger

(C/44322)(42-14-17)



## Opportunity for IT related trainees

**Bizerman Technologies (PVT) Ltd.**

We are IT solution providers and consultant based in Jaffna

❈ Are you ready to work after A/L ?
❈ Ready to work in IT Field?
❈ Ready to become a dynamic self motivated and responsible IT person?

" If yes"

Please forward your detail resume within 7 days to

**C/o. No:2656**
**Uthayan publications**
**Jaffna**

(38065)(42)



20 வருடகால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்

## கலாலயா
**பயிற்சியகம்**

**மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

*கிழமை நாள் பிரிவுக்கான அனுமதிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கிழமை நாள் புதிய பிரிவு- II எதிர்வரும் 01.08.2005 (திங்கள்) முதல் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.*

### மகளிருக்கான துரித மூன்று மாதகாலப் பயிற்சிகள்

- கேக் ஐஸிங்- (22 வகையான கேக் அமைப்புக்களில் ஐஸிங் செய்தல் FONDANT ICING, மாச்சீனி மலர்கள் செய்தல்)
- கூந்தல் அலங்காரம்
- உணவு தயாரித்தல் (COOKERY)
- கைவேலை
- FABRIC PAINTING
- அடிப்படை முக அழகுக்கலை (FACIAL) வகுப்புகள்

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை பயிற்சியும் ஆரம்பமாகின்றன

மேலதிக விவரங்களை காலை 9.00 மணி முதல் பி.ப.2.30மணி வரையில் நேரில் அறிந்துகொள்ளலாம்.


## முன்பள்ளி விளையாட்டு விழா

சுழிபுரம்,ஜூலை24

மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வதுரன் புலோ சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தலைவர் க.துளசிதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் க.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ஜெ.சோமன்ராஜ் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-28-204)

## காரைநகர் சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

காரைநகர் சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடம், மடத்துக் கரையில் காரைநகர் பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள காணியில் அமைக்கப்படவுள்ளது.

இதனை அமைப்பதற்கான நிதியினை இலங்கை சமுர்த்தி அதிகார சபை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் -

இதற்கான கட்டுமானப் பணிகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது.

புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ள காணியை காரைநகர் தங்கோடை இளைஞர் கழக உறுப்பினர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யவுள்ளனர்.

காரைநகர் சமுர்த்தி வங்கி தற்போது காரைநகர் கமநல சேவைகள் நிலையக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருவது தெரிந்ததே. (எ-73)

## இடமாற்றம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் அதிசிறப்புத் தர கிராம அலுவலராகக் கடமையாற்றிய வீ.எஸ் சண்முகநாதன், கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு நல்லூர்ப் பிரதேசசெயலகத்தில் கடமையாற்றும் பொ.குமாரசாமி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

## மரண அறிவித்தல் திகதி மாற்றம்

**சூவாம்பிள்ளை இம்மானுவேல்**

சில்லாலையைச் சேர்ந்த சூ.இம்மானுவேல் 22.07.2005 இல் காலமானார். இன்று நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகளும் நல்லடக்கமும் நாளை (25.07.2005) திங்கட்கிழமை பி.ப.3.மணிக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

தகவல்
அந்தோனிப்பிள்ளை
(சகோதரன்)

சில்லாலை,
பண்டத்தரிப்பு.
(38106)(42-14-17)

## முதலாம் ஆண்டு நினைவுகள்

புதல்வனாய்
19 - 09 - 1949

அமரராய்
04 - 08 - 2004



## அமரர் சின்னச்சாமி சுப்பையா

*(துர்க்கா விற்பனை நிலைய உரிமையாளர்)*

*ஓராண்டு ஆனபின்னும் ஓயாத*
*உம் நினைவுடன் .....*
*உண்ணுகிறோம்! உறங்குகிறோம்!!*
*விண்ணதை விழிகொண்டு*
*நோக்குகின்றோம் - மீண்டும்*
*நீர் வருவீரென*
*எண்ணக் கனவுகளை விரிய*
*விடுகிறோம் - நீங்கள்*
*என்றாவது எம் வாசலில்*
*வண்ண நிலவாய் வந்து*
*ஒளி வீசுவீரென*
*கொஞ்சிக் குலவிட மீண்டும்*
*வருவீர் ஒரு சின்னக்*
*குழந்தையென*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

22A, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

**- குடும்பத்தினர்.**
(38107)(42-14-17)


## Immediate Vacancy

Norwegian People's Aid

**solidar**
An INGO consortlum including

### Tsunami Education Project: Facilitator

Applications are requested from experienced persons in the field of Physical Geography and teaching backgrounds

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Srilanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB). Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

The position is based in Jaffna. The selected candidate will be responsible in facilitating a multi-media Power Point Presentation on the science and geography behind a Tsunami and other natural hazards. These workshops will be conducted in Transit Camps and Schools across the district.

Required Qualifications:
✧ A University graduation in Geography.
✧ At least two years teaching experience.
✧ Advanced communication skills, A high command of written and spoken English would be an advantage
✧ Computer Literacy (Knowledge of PowerPoint software would be helpful)
✧ Available to work in the daytime and evenings

Cover letter and curriculum vitae Should be addressed to TEP Project Manager. No.156, Jaffna Road, Paranthan, Kilinochchi. Applications are invited from male / female candidates including persons with disabilities who possess relevant experience.

Deadline For applications is 2nd August 2005.

(C/44320)(42)

# '...இவ்வளவு காலமும் அலைஞ்சது போதும் இனியாவது எங்களை ஊருக்கு விடுங்கோ...'

கொடூர யுத்தத்தினால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தமது வாழ்விடங்களைத் தொலைத்து உறவுகளைப் பறிகொடுத்து உடைமைகளையும் கைவிட்டு உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடியமக்கள் நீண்டகாலமாக நலன்புரி நிலையங்களில் வாழுகின்றனர். அவர்களின் அவல வாழ்வு சமாதான காலத்திலும் சீர்செய்யப்படாமல் தொடர்கிறது. அவர்கள் ஊர்திரும்ப முடியாமல் சொந்த நாட்டிலே 'அகதி' என்ற அவப்பெயருடன் அவலங்களைச் சுமந்தவாறு வாழ்வை நகர்த்துகின்றார்கள்.

இவர்கள் வாழ்ந்த வளமான - வனப்பான கிராமங்கள் சோபையிழந்து பாலைவனமாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடங்கியுள்ளது.

இதனால், இவர்களின் வாழ்வியல் 15 வருடங்களாக அகதி முகாம்களில் முடங்கியுள்ளது. இத்தகைய மக்களின் இன்றைய அவலநிலையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கில் 'உதயன்' இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!! எனும் தொனிப்பொருளில் விசேட பார்வையினை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்கி வருகின்றான்.

அந்த வகையில் இம்முறை சங்கானையில் உள்ள அமைதிமுகாம் மற்றும் நவாலி அட்டகிரி முகாம் I, II ஆகிய நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற மக்களின் துயரங்களையும், அவர்களின் இன்றைய அவல வாழ்வியலையும், அவர்களின் அடிப்படைத் தேவைகள் என்னவென்பதையும் அங்குள்ள மக்களோடு அளவளாவி சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

### 'அமைதி' முகாம் மக்களின் மனங்களில் அமைதியில்லை!

முதலில் சங்கானையில் உள்ள அமைதி நலன்புரி நிலையத்துக்குச் செல்கின்றேன் அங்குள்ள மக்களோடு மனந்திறந்து பேச முற்படுகிறேன் அப்போது தான் ஒன்று புரிந்தது இந்த முகாமுக்கு பெயர்தான் 'அமைதி முகாம்' ஆனால் இங்குள்ள மக்களின் மனதில் அமைதியில்லையென்பது -

தெல்லிப்பழை மாவை கலட்டியிலிருந்து இடம்பெயர்ந்த 42 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேரின் வாழ்வியலோடு தொடர்புடைய இந்த முகாமின் நிலைமை வேதனைக்குரியது.

நான் யார் என்பதையும், ஏன் வந்தேன் என்பதையும் முதலில் அறிமுகம் செய்த பொழுது எங்களுடைய குறைகளைச் சொல்லி எழுதி எமக்குரிய விடிவைப் பெற்றுத் தாருங்கள் என்று வயோதிபர் ஒருவரின் குரல்கேட்டது.

அடுத்து நடுத்தர வயதுடைய இளம் குடும்பஸ்தர் இப்படி விவரிக்கிறார்.

'நான் பதினைந்து வயசில என்ர ஊரை, உறவைவிட்டுவிட்டு வெளிக்கிட்டனான். இப்ப கலியாணம் செய்து 4 பிள்ளைகள்... என்ர பிள்ளைகள் அடிக்கடி என்னிடம் கேட்பார்கள் எங்கட ஊர் எதப்பா என்று நான் சொல்லிக்கொடுத்ததன் பின்னர்தான் தெரியும் அவர்களுக்கு அவர்களின் ஊர் தெல்லிப்பழையென்று...

நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தானே ஏன் இப்படி எங்களைப் போட்டு வதைக்கிறார்கள். எங்களுக்கென்றொரு காணி - வீடு- தொழில் என்று நிம்மதியாக - சந்தோஷமாக வாழ்ந்த எங்களை குருவிக் கூட்டை சுட்டுக் கலைக்கிற மாதிரி கலைச்சுப் போட்டு ஆமிக்காரன் அதற்குள் ஆட்சி போடுகிறான்.

நாங்கள் இஞ்ச பலரிட்ட இடி வாங்கி உதவிகள் தாங்கோ என்று கையேந்தி வாழுகின்ற அவலநிலை.

நாங்கள் இருக்கிற இந்தக் காணிக்காரர் எங்களை வெளியேறச் சொல்லித் தினமும் அரியண்டம் தந்து கொண்டிருக்கிறார். இது தொடர்பாக அரச அதிபர், இடம்பெயர்ந்த நலன்புரி நிலையங்களின் சமாசம், விடுதலைப் புலிகள் என்று பலரிடம் அறிவிச்சிருக்கிறம். ஆனால், இந்தப் பிரச்சனைக்கு யாரும் இதுவரை தீர்வு காணேலை.

இப்ப இந்த 42 குடும்பமும் எங்க போற தென்று தெரியாமல் வழி தடுமாறி நிர்க்கதியாய் நிற்கின்றோம்.

காணிக்காரரின்ர அனுமதியில்லாததால யு.என்.எச்.சி.ஆரின்ர அரை நிரந்தர வீடும் கிடைக்கேல்ல. 39 குடிசைகள் அன்று தொடக்கம் இன்றுவரை அப்படியே கிடக்குது... மழை வந்தால் எங்கடபாடு தண்ணீருக்குள்ளதானே..., என்று வேதனையுடன் அவர் கூறிமுடித்தார்.

### தொண்டுநிறுவனம் ஒன்றின் கேவலமான செயற்பாடு

இன்னொருவரின் வேதனை இப்படித் தொடர்கிறது. தம்பி - நாங்கள் முகாமில இருக்கிறதால பலருக்கு ஏளனமும் நக்கலும் தொண்டு நிறுவனங்களில் சில எங்கட துன்பத்தில குளிர்காய நினைக்கினம். எங்களையொரு கேவலமாய் பார்க்கினம் அண்மையில் மானிப்பாயில இருக்கிற தொண்டு நிறுவனமொன்று எங்களுக்கு உடுப்புத் தாரமென்று சொல்லிப்போட்டு கொண்டு வந்து பழைய உடுப்புகளைக் கொட்டிப் போட்டு, வாங்கோ... எல்லோருக்கும் உடுப் புத்தரப்போறோம் என்று கௌரவமாகக் கூப்பிட்டார்கள்.

**இவர்களின் வாழ்க்கை நிலை 5 கேளீர்! பாரீர்!**

நாங்களும் ஓடிப்போனோம் அங்க போய்ப் பார்த்தால் தான் தெரியும் வெறும் கிழிஞ்ச உடுப்புக்கள், அதைவிட எங்களிடம் நல்ல உடுப்புகள் கிடக்குது... அகதி என்றால் உங்களுக்கென்ன அவ்வளவு கேவலமா? என்று பேசிவிட்டு அவர்களின் முகத்தில் தூக்கி எறிஞ்சுபோட்டம்.

இவ்வாறு அவர் சொல்லிக்கொண்டு இருக்கும்போது மேற்படி தொண்டு நிறுவனம் கொடுத்த பழைய கிழிஞ்ச சட்டை ஒன்றை என்னிடம் கொண்டுவந்து காட்டினார்.

அவர்கள் உடைமைகளை இழந்தவர்கள் தான். ஆனால், தமது கௌரவத்தையும், சுயமரியாதையையும் - இழக்கவில்லை என்பதை அந்தத் தொண்டு நிறுவனம் நன்கு உணரவேண்டும்.

### முன்பள்ளி இல்லை!

இந்த நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற மாணவர்களின், அதிலும் முன்பள்ளிச்சிறார்களின் நலனைக் கருத்திற்கொண்டு தம்முடைய முயற்சியால் முன்பள்ளிக் கொட்டகை ஒன்றினை அமைத்து சுமார் இரண்டரை வருடங்களாக நடத்தி வந்தார்கள்.

ஆனால், அங்கு கற்பிக்கும் ஆசிரியருக்கு மாதாந்த வேதனம் கொடுப்பதில் இருந்த இழுபறி நிலையினாலும், மாணவர்கள் கல்வி கற்பதற்கான பாதுகாப்பான கொட்டகையாக அது அமைக்கப்படாததாலும் அந்த முன் பள்ளி மூடப்பட்டுள்ளது.

இந்த முன்பள்ளியை மீள இயக்கி இங்குள்ள மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு ஒளியேற்ற யாராவது முன்வருவார்களா? என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

### சொந்த ஊருக்கும் இதுக்கும் எவ்வளவோ வித்தியாசம்

அங்குள்ள முதியவர் ஒருவருடன் மனம் விட்டுப் பேசினேன். அவரின் உள்ளத்திலிருந்து...

தம்பி எனக்கு 50 வயதில என்ர ஊரை விட்டுப்பிரிஞ்சன்... இப்ப எனக்கு 65 வயசாச்சு... எங்கட ஊரில நாங்கள் தொழில் செய்ததற்கும். இங்கு வந்து தொழில்செய்யிறத்துக்கும். எவ்வளவோ வித்தியாசம். அங்க உழைக்கிற காசில மிச்சம் பிடிச்சு வீடு கட்டுவம், சீட்டுக்கட்டுவம். ஆனால், இஞ்ச அப்படி ஒன்றும் செய்யமுடியிறதில்லை. ஏனென்றால் எங்களுக்கென்றொரு நிரந்தர தொழிலை செய்யமுடியிறதில்லை.

என்ர சொந்த ஊரை மீண்டும் பார்க்காமல் சங்கானையில்தான் என்ர மூச்சு நிக்குமோ? என்று நினைக்க கவலையாக இருக்குது - என்றார்...

இங்கு சுமார் 29 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள் அவர்களில் பலர் ஜி.சீ.ஈ. உயர் தரக் கல்வி கற்கி றார்கள் ஆனால், அவர்கள் கற்பதற்குரிய சூழல் அங்கு இல்லை என்பது அவர்களோடு பேசியபோது காணமுடிந்தது.

ஒழுங்கான வீடுகள் இல்லை. அமைதியான சூழல்இல்லை. இந்த அவல நிலையில் எப்படி மனதினை ஒரு நிலைப்படுத்தி குப்பிவிளக்கில் கல்விகற்பது? பேசாமல் இந்தப் படிப்பைவிட்டுவிட்டு வேலை ஏதாவது செய்யலாம் என்று பார்க்கிறன். இது அங்குள்ள உயர்தரம் கற்கும் மாணவன் ஒருவரின் உள்ளக்குமுறல்.



சங்கானை அமைதி முகாமில் உள்ள குடிசையொன்றின் அவலநிலை இது...

### எங்களை வெளியேற்றிவிட்டு எதற்காகப் பாதுகாப்பு வலயம்

எத்தனை நாளைக்குத்தான் இதுக்குள்ள கிடந்து சிறைவாழ்க்கை வாழுறது. எங்கட ஊருக்கு விடலாம்தானே . ஏன் இப்படி உயர்பாதுகாப்பு வலயமென்று பொத்தி பொத்தி வைச்சிருக்கிறாங்கள். அதுசரி மக்களை வெளியேற்றிப்போட்டு பிறகேன் அது பாதுகாப்பு வலயமென்ற பெயரோடு இருக்குது. இது அங்குள்ள மூதாட்டியின் ஆக்ரோஷமான கேள்வி.

### அட்டகிரி அகதிமுகாம் மக்களின் அவலநிலை

நவாலியிலுள்ள அட்டகிரி I, II முகாமுக்குச் செல்கின்றேன்.

அங்கும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 156 பேர் தங்கியிருந்தார்கள்.

அவர்களுக்கு அரை நிரந்தர வீடுகள் தொண்டு நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள 35 வயதுடைய பெண்மணி ஒருவரிடம் உங்களுக்கு வீடுகளெல்லாம் அமைத்துத் தரப்பட்டுள்ளதே... ஒரு பிரச்சினையும் இல்லைத் தானே என்று சிரித்தபடி கேட்டேன்.

வீடு கிடக்குத்தானே இவர்களுக்கு என்ன பிரச்சினையென்றுதான் பலர் நினைக்கிறார்கள். ஆனால், நாங்கள் இதுக்குள்ள படுகிறபாடு யாருக்குத்தான் தெரியப் போகுது... பெருமூச்சுடன் கூறினார் அந்த அக்கா.

இதற்கிடையில் என்னிடம் ஓடிவந்த வயோதிபப் பெண்மணி ஒருவர் தம்பி நான் பல லட்சம் ரூபா செலவழிச்சு வீடொன்று ஊரில கட்டினனான் ஆனால், அதில ஒரு மாதம் கூட ஒழுங்காக இருக்க முடியேல்ல. அந்த வீடு இன்றைக்கு தரைமட்டமாய்ப் போச்சுதாம் என்று கேள்விப்பட்டன்.

மழை காலத்தில இந்த முகாமில இருக்கேலாது காரணம் அப்போதெல்லாம் இந்தக்காணி பெரிய குளமாகிவிடும் அது மட்டுமல்ல வீட்டுக்குள்ளேயெல்லாம் தண்ணீர் புகுந்துவிடும். தொற்று வருத்தம் தாராளமாக வரும். குழந்தைகள் தான் பாவங்கள் என்று அவர் கூறி முடித்தார்.

இருபது வயதுடைய இளம் யுவதி ஒருவர் இப்படிக் கேட்கிறார். தெல்லிப்பழை ஆஸ்பத்திரி திறந்து விட்டாச்சாம் என்று பேப்பரில படிச்சம். அப்பிடி என்டால் எங்கட வீடு அந்த ஆஸ்பத்திரிக்குப்பக்கத்தில் தான் நாங்களும் ஊருக்குப் போகலாமா...?

ஐந்து வயதில் தனது ஊரைப்பிரிந்த அந்த உள்ளம் இருபதாவது வயதிலாவது அதனைப் பார்க்கவேண்டும். இந்த அகதி வாழ்விலிருந்து விடுபட்டு சொந்த மண்ணில் நிம்மதியாய் வாழவேண்டும் என்ற துடிப்புடன் இருக்கிறது என்பதை அறிய முடிந்தது.

இங்கு தண்ணீர் வசதி, மலசலகூட வசதி என்பன ஓரளவு திருப்தி யானதாக விருந்தாலும் குடிதண்ணீருக்குச் சற்றுத் தூரம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முதியவர் ஒருவர் தனது மன அழுத்தத்தை இப்படிக் கூறுகிறார்.

எங்கட ஊரில என்றால் ஒரு குலதெய்வம் இருக்கும் அங்க போனால் நாங்கள் காலை, மாலை என்று வழிபாட்டில் ஈடுபடுவோம். ஆனால், இங்க அப்படிக் கோயிலுக்குப் போய் கும்பிடப்போனால் அகதிகள் வந்து நிற்குதுகள் என்று வாய் கூசாமல் வாய்க்கு வந்தபடி கதைத்துக் கொள்கிறார்கள்.

இந்தக் கணப்பொழுதுகளில் எங்கட மனம் என்ன பாடுபாடும் தெரியுமா? ஒரு நாளைக்கு தமது சொந்த வீட்டை விட்டுட்டு ஒரு உறவினர் வீட்டைபோய் தங்கி நிற்கிறதென்றாலே எவ்வளவு சினம் பிடிச்சிடும். நாங்கள் 15 வருஷமாக சொந்த ஊரை விட்டுவிட்டு, வீடுகளை விட்டுட்டு அகதி வாழ்க்கையை வாழுகின்றோம். என்றால் எங்களுக்கு எப்பிடியிருக்கும் எங்கட நிலைமையை கொஞ்சம் யோசிச்சுப்பாருங்கோ என்று மிகவும் மனம் நொந்தபடி கூறுகிறார்.

இங்கும் 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கிறார்கள். ஆனால், அவர்கள் கல்வியைத் தொடர்வதற்குரிய சுமுகமான - ஆரோக்கியமான சூழல் இல்லை என் பது அங்குள்ளவர்களின் ஆதங்கம்.

அவர்களின் எதிர்காலம் இப்படியே கிடந்து பாழாய்ப்போகின்றதென்று தினம் தினம் கண்ணீர் வடிக்கிறார்கள்.

எங்கட இந்த அவலத்தை எத்தனை நாளைக்குத்தான் இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்கப்போகுது. எங்கட ஊருக்குப் போகவேண்டும்.

எத்தனை நாளைக்குத்தான் இவர்கள் இத்தகைய இன்னல்களை அனுபவிப்பது? இவர்களுக்கு விடிவில்லையா? துயரங்களுக்கு முடிவில்லையா?

சமாதான காலத்திலும் இவர்களின் அவலம் தொடர்கதையா? இவர்கள் ஊர் போகும் வரைக்குமாவது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து சுமுகமாக எளிமையாக வாழ வழிகாட்டுங்கள். உங்கள் வழிகாட்டல் அவர்களுக்கு ஒளியேற்றட்டும்.

*அபிமானன்*

புத்தூர் சிவன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி - 2005

**இறுதி நிகழ்வுகள்**

காலம்: இன்று (24.07.2005) ஞாயிறு பி.ப.2.30 மணி
இடம்: புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி மைதானம்
தலைவர்: செல்வன் சி.கோபிகிருஷ்ணா
அணிகள்: அச்சுவேலி மத்தி விளையாட்டுக்கழகம் எதிர் சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழகம்

பிரதம விருந்தினர்:
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன்
(தமிழ்க் கூட்டமைப்பு - யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்: திரு.மாதுளன்
(பொறுப்பாளர், தமிழீழ விளையாட்டுத்துறை, யாழ்.மாவட்டம்)
திரு.வ.ஆறுமுகம்
(அதிபர், யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்)

கௌரவவிருந்தினர்கள் : திரு.து.மோகன்ராஜ்
(சிவன் விளையாட்டுக் கழக போசகர்)
திரு.க.சுதாகரன்
(விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்)
திரு.அ.மதனசேகரம்
(கிராம சேவையாளர், புத்தூர் மேற்கு)

ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

புத்தூர். (38116)(42-11-19) - **ஏற்பாட்டாளர்கள்.**

# நன்றி நவிலல்

## அமரர் நிர்மலாதேவி அம்பலவாணர்

புங்குடுதீவு- தென்னிந்திய திருச்சபை பொறுப்பாளராகிய திரு.A.R.அம்பலவாணரின் துணைவியார் **அமரர் நிர்மலாதேவி** கடந்த 08.07.2005 கர்த்தருக்குள் நித்திரை அடைந்த செய்தி கேள்வியுற்று நேரில் சமுகம் தந்து தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, எல்லா வகையிலும் எங்களுக்கு உதவி செய்த புங்குடுதீவு வாழ் மக்கள் அனைவருக்கும், தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர், புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அவர்களுக்கும் அவரின் யாழ்.மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும், நயினாதீவு- புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருக்கும், தென்னிந்தியத் திருச்சபைக் குருமார் அனைவருக்கும், பரி.யோவான் கல்லூரி அதிபர் அவர்கட்கும், உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தனிப்பட்ட முறையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள முடியாததற்கு மனம் வருந்துகின்றோம்.

கணவர்- A.R.அம்பலவாணர்,
மகன்- தேவஹரன்,
தாய், சகோதர சகோதரிகள்.

(38117)(39-11-19)

# மரண அறிவித்தல்கள்



## கந்தையா சதாசிவம்

காரைநகர், சள்ளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம் அவர்கள் 22.07.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் மல்லிகா, தவமலர், சந்திரசேகரன் (சங்கர் மில், வந்தாறுமூலை, மட்டக்களப்பு), சண்முகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராசா, சிவலிங்கம், வசந்தா ஆகியோரின் அன்பு மாமானாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சள்ளை,
காரைநகர். (38112)(42-11-19)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



திருமதி

## ஆழ்வாப்பிள்ளைஇராசம்மா

சாளம்பை, புலோலி மேற்கைச் சேர்ந்த திருமதி இராசம்மா ஆழ்வாப்பிள்ளை அவர்கள் 22.07.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா ஆழ்வாப்பிள்ளையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு- சின்னம்மா தம்பதியினரின் மகளும் இராஜேஸ்வரி, மகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா (கணனி பொறியியலாளர்- கனடா), கமலேஸ்வரி (ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மார்க்கண்டேயபிள்ளை (ஓய்வுபெற்ற மின்பொறியியலாளர்) மற்றும் தங்கராஜா (ஜெயகணேசா ஸ்ரோஸ்), காலஞ்சென்ற உதயசங்கர் மற்றும் நித்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் V.M.ராஜா, காலஞ்சென்றவர்களான செல்லையா (ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்), சின்னத்துரை, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரஞ்சன் (லண்டன்), சுகந்தன் (லண்டன்), சிவகௌரி (பொறியியலாளர்), செந்தூரன், சுபானந்தி (இலங்கை திறந்த பல்கலைக் கழகம்- யாழ்ப்பாணம்), இராகுலன் (லண்டன்), சுமித்திரா (பிரான்ஸ்), கார்த்தீபன் (லண்டன்), அனுராதா (கணக்காளர்), தேனுகா (கொழும்பு பல்கலைக்கழகம்), சகானா (கனடா), சிந்துஜா (கனடா), முருகமகிந்தன் (கொழும்பு- இந்துக் கல்லூரி), பிரசாந்த் (றோயல் கல்லூரி- கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சங்கீத், உதேஷ் (லண்டன்), சௌமியா, இஷானி, சம்யுக்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 4 மணியளவில் புலோலி மேற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாளம்பை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
T.P:021- 2263765

தகவல்:
லயன் க.தங்கராஜா (மருமகன்)
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்- பருத்தித்துறை)

(38111)(39-11-19)

## எல்லாளன் நாடகம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை24

இசைமலர் நாடக மன்றம் வழங்கும் எல்லாளன் (வரலாற்றுக் கற்பனை) நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிக்கு பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டரங்கில் நடைபெறும்.

கவிஞர் ஜி.தேவதாசனின் எழுத்துருவாக்கத்தில் ஆசிரியர் எ.எல்விஸ் இந் நாடகத்தை நெறியாள்கை செய்துள்ளார். (8-202)

## நூல்தினமும் நடமாடும் சேவையும்

யாழ்ப்பாணம்,ஜூலை24

மாணவர்களின் வாசிப்பு முயற்சியைத் தூண்டும் நோக்குடன் வெளிச்ச வீட்டுப் பாடசாலை நூல் தினமும் நடமாடும் நூலக சேவையும் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.பொதுநூலகத்தின் நடமாடும் நூலகப் பிரிவு, பிராந்திய ஆங்கில ஆதரவு நிலையம் ஆகியவற்றுடன் நூல் தினம் அனுஷ்டிக்கப் படவிருக்கிறது.

அன்றைய தினம் பி.ப. 2.30 மணி தொடக்கம் ஏனைய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனஅனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள முடியும். (எ-203)

## பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி,ஜூலை24

கட்டட நிர்மாணமும் வடிவமைப்பும் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இரணைமடுவிலுள்ள பொருண்மிய மதியுரையகத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

## நீரிழிவு நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை24

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நீரிழிவு நிலையத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விசுவநாதர் வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (எ-202)

## சமய செய்திகள்

தொண்டைமானாறு கெருடாவில் ஸ்ரீ ஞான வைரவ தேவஸ்தான அலங்கார உற்சவத்தை முன்னிட்டு விசேட பொங்கல் விழா எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் அலங்கார உற்சவம் நடைபெற்று வருவது தெரிந்ததே. (எ-204)

* *

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.வண்ணை- கன்னாதிட்டி காளியாம்பாள் தேவஸ்தானத்தில் ஆடிப் பூர உற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-204)

* *

கொழும்புத்துறை,ஜூலை24

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் காலை 4 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெறும். (எ-30)


**வாணி சோதிடம்**

1963 முதல் இன்று வரை கைரேகை, ஜாதகம் குறிப்பு எழுதியும் கல்வி, தொழில், வெளியூர் பயணம், காதல், நீண்டகாலம் திருமணத் தடை, மனை அமைப்புக்குறை, சில வைத்தியத்தில் புலப்படாத வினைய நோய்கள் பற்றித் தெரிந்து கொள்ளவும் எம்மிடம் வாருங்கள் கேட்டுப்பார்த்து உண்மையெனில் பணம் தரவும். அத்துடன் திருமணத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஆண், பெண் குறிப்புகள் உண்டு. தொடர்பு கொள்ளவும்.

கவனிப்பு
எமக்கு தற்போது வேறு கிளைகள் இல்லை.

இல.22/1,கச்சேரி
ஒழுங்கை,
நல்லூர். (38113)(42-11-19)

வாணி சோதிடம்
சோதிடர் சி.கணேசன்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு
06
-
02
-
1947



இறப்பு
24
-
06
-
2005

## அமரர் செல்லப்பா சண்முகசுந்தரம்

(திருநாமம்)

24.06.2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது குலவிளக்கு செல்லப்பா சண்முகசுந்தரம் அவர்களுடைய அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

- குடும்பத்தினர்.
(38121)(391-11-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12
-
11
-
1923



உதிர்வு
04
-
08
-
2004

அமரர்

## சண்முகம் விஜயரட்ணம்

தாங்கள் இப் பூவுலகில் வாழ்ந்த காலத்தில் பொதுமக்களுக்கும் சாயி பக்தர்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும் ஆற்றிய சேவைகளையும் சொல்லிலடங்கா பேருதவிகளையும் தங்களின் முதலாம் ஆண்டு நினைவுதினமாகிய இன்று நினைவு கூர்ந்து சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் அன்னாரின் இல்லத்தில் இன்று 24.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு இடம் பெறும்.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல.82,
நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
(சி-44324)(21-11-19)

# நெஞ்சகலாத நினைவஞ்சலி

**22 ஆம் ஆண்டு** **9ஆம் ஆண்டு**



அமரர் **எஸ்.சரவணமுத்து**
B.A. (லண்டன்)
(இளைப்பாறிய ஆசிரியர்)
பிறப்பு: 19-04-1901
இறப்பு: 24-07-1983



அமரர் **சு.கலாபரமேஸ்வரன்**
M.A. (முன்னாள் திட்டமிடல் அதிகாரி)
02-08-1944
24-07-1983



அமரர் **தி.சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய விவாக, பிறப்பு, இறப்பு,பதிவாளர்- புத்தூர்)
23-03-1906
06-05-1996

**ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவு மாறவே மாறாது!**

சு.தி.சிவலோகநாதன் J.P.
இலட்சுமிபதி.
526, பலாலி றோட், திருநெல்வேலி.

(38124)(39-11-19)

தங்களை நினைவு கூரும்
குடும்பத்தினர்,
சுன்னாகம் றோட், புத்தூர்.

# சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்



இந்தியப் பணத்தில் சுமார் 250 கோடி ரூபா் செலவழித்து 15 வருடங்கள் நடத்தப்பட்ட போபர்ஸ் ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். எதிர்க் கட்சிகள் காங்கிரஸ் கட்சியைத் தாக்கப் பயன்படுத்திய துருப்புச் சீட்டான போபர்ஸ் ஊழல் குற்றச்சாட்டு அத்துடன் உப்புச் சப்பில்லாமல் போனது. இதனால், நிம்மதிப் பெருமூச்சு விட் டது காங்கிரஸ் மேலிடம்.

ஆனால், இந்த நிம்மதி அதிககாலம் நீடிக்கவில்லை. இந்திய உயர்நீதிமன்றத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கல்செய்த மனுவே இதற்குக் காரணம். போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் குறித்து 1987ஆம் ஆண்டு சுவீடன் வானொலி தகவல் வெளியிட்டது. இது குறித்து இந்திய மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) விசாரணை நடத் தியது.

இந்திய இராணுவத்துக்கு போபர்ஸ் பீரங்கிகளை வாங்கியதில் 65 கோடி இந்திய ரூபா தரகுப் பணமாகக் கைமாறியதாகக் கூறப்பட்டது.

பீரங்கிகளை வாங்கிய வேளையில், பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி, அவரது மனைவி சோனியாவின் உறவினரும், இத்தாலியைச் சேர்ந்த ஆயுதத் தரகருமான குவாட்ரோச்சி, இந்தியரான வின்சத்தா, பிரிட்டனில் வசிக்கும் இந்தியத் தொழிலதிபர்களான இந்துஜா சகோதரர்கள் ஆகியோர் இதில் பயனடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரணை

அயலகம்



இந்திரஜித்

நடத்திய சி.பி.ஐ. ஒருவாறு வழக்கும் தாக்கல் செய்தது. இதன் பிறகு வழக்கு இழுத்தடிக்கப்பட்டு கடைசியில் போபர்ஸ் பீரங்கி பேரத்தில் எவரும் தரகுப் பணம் பெற்றதற்கு ஆதாரமில்லை என்று சமீபத்திபத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த வழக்குக்காக சுமார் 15 வருடகாலமும், 250 கோடி ரூபா இந்திய அரசுப் பணமும் செலவாகியுள்ளன.



இதிலும், சோனியாவின் உறவினரான குவாட்ரோட்சியை மலேசியாவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வந்து விசாரிக்க சி.பி.ஐ. மேற்கொண்ட பிரயத்தனங்கள் பயனளிக்கவில்லை. ராஜீவ் காந்தியும், வின்சத்தாவும் வழக்கு நடைபெறும் போதே இறந்துவிட்டனர். இறுதியாக இந்துஜா சகோதரர்களும் விடுதலை பெற்றுவிட்டனர். இந்த நிலையில்தான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ராம்நிஹோர் ராகேஷ் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தார்.

அந்த மனுவில் 65 கோடி ரூபா தரகுப் பணம் கைமாறிய விவகாரம் குறித்து விசாரிக்க 250 கோடி ரூபா செலவிடப்பட்டமை முறையானதா? இந்த ஊதாரித்தனமான செலவுகளுக்கு யார்பொறுப்பேற்பது? இந்த வழக்கில் சி.பி.ஐ. அரசியல் கட்சிகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப செயற்பட்டுள்ளது. ஆகவே, சி.பி.ஐயை ஆளும் கட்சிகள் துஷ்பிரயோகம் செய்வதை உயர்நீதிமன்றம் தடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த மனுமீதான விசாரணை இந்திய அரசியலில் அப்படியொன்றும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடப் போவதில்லை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால், எதிர்க்கட்சிகள் இதனைப் பிடித்துக் கொண்டு தாக்கப்போகின்றனவே என்பதுதான் காங்கி ரஸ் கட்சியின் கவலை.

# வேலியே பயிரை மேய்ந்ததால்...

உலகில் உள்ள புவியியல் மற்றும் கால நிலைகள் அனைத்தும் கொண்டது இந்தியா என்று இந்தியர்கள் பெருமைப்படுவதுண்டு. உலகிலேயே அதிக சனத்தொகை உள்ள நாடு என்ற பெயரை விரைவில் சீனாவிடமிருந்து இந்தியா தனதாக்கும் என்று கருதப்படுகிறது. அந்த அளவிற்கு மனித சக்தியும் அதிகமுள்ளது. அறிவியலில் வளர்ச்சி பெற்ற நாடாக அது உள்ளது.

இத்தனை இருந்தும் வளர்ச்சி பெற்றும் வல்லரசுக் கனவைக்கூட நிஜமாக்கமுடியாது, நாட்டை அழுத்தும் கடன்சுமையிலிருந்து மீளவழியறியாத நாடாகவே இந்தியா உள்ளது. இதற்கு பிரதான காரணங்கள் என்று சுயநல அரசியலையும், லஞ்ச ஊழலையும் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் டிரான்பான்ஸி இன்ரர் நேஷனல் நிறுவனமும், தகவல் சாதனங்கள் ஆய்வுமையமும் இணைந்து ஆய்வொன்றை நடத்தியுள்ளன.

இந்திய மாநிலங்களில் லஞ்ச ஊழலின் அளவு குறித்தே இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இதில் மாட்டுத்தீவன ஊழல் புகழ் லல்லு பிரசாத் யாதவ் அரசியல் நடத்தும் பீகார் மாநிலத்தில் ஊழல் அதிகம் இடம்பெறுவதாகத் தெரியவந்துள்ளது. இந்தியாவில் படிப்பறிவு அதிகமான கேரள மாநிலத்தில் ஊழல் குறைவாக உள்ளமையும் அதிக ஊழல் இடம்பெறும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் 12ஆவது இடத்தில் உள்ளமையும் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 20 மாநிலங்களில் 151 மாவட்டங்களில் உள்ள 356 கிராமங்களை மாதிரிகளாகக்கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

லஞ்ச ஊழல் குறைவாக உள்ள மாநிலங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள பட்டியல் வருமாறு:-

கேரளம், இமாச்சலம், குஜராத், ஆந்திரம், மகாராஷ்டிரம், சட்டீஸ்கர், பஞ்சாப், மேற்கு வங்கம், ஒரிசா, உத்தரப் பிரதேசம், டில்லி, தமிழகம், ஹரியாணா, ஜார்கண்ட், அசாம், ராஜஸ்தான், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், பீஹார்.

இதேவேளை, இந்தியாவில் செயற்படும் 11 அரசுத்துறைகளில் பொலீஸ் துறையிலேயே அதிகளவில் லஞ்சம் தலைவிரித்தாடுவதாகவும்-

பொலீஸாரின் அடிப்படைக் கடமையான வழக்கைப் பதிவுசெய்து, அதனை நீதிமன்றத்தில் நடத்துவதற்குக் கூட லஞ்சம் வழங்கவேண்டியுள்ளதாக பலரும் தெரிவித்தனர் என்றும்-ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண பொது மக்கள் அரசுத்துறை களில் தமது பணியை நிறைவேற்ற ஆண் டுக்கு இந்தியப்பணத்தில் சுமார் 21 ஆயி ரத்து 68 கோடி ரூபாவை லஞ்சமாகக் கொடுக்கிறார்கள் என்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# வேலியில் போன ஓணானை மடியில் கட்டியதால் வினை



தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம், இடதுகம்யூனிஸ்ட், வலதுகம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் உள்ளன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இக்கூட்டணி தமிழகத்தில் 40 தொகுதிகளிலும் வென்றது. சட்டமன்றத் தேர்தலிலும் இக்கூட்டணி தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் இளங்கோவன் பேச்சால் சமீபத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸின் தமிழ் ஆதரவு நடவடிக்கைகளை இளங்கோவன் குறை கூறினார்.



விளம்பரப் பலகைகளில் ஆங்கில எழுத்தை அழிப்பதும், சினிமாப் படங்களுக்கு தமிழில் பெயர் சூட்ட வற்புறுத்துவதும் காட்டுமிராண்டித்தனமான காலத்துக்கு அழைத்துச் செல்லும் செயல் என்றும் இளங்கோவன் விமர்சித்தார். இளங்கோவனின் இந்தப் பேச்சு பா.ம.க. தலைவர்களை ஆத்திரப்படுத்தியது. தமிழ் பகைவர்களுக்கு ஆதரவாக அவர் செயற்படுவதாக ராமதாஸ் குற்றஞ்சாட்டினார்.

இதற்கிடையில் தமிழுக்கு எதிரான விவாதத்தைச் செய்ய இளங்கோவனை கருணாநிதி தூண்டிவிட்டார் என்று திருமாவளவன் கூறினார். கருணாநிதி இதை மறுத்தார்.



கருணாநிதியைத் திருமாவளவன் விமர்சித்ததில் ராமதாஸுக்கு உடன்பாடு இல்லை என்று கூறப்படுகின்றது. இருவரும் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்து நடத்துகின்றனர். அதேநேரம் தமிழக ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவரான கருணாநிதியை இப்பிரச்சினையில் இணைத்து திருமாவளவன் குறை சொன்னதை ராமதாஸ் விரும்பவில்லை.

இதனால், இருவருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கையுடன் இந்திய அரசு இராணுவ ஒப்பந்தம்செய்யக்கூடாது என்று வலியுறுத்தி திருமாவளவன் கடந்த மாதம் சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார். இந்த உண்ணாவிரதத்தை ராமதாஸ் முடித்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், ராமதாஸ் வரவில்லை. அவர் வந்திருந்தால் திருமாவளவனின் கருணாநிதிக்கு எதிரான பேச்சை ஆமோதிப்பது போல் ஆகியிருக்கும். எனவே, புறக்கணித்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க சேது சமுத்திரத்திட்ட ஆரம்பவிழாவில் டாக்டர் ராமதாஸ் கலந்து கொள்ளவில்லை. இதனால், அவர் அ.தி.மு.க. பக்கம் சாய்கிறார் என்று பேச்சு அடிபடத் தொடங்கியுள்ளது.

அரசியல் சாணக்கியர் இவர்களை எப்படிச் சமாளிக்கப்போகிறாரோ? *

# தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும்.....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்பெயினிலுள்ள முஸ்லிம் சமூகங்களின் தலைவர் நியாய் தாத்தாரி பாக்ரி தமது அறிக்கையில், லண்டனில் நடத்தப்பட்ட தாக்குதல் கடந்த ஆண்டு மாட்றிட் ரயில் குண்டு வெடிப்புப் போன்று சகல முஸ்லிம்களையும் இம்சைப்படுத்துவதாக உள்ளது. குறிப்பாக ஐரோப்பாவிலுள்ள முஸ்லிம்கள் பெரிதாகப் பாதிக்கப்படுகிறார்கள். இது சமூகங்களுக்கிடையில் நல்லுறவைக் கெடுத்து விடும் - என்றார்.

ஜேர்மன், நெதர்லாந்து, ரோம் போன்ற நாடுகளிலுள்ள முஸ்லிம் அமைப்புகளும் கண்டித்துள்ளன.

அல்ஜீரியாவைச் சேர்ந்த மாலெக் செபல் என்ற இஸ்லாமிய அறிஞர் கருத்து வெளியிடுகையில், ஒரு முஸ்லிம் செய்யும் காரியத்துக்கு எல்லா முஸ்லிம்களும் பொறுப்பாளிகளாகிறார்கள் என்று கூறினார்.

மலேசியப் பிரதமர் அப்துல்லாஹ்! அகமத் பதாவி கூறுகையில், சிலர் தாங்கள் செய்யும் காரியங்களுக்கு இஸ்லாம் பணயம் வைக்கப்படுகின்றது - என்றார்.

எகிப்தில் முக்கிய எதிர்க்கட்சியாக இருக்கும் அரபு உலக முஸ்லிம் சகோதரத்துவ ஸ்தாபனம், இது ஒரு சட்டவிரோத செயல்; இஸ்லாத்துக்கு மாறான செயல் என்று கண்டித்துள்ளார்.

* * *

### நெல்சன் மண்டேலாவின் பிறந்தநாள்

தென்னாபிரிக்க விடுதலை இயக்கத்தின் தலைவரும் முதலாவது ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலாவின் 87ஆவது பிறந்த தினம் கடந்தவாரம் தென்னாபிரிக்கா முழுவதும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

விடுதலைப் போரின்போது மண்டேலா அடைத்துவைக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்கச் சிறை அறையில் விசேஷமாக ஏற்றி வைக்கப்பட்ட ஒளிச்சுடருடன் கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தென்னாபிரிக்க மக்கள் மத்தியில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மண்டேலா ஆரம்பித்துள்ள இயக்கத்தின் ஒருபகுதியாக இந்த ஒளிச்சுடர் ஏற்றும் வைபவம் ஆரம்பமாயிற்று.

கேப்டவுனுக்கு அப்பால் நோபன் தீவுகளில் மண்டேலா தமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தின்போது இருபது ஆண்டுகளுக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையில் கடந்த திங்கள் நள்ளிரவுக்குப் பிறகு ஒளிச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. வெள்ளையர் ஆட்சியிலிருந்து தென்னாபிரிக்காவை விடுவிக்கவும், நிற ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டுவந்து ஜனநாயகத்தை நிலைநாட்டவுமென நெல்சன் மண்டேலா போராடியதற்காக இந்தத் தீவிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

சிறையிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒளிச்சுடர் நாடு முழுவதும் எடுத்துச் செல்லப்படும் என்றும் தென்னாபிரிக்க மக்கள் மத்தியில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மண்டேலா கொண்டிருக்கும் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இது செயற்படுத்தப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

தென்னாபிரிக்காவின் 47 மில்லியன் மக்களில் 5 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோய்க்குள்ளாகியிருக்கின்றார்கள். இம்மக்களை இந்நோயிலிருந்து விடுவிப்பதற்காக அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நெல்சன் மண்டேலா அறக்கட்டளை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது.

மண்டேலா சிறையிலிருந்த அறையின் 46664 என்ற இலக்கத்தை மையமாக வைத்து இந்த இயக்கம் நடத்தப்படுகின்றது. கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெற்றுவருகின்றன. கென்யாவின் இயற்கை வளஆர்வலரும் நோபல் பரிசாளருமான வங்காரி மாத்தாயும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்றார்.

### பலஸ்தீன மோதல் முடிவுற்றது

பலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாஸின் பதா கட்சியினருக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்று வந்த மோதல்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளன. இருதரப்புக்குமிடையில் கடந்த ஒருவாரமாக மிகமோசமான மோதல்கள் இடம்பெற்றுவந்தன. பலஸ்தீனர்களுக்கிடையில் இவ்வாறான உள்வீட்டு மோதல்களினால் இஸ்ரேலியரின் கெடுபிடிகள்அதிகரித்துவிடும் என்று கருதப்பட்டது.

தாக்குதல்களை நிறுத்துவதற்கு இருதரப்பும் ஒப்புக்கொண்டதையடுத்துத் துப்பாக்கிச் சண்டை ஓய்வுக்கு வந்தது.

எதிரிகளுக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு நிற்பதுவே முதலில் முக்கியம் என்று ஹமாஸ் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, காஸாப் பகுதியில் ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் கடுமையான மோதல் ஒன்று வெடித்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேலியரை வெளியேற்றும் பிரதமர் ஷிசோனின் திட்டத்தை முறியடிப்பதற்காக ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் காஸா பகுதிக்குள் நுழைய முற்பட்டதைப் பொலீஸார் தடுக்கமுற்பட்டபோது மோதல் ஏற்பட்டது. *

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ.உ)
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வங்கியின்
வாடிக்கையாளர்கள்,
பொதுமக்கள் நலன் கருதி
தனது சேவையை
சிறந்த முறையில்
ஆற்றிவரும் சங்கானை
மக்கள் வங்கியின்
முகாமையாளர்

### திரு.பொன்னையா அச்சுதம்பிள்ளை

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக, யாழ்ப்பாணம் பதில் மாவட்ட நீதிபதி முன்னிலையில் 27-06-2005 இல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவருக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிப்பதோடு, அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும் பணியாளர்களும்
சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
சங்கானை.

(சி.44311)(26.14.19)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்
## பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்

காலம் : 31-07-2005 ஞாயிறு காலை 10 மணி
இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

✲ பொதுச்சபை உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது.

இரா.செல்வவடிவேல்,
உப செயலாளர்,
யா.இ.க.ப.மா.ச.

(சி.44301)(26.14.19)

---

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
## முல்லைத்தீவு

வழக்கு இல: 713 /2004
தன்மை: நானாவிதம்

திருமதி மதியழகன் சுகந்தி
4ஆம் கட்டை, அளம்பில்,
முல்லைத்தீவு.
*வழக்காளி*

திரு.சங்கரலிங்கம் இதயநாதன்,
6ஆம் கட்டை, அளம்பில்,
முல்லைத்தீவு,
*எதிராளி*

### பகிரங்க அறிவித்தல்

வழக்காளியால் தொடுக்கப்பட்ட இவ்வழக்கில் நீதிமன்றினால் தீர்க்கப்பட்ட வழக்காளிக்குரிய முதற்பணம் 42,000/- ரூபாவையும் அதற்குண்டான வட்டி 12,000/- ரூபாவையும் வழக்கு செலவு 2525/- ஐயும் செலுத்த வேண்டியிருந்தும் எதிராளி மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அவர் உடைமையில் இருந்து 26ஸ்ரீ 1207 என்னும் இலக்க பாரஊர்தி மன்றினால் நடுக்கட்டிக் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இப் பாரஊர்தி தொடர்பாக உரித்துடையவர் 2005.08.16 ஆம் நாளுக்கு முன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் (புதுக்குடியிருப்பு) தோன்றி நடவடிக்கை எடுக்குமாறும், தவறுமிடத்து இப் பாரஊர்தி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும் எனவும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*'நீதி மன்றின் கட்டளைப்படி'*

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு,

வரைபு: கே.ஏ.அற்புதராஜா
சட்டத்தரணி.

(சி.44318)(26.14.19)

---

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் பார்த்திப வருடம் ஆனி மாதம் 32ஆம் நாள் (16-07-2005) சனிக்கிழமை பின்னிரவு சிவபதமடைந்த எமது தாயாராகிய

**திருமதி அமிர்தேஸ்வரி இராமநாதக் குருக்கள் அவர்களின்**

ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்: *ஆடி 9ஆம் நாள் (25-07-2005) திங்கட்கிழமை மு.ப.10மணி*
ஏகோதிஷ்டம், மாசியம்: *ஆடி 10ஆம் நாள் (26-07-2005) செவ்வாய்க்கிழமை*
சபிண்டீகரணம்: *ஆடி 11ஆம் நாள் (27-07-2005) புதன்கிழமை.*

*மேற்படி கிரியைகளிலும்,*

கிருஹயக்ஞம்: ஆடி 12ஆம் நாள் (28-07-2005) வியாழக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"அமிர்தபவனம்"
பன்னம்பதி ஒழுங்கை,
சிவன் கோயிலடி, பருத்தித்துறை.

இ.வரதராசக் குருக்கள் (மகன்),
இ.சபேசக் குருக்கள் (மகன்) மற்றும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(38017)(46.14.19.26)

---

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

24 07 2005




புலோலியைச் சேர்ந்த **பகீரதன்**, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த **புவலோஜினி** தம்பதிகளின் செல்வப்புதல்வன் செல்வன் **பிபிசன்** தனது மூத்த சகோதரியுடன் தன்னுடைய முதலாவது பிறந்த நாளை இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறான்.

செல்வன் பிபிசனை அம்மா அப்பா மற்றும் லண்டனில் வாழும் மாமா, சித்தி, சித்தப்பா மற்றும் அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உள்ளூர் உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல இறைவன் அருளால் பல்கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல் :ஆ.திருநாவுக்கரசு (அம்மப்பா)

(37993)(51-14-19)

---


### விற்பனைக்கு

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சிறந்த மூலிகையாகும். நீரிழிவு நோயாளர்களின் குருதி, குளுக்கோஸ், கொலஸ்ரோல், ரைகிளிசைரைட் ஆகியவற்றைக் குறைத்து நோயைக் குணமாக்கும் சிறந்த உப உணவாகும். (37272)

தொடர்பு: BIO TEC ORIENT (PVT) LTD.
*இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.*
T.P.021 4590907 (விவசாயப் பண்ணைக்கு அருகில்)


## வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு கிடைத்தது

குருநகர், ஜூலை 24

சமுர்த்தி அதிகாரசபையின் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ்.பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. யாழ்.பிரதேச செயலகம் மூலம் இத்தகவல் தெரியவந்துள்ளது.

ஜே/68 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வீதிப் புனரமைப்புக்கு 73 ஆயிரத்து 400 ரூபாவும் -

ஜே /72 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள கால்வாய் திருத்த வேலைக்கு 85 ஆயிரம் ரூபாவும் -

ஜே/ 74 கிராம உத்தியோகத்தர் பிரிவில் குழாய்க்கிணறு அமைக்கும் பணிக்கு 40 ஆயிரம் ரூபாவும் -

ஜே /85 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீதிப் புனரமைப்பை மேற்கொள்ள ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் பங்களிப்புடன் இவ்வேலைத்திட்டங்கள் யாவும் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## எழுதுநர் சேவைப் பரீட்சைப் பெறுபேறு

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பொதுஎழுதுநர் சேவை வகுப்பு II 'அ' பிரிவு வினைத்திறமைக்கான தடைப் பரீட்சை நடைபெற்றது. அதில் சித்தியடைந்தோருக்கான கடிதங்கள் வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சினால் உரிய பரீட்சார்த்திகள் சேவை புரியும் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-51)

## நீதிமன்ற வளாகம் புனரமைப்பு

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த நிலையில் காணப்படும் சாவகச்சேரி நீதிமன்ற வளாகம் புனரமைக்கப்படவுள்ளது.

வளாகத்தைத் துப்புரவு செய்வதற்கென யாழ்.அரச அதிபர் எட்டரை லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளார். (எ-117)

---


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☏0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☏. 021 222 2567

(C.43109)


---

## கெயர் சர்வதேசம்
### வாகனம் வாடகைக்கு வழங்குவதற்கான
## கேள்விப் பத்திரம் கோரல்

கெயர் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்ட நடவடிக்கைகளுக்கு அலுவலர் பாவிப்பதற்காக பின்வரும் வாகனங்கள் தேவைப்படுகின்றன.

(1) பிக்கப் (4சீற்) குளிரூட்டப்பட்டது (Double Cab)
(2) Hiace குளிரூட்டப்பட்டது.
(3) லாண்ட்மாஸ்ரர்
(4) ஹன்ரர் லொறி

மேலதிக விவரங்களுக்குப் பருத்தித்துறையில் உள்ள கெயர் அலுவலகத்துடன் கடமை நேரத்தில் தொடர்புகொள்ளவும். விண்ணப்பங்களை எமது **கெயர் நிறுவனம், பருத்தித்துறை** அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவும்.

(சி.44306)(26.14.19)

---

## நெஞ்சைவிட்டகலாத
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
*27 - 02 - 1936*



மறைவு
*04 - 08 - 2004*

### பொன்னையா சுந்தரலிங்கம்

*திதி: 24-07-2005*

*இறையோடு இணைந்திட்ட எமதன்புத் தெய்வமே!*
*என்றென்றும் எம்நெஞ்சோடு*
*அழியாத நினைவாக நிலைத்திருக்கும்*
*தங்கள் மகத்தான நினைவுகளை*
*மறந்திடத்தான் முடிந்திடுமா?*
*நிதம் அணையாத தீபமாய்*
*எம்வாழ்வின் வழிகாட்டியாய் இருந்து*
*எமைக் காத்தீர்கள்*
*தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை*
*என்றும் இறைஞ்சுகின்றோம்.*

*'பிறேமகம்',*
*சாவகச்சேரி வடக்கு.*

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*மற்றும் குடும்பத்தினர்.*

(37922)(46.14.19.26)

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினர் நடத்தும்

## கலை இலக்கியப் போட்டிகள் - 2005

வலிகாமம் மேற்கு பிரதேச கலை இலக்கியப் பெருவிழாவினை முன்னிட்டு மேற்படி போட்டிகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கலைஞர்களே உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

❖ வளர்ந்து வரும் கலைஞர்களை ஊக்குவித்து வாய்ப்பளித்தல்
❖ வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்குதல்

போட்டிக்கான தலைப்புகள்

❖ தனிநபர் போட்டி (8-10 நிமிடம்)
- கர்நாடக இசை - தானவர்ணமும் கீர்த்தனையும்
- சாஸ்திரீய நடனம் - சப்தமும் தில்லானாவும்
- வயலின் - தானவர்ணமும் கீர்த்தனையும்
- வீணை - தானவர்ணமும் கீர்த்தனையும்
- புல்லாங்குழல் - தானவர்ணமும் கீர்த்தனையும்
- மிருதங்கம் - ஆதி, ரூபக, சாபு தாளங்களில் அமைந்த தனியாவர்த்தனம் (லய விந்யாசம்)

❖ குழு - போட்டி (குறைந்தது 6 பேர்) (8-10 நிமிடம்)
கிராமிய நடனம் / கிராமிய இசை } அருவிவெட்டு, காவடிச்சிந்து கப்பல் பாடல்கள், கும்மி, கரகம், கோலாட்டம் மீனவர் பாடல் போன்றனவும் பிறவும்.....

❖ பேச்சு - தனிநபர் (5-7 நிமிடம்)
- இலக்கியம் காட்டும் இயற்கை வளம்
- யாழ்ப்பாண இலக்கிய வளர்ச்சியின் போக்கு
- ஒழுக்கம் விழுப்பம் தரும்

❖ வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 15 முதல் 20 வயது வரையுள்ள ஆண்/பெண்.

குறிப்பு:
விண்ணப்பப்படிவங்களை வலிமேற்கு பிரதேச செயலகத்தில் 25.07.2005 முதல் பெற்றுக்கொள்ளலாம்.
போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி: 01.08.2005
போட்டிகள் 06.08.2005, 07.08.2005 இரண்டு தினங்களிலும் பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

பிரதேசசெயலகம், சங்கானை. (C-44327)(25-15-45-12)
பிரதேச செயலர்/ தலைவர், வலிமேற்கு கலாசாரப் பேரவை.


# 148 ஓட்டங்களால் இலங்கைமுன்னணி

இலங்கை அணிக்கும் மேற்கிந்திய அணிக்கும் இடையில் கண்டியில் நடைபெறும் ஆட்டத்தில் மழை காரணமாக நேற்று ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இலங்கை இரண்டாம் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுக் காலை தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த மேற்கிந்திய அணி 148 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

தொடர்ந்து 2ஆம் இன்னிங்ஸில் இலங்கை 2 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் நிறுத்தப்பட்டது. இலங்கை அணி 148 ஓட்டங்களால் முன்னணியில் நிற்கின்றது. (3-190)

# 'லைசென்ஸ்' கிடைக்காதவர்கள் முறையீடு செய்யக்கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்து இதுவரை 'லைசென்ஸ்' கிடைக்கப் பெறாதவர்கள், யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊடாக கொழும்பு மோட்டார் திணைக்களத்திற்கு முறையீடு செய்ய வேண்டும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முறையீடு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு 2 பிரதிகள், கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனான 2 படங்கள், தேசிய அடையாள அட்டையின் பிரதி, அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்ததற்கான சான்றிதழின் பிரதி என்பவற்றை இணைத்து முறையீடு செய்ய வேண்டும் என்றும் - அவர் மேலும் கூறினார். (எ-202, 204)


S.L.A.S.போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள் ஆரம்பம்

பொதுவிவேகம் / பொதுஅறிவு } த.தவசேகர்
கட்டுரைச் சுருக்கம்: பா.மகாலிங்கசிவம்
சனி 8 - 10, திங்கள் 4.30 - 6.30
ஆரம்பம்: 25.07.2005 மாலை 4.30 (38133)
ஞானோதயா, சாவகச்சேரி.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 . 12 . 1951



உதிர்வு 03 . 08 . 2004

**அமரர் செல்லத்துரை நாகேஸ்வரன்**

தென் மயிலை கட்டுவன்
திதி: 24.07.2005 (திருதியை)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு உருண்டோடி விட்ட போதிலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் பசுமையாய் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கிறோம்.

தகவல்: செ.பரமேஸ்வரன்
077 9074915
2946184
உங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளை, சகோதரர்கள். (C-44328)(25-15-45-12)

## மனமுவந்து வாழ்த்திப் பாராட்டுகின்றோம்



கொழும்பு, கொம்பனித் தெரு சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஸ்தாபகரில் ஒருவரும் சமூக சேவையாளரும் எமது நிறுவனத்தின் தலைவருமான உயர்திரு வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்கள் தனது 80 ஆவது அகவையில் காலடி பதிப்பதையொட்டி நாம் மனமுவந்து வாழ்த்திப் பாராட்டுகின்றோம். அத்துடன் அவரது சேவை மேன்மேலும் தொடர பிரார்த்திக்கின்றோம்.

இருபாலைச் சந்தி, கோப்பாய். (38134)(25-15-45-12)
கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு.


## ஹோட்டல் முகாமையாளர் தேவை

யாழ்.நகரை அண்டி அமைந்துள்ள நவீன நட்சத்திர ஹோட்டலுக்கு முகாமையாளர் தேவை.

யாழ்.நகரை அண்டியவராகவும் ஆங்கிலம், சிங்களம் நன்கு பரிச்சயமானவராகவும் ஹோட்டல் முகாமை அனுபவத்துடன் கல்வித் தகைமையுள்ளவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம்.


தொடர்புகளுக்கு:-
இல.57, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 - 3252, 222 - 5814
(38118)(25-15-45-12)

## ஹோட்டலுக்கு வேலையாட்கள் தேவை

- சைனீஸ் உணவு தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்
- சமையல் உதவியாளர்
- கணக்காளர்

உடன் தொடர்பு:
திரிஸ்டார் உணவகம்
இல. 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-44329) (25-15-45-12)








## மரண அறிவித்தல்

### செல்வன் சிவராசா சிவகாந்தன்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் சிவராசா சிவகாந்தன் 22.07.2005 வெள்ளிக்கிழமை அன்று லொறி விபத்தில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சிவராசா (ஓய்வுபெற்ற சந்தைத் திணைக்கள ஊழியர்), மதனராணியின் அன்பு மகனும், சிவரஞ்சினி, மகிந்தன், சிவபாலன், சிவநேசன், சிவரூபன், சிவதரன், சிவதர்சினி, சிவநிரோசன், கிருஷாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமலிங்கம், சுமதி ஆகியோரின் மைத்துனரும் சஜித்தா, மதுஷா, குசந்தன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நேரியதுறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, இலுப்பையடி வீதி, சாவகச்சேரி. (38131) (25-15-45-12)
தகவல்: செ.சிவராசா (தந்தை).

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக நின்ற கல்வி நிறுவனங்களின் ஸ்தாபகர்

**சிவக்கொழுந்து சின்னத்துரை**

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-44326) (25-15-45-12)
கொக்குவில் இந்துக் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு செல்லத்தம்பி

(முன்னாள் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்)



கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் கத்தார் வயல் இயக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்லத்தம்பி அவர்கள் (22.07.2005) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும் சிதம்பரம், குமாரசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரரும் கந்தையாவின் மைத்துனரும் முருகேசு - பறுபதத்தின் அன்பு மருமகனும் செல்வகுமார், ஜெயந்தினி, சாந்தகுமார், ஜீவகுமார் (லண்டன்), சாந்தகுமாரி (லண்டன்),வசந்தகுமாரி (மாவட்ட வைத்திய சாலை, பருத்தித்துறை), தவக்குமாரி (ஆசிரியை, மாசார் அ.த.க. பாடசாலை), ஜெயக்குமாரி (பரிசாரகர் பயிற்சி நெறி, மாவட்ட வைத்தியசாலை பருத்தித்துறை), ராஜகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானசந்திரன், செல்வநாயகம் (லண்டன்), குகநேசன் (Helo trust சாரதி), பாலகிருஷ்ணராஜா (கனடா), ஜெகதீஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெசிந்தா, திசானி, திலக்ஸன், நிஜாந்தி கஜன், நிரோஜன், வின்ஷன், ஜான்ஸ்ஷா, பவித்ரா, தீபன், தீபா (லண்டன்), ஹேமிதன், ரேணுகா, விதுசன், கஜோ, அபிஷா, விஸ்வா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆர்த்திகாவின் பூட்டனும் ஜெகன், தினா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உசனில் நடைபெற்று, பூதவுடல் உசன் ஈச்சங்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில். (38132) (25-15-45-12)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### சின்னத்தம்பி செல்லையா



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லையா 23.07.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தவராசா (அமரர்), கருணாநிதி, கமலாதேவி, லலிதாதேவி, ரவிச்சந்திரன் (ஜேர்மனி), கருணாதேவி (ஜேர்மனி), பாலஜோதி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சரஸ்வதி, ஜெயதேவி, ராதா (ராதா நகை மாளிகை - பருத்தித்துறை), அனந்தநாராயணன், சுப்புலக்மி, சுரேஸ்குமார், ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சசிகலா, கவிதா, சுதன் (காஞ்சனா நகைமாளிகை - பருத்தித்துறை), திவாகரன், நிரோஜன், சரணியா, கீர்த்தனன், காஞ்சனா, தர்ஷிகா, பார்த்தீபன், பிரதீபன், நிஷாந்தன், விஸ்வப்பிரியா, ரிஷி, கார்த்திகா, கஸ்தூரி, காயத்திரி, காருண்யா, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஐங்கரன், ரஜிந்தன், தர்ஷன், கீர்த்தனா, சுவர்ணா, மதுஷன், பிரியங்கா, கிரிஷாந், சாருகாந் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (38127) (25-15-45-12)
தகவல் கருணாநிதி (மகன்).

### முருகேசு மீனாட்சி (சரசு)



சிறாம்பியடியைப் பிறப்பிடமாகவும் கரம்பனை வதிவிடமாகக் கொண்டவருமான முருகேசு மீனாட்சி 21.07.2005 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - நாகம்மா தம்பதியினரின் ஏக புத்திரியும் சின்னப்பு - அன்னம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் அழகரெட்ணம் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு சகோதரியும் நாகேஸ்வரியின் அன்புமிகு மைத்துனியும் நகுலேஸ்வரி, லட்சுமிதேவி (ஜேர்மனி), தனபாலசிங்கம் (ஜேர்மனி), பத்மாதேவி, ரஞ்சினிதேவி(ஜேர்மனி), அம்பிகாதேவி, ஜெகதேவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஸ்ணதாஸ், இரவீந்திரநாதன், சரோஜினிதேவி, மகாதேவன், அருமைநாயகம், பற்குணராஜா, பாலசுந்தரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிருஸ்ணப்பிரியா, யதுநந்தன் (கனடா), காந்தினி (கனடா), சுகுநந்தன், மகிந்தன், சர்மிளா (ஜேர்மனி), கம்ஷலா, நிவேதிகா, மலரவன், சனோஜன் (ஜேர்மனி), பிருந்தா, திவாகர், தனுஜன், வேணுகோபன், சங்கீதன், அர்ச்சனா, ஆர்த்திக் (ஜேர்மனி), சிந்துஜா, நீரஜா, தயான்ராஜ், ராம்ராஜ், லவுசிஜா, தர்சிகா (பிரான்ஸ்), சந்ரு (லண்டன்), பாணுகா, ராதிகா, ரஜீவன் (கொழும்பு), ராகுலன் (ஜேர்மனி), கங்காதரன் (கனடா), தயானந்தன் (பிரான்ஸ்), ரமேஷ்காந் (ஜேர்மனி), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் யனோஸ் (ஜேர்மனி), கௌதமன் (கனடா), கௌசிகன் (கனடா) அக்ஷனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல்12 மணிக்கு வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/2, சிறாம்பியடி ஒழுங்கை, (மணியம்கட்டத்தின் அருகில்) யாழ்ப்பாணம். (38123) (25-15-45-12)
தகவல் அழகரெட்ணம் (சகோதரன்) கிருஸ்ணதாஸ் (மருமகன்) மக்கள், மருமக்கள்.

# இலங்கை அரசு மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இயகத்தின் தலைமை சில இறுக்கமான நிலைப்பாடுகளை எடுத்திருப்பது குறித்தும் தமிழ் மக்களின் கருத்துக்கள் குறித்தும் மதியுரைஞர் பாலா, இச்சந்திப்பின் போது நோர்வேத் தரப்புக்கு எடுத்து விளக்கினார் என அறியவந்தது.

"யுத்தநிறுத்தத்தைப் பேணுவதே இப்போது பிரதான் விடயம். அரசு தனது கட்டுப்பாட் டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து ஆயுதக் குழுக்கள், துணைப்படைகள் போன்றவற்றை அவற்றின் ஆயுதங்களைக் களைந்து அங்கிருந்து அகற்றுவதற்குத் தொடர்ந்தும் தவறுமானால் யுத்தநிறுத்தம் தாக்குப்பிடிப் பது சாத்தியமாகாமல் போகும்" - என்ற ஆபத்து நிலையை பாலா விளக்கினார்.

அந்த விடயம் குறித்து அரசுத் தரப்பும் புலிகள் தரப்பும் நேரில் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வந்தால் என்ன என்பது குறித்தும், தொடரும் கொலைகளை - வன்முறைகளை - நிறுத்துவது பற்றியும் இரு தரப்பும் கூடிப் பேசித் தீர்மானித்தால் அதிக பயன் கிட்டாதா என்பது குறித்தும் நோர்வேத் தரப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதாக அறியவந்தது. ஆனால், இதற்கு மதியுரைஞர் பாலா திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பதிலை நோர்வேத் தரப்புக்கு நேற்று அளித்திருக்கின்றார் எனத் தெரிகிறது.

"அரச படைகளின் ஆதரவோடும் உதவியோடும் ஆயுதக் குழுக்கள் அங்கு(தமிழர் தாயகத்தில்) செயற்படுவது இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்ட உண்மை; பரகசியம். இவை அங்கிருந்து அகற்றப்பட்டால் எல்லா விடயங்களும் முடிவுக்கு வந்துவிடும்; கொலைகள், வன்முறைகள் இல்லாமல் போகும். அல்லது குறைந்துவிடும்.

"அவற்றை அங்கிருந்து அகற்றும்படியும் யுத்தநிறுத்த உடன்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படியும் அரசை வற்புறுத்தி சர்வதேச சமூகம் வெறும் அறிக்கைகளை வெளியிடுவதால் பயன்கிடைக்கப் போவதில்லை. அர்த்தம் நிறைந்த விளைவுகளை வெறும் அறிக்கைகள் தரமாட்டா. எனவே, உரிய முறையில் - அதற்கேயான பாணியில் - அரசு மீது நிர்ப்பந்தமும் அழுத்தமும் பிரயோகிக்கப்படவேண்டும். அப் படிச் செய்யுமாறு சர்வதேச சமூகத்தை நோர்வே வழிப்படுத்தவேண்டும்; வழிகாட்டவேண்டும்.

"ஏற்கனவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திட்டவட்டமாக - தெளிவாக - குறிப்பிடப்பட்ட இந்த வியடத்தையே நடைமுறைப் படுத்தும்படி நாம் வேண்டுகிறோம். அதையே இணைத்தலைமை நாடுகள் நான்கும் பகிரங்கமாக அறிக்கை மூலம் கேட்டும் உள்ளன. எனவே இணக்கம் கண்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நேரடிச் சந்திப்போ, அதற்கான பேச்சோ அவசியமில்லை.

"இலங்கை அரசுடன் நேரில் பேசி உடன்பாடு காணப்பட்ட விடயங்கள் பல நடைமுறைப்படுத்தப் படவில்லை என்பதே எமது கசப்பான அனுபவம். ஆகையால் இணங் கிய ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மீண்டும் நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என்ற கோரிக்கையை எமது தலைமை ஏற்கத் தயாரில்லை.

"எனவே, யுத்தநிறுத்த உடன்பாட்டில் இணங்கியபடி - இணைத் தலைமை நாடுகள் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் - முதலில் தமிழர் தாயகத்தில் உள்ள ஆயுதக் குழுக்களையும் துணைப்படைகளையும் அவற்றின் ஆயுதங்களையும் களைந்து அங்கிருந்து உடனடியாக அகற்றுமாறு இலங்கை அரசை வற்புறுத்துங்கள். அதைச் செய்வதன் மூலம் நேரடிச் சந்திப்புக்கும் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும் அமைதி முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்குமான புறநிலையை ஏற்படுத்தும்படி இலங்கையை வற்புறுத்திக் கேளுங்கள்.

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஆறுமாத காலம்பேசி பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஆனால், காணப்பட்ட இணக்கத்தின்படி பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு அப்படியே நடைமுறைப் படுத்துமா என்பது சந்தேகத்திற்குரியதாகி விட்டது. பொதுக்கட்டமைப்பு செயற்படுத் தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

"ஆனால் இது மக்களின் அவசிய - அவசர - அன்றாட - வாழ்க்கைப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட விடயம். அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. இனிமேல் இதை இழுபட விடமுடியாது.

"இவ்வாறு இயற்கை அனர்த்தம், யுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களைக்களையும் தார்மீகப் பொறுப்பும் கடப்பாடும் சர்வதேச சமூகத்திற்கு உண்டு. விரைந்து செய்யப்படவேண்டிய இப்பணியை இனிமேலும் தாமதித்தால் சர்வதேச சமூகம் பெரும் மனிதாபிமானப்பிரச்சினை ஒன்றில் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துப் பெரும் தவறு இழைத்ததாகவே அது அர்த்தமாகும்.

"அந்தத் தவறைச் செய்யாதிருக்கும்படி சர்வதேச சமூகத்தை வேண்டுகிறோம்.

"பொதுக்கட்டமைப்பு இயங்கமாட்டாது என்றால் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கான மனிதாபிமான உதவிகள், சர்வதேச நிதி என்பன தமிழர் தாயகத்திற்கு நேரடியாகக் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் சர்வதேச சமூகம் இனிமேலும் காலம் தாமதிக் காமல் விரைந்து செய்யவேண்டும்."

- இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் நேற்று நோர்வே அனுசரணையாளர்களுக்கு எடுத்துரைத்தார் எனத் தெரியவந்தது. (உ)

# தமிழர் பிரதேசத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்ட காலங்களில் சிங்கள அரசுகளினால் எவ் வாறு அழிவுகள் ஏற்படுத்தப்பட்டதோ அதே போன்றுதான் வேகமாக இயற்கை அழிவு கள் ஏற்பட்டன.

எமது இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் எமது முன்னோர்கள் கூட அக்கறை காட்டி வந்தார்கள். நெருக்கடியான காலகட்டத்தில் கூட எமது இயற்கை வளங்கள் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக எமது தலைவர் அவர்கள் பல செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

குறிப்பாக இயற்கை வளங்களில் மிக முக்கியமான வனத்தை பாதுகாப்பதில் அக்கறை செலுத்தி வந்தார். ஒரு வனம் அழிவுகளைச் சந்தித்தால் அதை மீள உருவாக்குவதற்கு நீண்டகாலம் செல்லும். எமது இயற்கை சமநிலை குலைந்து மிக நெருக்கடியான நிலைக்குள் நாம் தள்ளப்படுவோம். யுத்த காலத்தில் கூட வனங்களை அழிப்பதை முற்றாகத் தடைசெய்து வனத்தைப் பாதுகாப்போம்.

ஆனால் இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவம் பெருமளவு மரங்களை அழித்தது.

போர் நடந்த காலங்களில் போரை எதிர்கொள்ளும் சம நேரத்தில் வனவளத்தைப் பாதுகாப்பதிலும் மீள உருவாக்கம் செய்வதிலும் எமது விடுதலை அமைப்பு அக்கறை செலுத்தி வந்தது. தற்போது எமது தாயகப் பிரதேசத்தில் மீள உருவாக்கம் செய்யப்பட்ட பல வனங்கள் இருப்பதை நேரில் காணலாம்.

சூழல் பாதுகாப்புப் பகுதி என்பதை தலைவர் அவர்கள் நீண்ட காலத்துக்கு முன்பே ஆரம்பித்து வைத்தார். இந்த அமைப்பு சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயற்பட்டு வந்துள் ளது. தற்போது புதிய சவால் வந்துள்ளது. சமாதான காலமென்று சொல்லப்படுகின்ற இந்த காலகட்டத்தில் குறிப்பாக ஆழிப்பேரலை ஏற்பட்டு தமிழர் தாயகத்தின் கரையோரப் பகுதிகள் அழிந்த நிலையில் புதிய சிந்தனை உருவாக்கம் பெறவேண்டிய சூழல் நிலை ஏற்பட்டது.

புதிய சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும் திட்டமிடலுக்கும் செயற்பாட்டுக்குமான வடிவங்களில் சூழலியலுக்கு முக்கியத்து வம் கொடுக்கவேண்டிய நிலையில உள் ளோம்.

உலக நாடுகளிலேயே சூழலைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்தி வருகிறார்கள். அதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்தநிலையில் தமிழர் தாயகத்தில் புதிய மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஏற்ப சூழலியல் சம்பந்தமாக செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டியவர்களாக உள்ளோம். இதில் மேலத்தேய நாடுகளில் இருந்து வருகைதந்து எமது திடமிடல் செயலகத்து டன் இணைந்து செயற்பட்ட சூழலியலாளர் கள் பல திட்டங்களை எமக்கு முன்வைத் தார்கள். அந்த வகையில்தான் இன்றைய ஒன்றுகூடல் அமைந்தது.

எமது தேசத்திலும் புலம்பெயர்ந்தும் வாழும் சூழலியலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழீழத் தேசத்தினுடைய எதிர்கால நலனை நோக்கி திட்டங்களை வகுக்கவேண்டியவர்களாக உள்ளோம் - என்று தெரிவித்தார்.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் முதன்மைச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழப் பொருண் மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ஏற்றிவைத்தார்.

திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த மதி வரவேற்புரையினை நிகழ்த்தினார். திட்ட மிடல் செயலகப் பதில் பணிப்பாளர் சண் முகலிங்கம் ரஞ்சன் தலைமையுரையினை நிகழ்த்தினார்.

சூழல் பாதுகாப்புத் தொடர்பான உரைகளை சூழலியலாளர்கள் எஸ்.ஜெயசிங்கம், ந.ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் செல்வின் ஆகி யோர் நிகழ்த்தி (ஐ-3)

CHEMISTRY / BRIGHTMAN
நாவலர் வீதி
A/L 2007
அடிப்படை இரசாயனவியல்
BY: DIAS (B.Sc)
Sat, Sun, Thu - 3.30 pm
(38083)




கிளிநொச்சியில் நேற்று தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் ஏனைய பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவலரண் பகுதியில் முட்கம்பித் தடைகளைத் தாண்டி இவர்கள் நால்வரும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் நுழைந்த சமயமே கைதுசெய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இவர்களைக் கைதுசெய்த இராணுவத்தினர் கடந்த புதன்கிழமை அவர்களைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் பொலீஸார் அவர்களை நேற்று வவுனியா நீதிமன்றில் ஆஜர்செய்தபோது நான்கு பேரும் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

காணாமற்போன தங்கள் மாடுகளைத் தேடி வந்தபோதே படையினர் தம்மைக் கைது செய்தனர் என்று நால்வரும் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலிகளை வெட்டி உள்ளே நுழைந்த வேளையே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தமிழ்மக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் பிள்ளையார் கோயிலடிப் பகுதிக்கு வந்த பிரஸ்தாப வியாபாரி அங்குள்ள ஒருவருடன் கதைத்துவிட்டு மீண்டும வானில் ஏறிய சமயம் இனந்தெரியாதவர்கள் அவர் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## புலனாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள், போராளிகள் மீது கருணா குழுவினர் என்ற பெயரில் துணைப்படைகள் கட்டவிழ்த்து விட்ட தாக்குதல்களைத் தடுப்பதற்கு தவறியிருந்தார் என்று மேஜர் ஜெனரல் கெந்தவிதாரண மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டின்பின்னணியிலேயே அவரை அப்பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கியிருக்கலாம் என்றும் அந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தைக் கடத்திச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட வாகனத்தையும் கடத்தல்காரர்களையும் தேடிக் கண்டுபிடிப்பதற்காக பொலீஸார் கண்டிப் பிரதேசம் எங்கும் வலை விரித்திருக்கின்றனர்.

கடத்தல்காரர்கள் இருவரும் சிங்கள மொழியிலேய உரையாடினர் என்பது பொலீஸாருக்குத் தெரியவந்துள்ளது. (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை மனோன்மணி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், புலோலி வட கிழக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மனோன்மணி நேற்று (23.07.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்புமனைவியும், இந்திரசேகரா, றெஜினா, ரஜீந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற குருமணி மற்றும் சிரோண்மணி, கருணாநந்தன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தா தோட்டம்,*
*புலோலி.* (38135) (25-15-45-12)

தகவல்
**இந்திரசேகரா(மகன்).**

## திருமதி கமலராணி ஆசைப்பிள்ளை



காங்கேசன்துறை, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் பாடசாலை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலராணி ஆசைப்பிள்ளை அவர்கள் நேற்று (23.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை (நடேஸ்வராக் கல்லூரி, கனிஷ்ட பாடசாலை முன்னாள் உப அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் முரளிதரன், மௌலிதரன் (கனடா), கிரிதரன் (கனடா), பரணிதரன் (கொழும்பு), தரணிதரன் கங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (38136) (25-15-45-12)

தகவல்
**குடும்பத்தினர்.**

## திருமதி சிசிலியா பிரான்சிஸ்

நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிசிலியா பிரான்ஸிஸ் அவர்கள் நேற்று (23.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (25.07.2005) திங்கட்கிழமை நடைபெறும். விபரம் நாளைய உதயனில் வெளிவரும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல, 59 புனித ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர்.*
*T.P.No 021 222 7324* (38137) (25-15-45-12)

தகவல்
**கீதபொன்கலன் (மகன்).**

## செல்லையா கந்தசாமி

(பிரபல வர்த்தகர், கண்ணன் ஸ்ரோஸ் - புத்தூர்ச்சந்தி)

மாதகலைப் பிறப்பிடமாகவும் மீசாலை புத்தூர் சந்தியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி அவர்கள் நேற்று (23.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*புத்தூர்ச்சந்தி.* (38138) (25-15-45-12)

தகவல்
**பிறேமதாசன் (மகன் - சுவிஸ்).**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# USAID நிறுவனத்தின் நிதி உதவியின்கீழ் வேலையற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சிநெறி

வேலையற்ற பட்டதாரிகள் தங்களது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை வேகமாக வளர்ச்சி கண்டுவரும் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஏற்ப ஈடுகொடுக்கச் செய்யும் வகையிலான புதிய பயிற்சிநெறிக்கு நிதி உதவிகளை வழங்க USAID நிறுவனம் முன்வந்துள்ளது.

USAID நிறுவனப் பங்காளியான TCP எனப்படும் போட்டித் திட்டமும், மொறட்டுவைப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பீடமும் இணைந்து இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

'துரித தக்வல் தொழில்நுட்பப் பரிமாற்றத் திட்டம்' என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தைப் பாடமாகக் கற்காத பட்டதாரிகளை இந்தத் துறையோடு தொடர்புடைய தொழில்களுக்கு தயார்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.



USAID நிறுவனத்தின் பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் அதன் பணிப்பாளர் கரோல் பெக்கர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவருக்கு புலமைப்பரிசில் வழங்குகிறார்.

ஐந்துமாதகால துரித பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட இந்தத் திட்டம் கோட்பாடுகள் மற்றும் விரிவான செய்முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும். மூன்றுமாதகால செய்முறையில் ஒருமாதகாலம் விரிவான திட்டமொன்றின் கீழ் பட்டதாரிகள் பணியாற்ற வேண்டும். அத்தோடு குறைந்த பட்சம் ஒருமாத காலமாவது தகவல் தொழில்நுட்ப நிறுவனமொன்றில் பணியாற்ற வேண்டும்.

USAID நிதி உதவியுடனான இந்தத் திட்டத்துக்கு TCP அனுசரணையாளராகவும், ஏற்பாட்டாளராகவும் செயற்பட்டுள்ளது. மொறட்டுவைப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பபீடம் இதனை அமுல்செய்யும்.

வேலையற்ற அல்லது தகுதிக்கேற்ற வேலை கிடைக்காத ஆர்வமுள்ள பட்டதாரிகளைத் தகவல் தொழில்நுட்ப வளம் மிக்க தனிநபர்களாக மாற்றியமைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இவர்களிடமுள்ள பல்வேறு தொழில்நுட்ப ஆற்றல்களையும், இலகு திறன்களையும் சரியான முறையில் நெறிப்படுத்தி வெற்றிகரமான தொழில் அனுபவத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பத் துறையில் உறுதிமிக்க நபர்களாக மாற்றியமைக்கும் வகையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான தேர்ச்சியும், நல்ல கல்வித் தகைமையும் கொண்ட இளைஞர்கள் துரதிஷ்டவசமாகத் தொழில் சந்தைக்கு ஏற்ற ஆற்றல் இன்றி காணப்படுகின்றனர் என்று USAID பணிப்பாளர் டாக்டர் கரோல் பெக்கல் கூறினார்.

இந்தப் பரிமாற்றத் திட்டத்தில் பங்கேற்கும் பட்டதாரிகள் ஐந்து மாதகால முடிவில் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் கணிசமான அளவு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வருவர் என்று கூறினார் மொறட்டுவைப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பீடத்தின் பீடாதிபதி டாக்டர் அஜித் மதுரப் பெரும.

இந்தத் திட்டம் உண்மையிலேயே புதுமையானது. மிகச் சிறந்த ஊதியத்தைப் பெறக்கூடிய ஒரு தொழில்துறையில் அவர்கள் பிரவேசிக்க இது வழிவகுப்பதோடு, நீண்ட சிறந்த எதிர்காலத்துக்கும் அவர்களை வழிநடத்திச் செல்லும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தப் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது தொகுதி மாணவர்கள் அட்டாளைச்சேனை, கல்முனை, தெல்வத்தை ஆகிய தூரப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஐந்து மாணவர்களுக்குUSAID நிறுவனம் முழு அளவிலான புலமைப்பரிசில்களையும் வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சிக்கான பாடவிதானத்தைத்தயாரிப்பதில் தனியார்துறை மிகவும் ஆர்வம் காட்டியுள்ளது. மாணவர்களைத் தெரிவுசெய்யும் குழுவிலும் முன்னணி தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

பட்டதாரிகளை துறைசார் வாய்ப்புகளை நோக்கி நெறிப்படுத்த வர்த்தகப் பிரமுகர்கள் முன்வந்துள்ளனர். Zone 24x7, Virtusa, Millenium IT, IPS, hSenid Software, The Computer Centre, Ecomtec, EuroCenter மற்றும் Parcel House என்பன உட்பட பல தனியார் நிறுவனங்கள் 12 மாணவர்களுக்குப் பகுதி அனுசரணை வழங்க முன்வந்துள்ளன.

இந்தத் துரித தகவல் தொழில்நுட்பப் பரிமாற்றத் திட்டத்திற்கு Software Exporters Association (SEA), மென்பொருள் ஏற்றுமதியாளர் சங்கம் மற்றும் SriLanka Association For The Software Industry (SLASI) மென்பொருள் தொழில்துறைக்கான இலங்கை நிறுவனம் என்பன மேலதிக பங்களிப்பாளர்களாகச் செயற்படுகின்றன.

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் மேம்பாட்டுக்கு 1999 முதல் USAID போட்டித் திட்டம் உதவி வருகின்றது. இலங்கை தகவல் தொழில்நுட்பச் சங்கத்தால் போட்டித் திட்டத்தோடு இணைந்து 2004இல் 500 தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் மத்தியில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி இலங்கையில் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு மிகவும் காட்டமான தேவை இருப்பது தெரியவந்துள்ளது.

# தொடர்பு அறாத அழைப்பு காத்திருக்கும் வசதி SLT Net இலவசமாக வழங்குகிறது

இணையச் சேவைச் சந்தையில் முதலிடத்தை வகிக்கும் SLT Net இலங்கையில் இணையப் பாவனையை மேலும் பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் இன்னொரு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. SLT Net இணையச்சேவையானது இச்சேவை இலகுவாகவும் குறைந்த செலவிலும் கிடைக்கும் வண்ணம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இப்பொழுது SLT Net வாடிக்கையாளர்களுக்கு மேலதிக செலவில்லாமல் தொடர்பு அறாத அழைப்பு காத்திருக்கும் வசதியினை (Online Call Waiting) அளித்து வருகிறது.

Sri Lanka Telecom

இச்சேவையைப் பெறும் வாடிக்கையாளர்கள் இணையத்தில் உலாவும் போது அல்லது ஈ-தபால்களை இறக்கம் செய்யும் போது உள்வரும் அழைப்புகளைத் தவறவிட வேண்டிய சூழ்நிலை இனிமேல் ஏற்படமாட்டாது.

மேற்படி சேவையினால் அநேகமான வாடிக்கையாளர்களுக்கு நன்மை ஏற்படுவதுடன் அவர்களின் வாழ்க்கை முறையிலும் வர்த்தகத்திலும் பல நன்மைகள் ஏற்படும். ஸ்ரீ லங்கா ரெலிகொம் அதனுடைய இணையச்சேவை வழங்குநரான SLT Net ஊடாக சாதாரண வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் பல்வேறு வசதிகளை வழங்கிவ்ருகிறது.

இந்நிறுவனம் நாடு பூராவும் உள்ள வலையமைப்பின் ஊடாக 350 Mbps வரையிலான அகலப்பட்டியினைக்கொண்டு இணையச்சேவையினை வழங்கி வருகின்றது.

வ்ாடிக்கையாளர்கள் 150 என்ற இலக்கத்துடன் தொடர்கொண்டு SLT Net சேவையினைப் பெற்றால் கட்டணம் மிகவும் மலிவாகக் கிடைக்கும். முற்பகல் 5 மணி தொடக்கம் பிற்பகல் 9 மணிவரையில் எடுக்கப்படும் அழைப்புகளுக்கு உள்ளூர் அழைப்புக்கட்டணம் அறவிடப்படுவதுடன் 50 சதவீத விசேட கழிவும் வழங்கப்படும்.

பிற்பகல் 9 மணி தொடக்கம் அடுத்தநாள் முற்பகல் 5 மணிவரையில் எடுக்கப்படும் அழைப்பின் அலகு 9 நிமிடங்களாகும். இவ்வசதி இலங்கையில் உள்ள SLT வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்
Free அழகிய கைக்கடிகாரம் மற்றும் அழகிய கிளியர் பேக் பைல் Free
ஒன்றும் இலவசம் முந்திக்கொள்ளுங்கள்
விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறவும்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 077-3123523

சுப்பிரிவிக்கி
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை




சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.
ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை



சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு
வடபுல விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2226291, பக்ஸ் :- 021 2222445.

# 'சிசு உதான விஸிஸ்ட்டயோ' ஊடாக திறமையான மாணவர்களுக்கு விருதுகள்

விளையாட்டு, கலை, கல்வி மற்றும் சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் சாதனை படைக்கும் மாணவர்களைக் கௌரவித்து அவர்களுக்கு பரிசுகளை வழங்கவென மக்கள் வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட 'சிசு உதான விசிஸ்ட்டயோ' பரிசளிப்புத் திட்டத்தின் ஊடாக 130 மாணவர்கள் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பரிசளிப்புவிழா இம்மாதம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட மட்டத்தில் தெரிவான 130 மாணவர்களும் தேசிய மட்டத்தில் தெரிவான 14 மாணவர்களும் கிண்ணம், சான்றிதழ் மற்றும் பணம் போன்றவற்றைப் பரிசாகப் பெற்றனர்.

இந்த வைபவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இலங்கை அரசு துறை, கல்வித்துறை போன்றவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் மக்கள் வங்கியின் தலைவர் பீ. அமரசிங்க, பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான அசோக




தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 14 மாணவர்களுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மக்கள் வங்கியின் தலைவர் பீ.அமரசிங்க ஆகியோரும் காணப்படுகின்றனர்.

இதில் மாவட்ட மட்டத்தில் 130 மாணவர்களும் தேசிய மட்டத்தில் 14 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

[illegible] வைபவத்தில் வசதி குறைந்த 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

[illegible] இந்தப் பாடசாலைகளின் [illegible] ஆய்வுகூடங்கள் மற்றும் விளையாட்டு வசதிகள் போன்றவை அபிவிருத்தி செய்யப்படும்.

பரிசு வழங்கப்பட்ட அனைத்து மாணவர்களும் நாடளாவிய ரீதியில் எல்லா இடங்களிலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர்.

[illegible] பரிசில்களுக்குரிய மாணவர்களைத் தெரிவு செய்த 9 தேசிய நடுவர்கள், 145 மாவட்ட நடுவர்கள், பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், வங்கி ஊழியர்கள் போன்றோரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் தலைவர் பீ.அமரசிங்க, உரையாற்றுகையில்:-

கல்வி, கலை, விளையாட்டு மற்றும் சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் திறமையுள்ளவர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் முதல் திட்டம் இந்த 'சிசு உதான விசிஸ்ட்டயோ' திட்டமாகும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதனால் அவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். அதையே நாம் செய்கிறோம்.

இத்திட்டம் அரசின் கல்வித் திட்டத்திற்கும் ஆதரவு வழங்குகிறது. இத்திட்டம் மாணவர்கள் ஆளுமையைப் பரந்தளவில் வளர்க்கும் என நாம் நம்புகிறோம் -

கலை, விளையாட்டு மற்றும் சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் மாணவர்களிடம் காணப்படும் திறமைகளை அடையாளம் கண்டு அவர்களைத்தட்டிக்கொடுப்பதன் மூலம் இந்த நாட்டில் சிறந்த பிரைஜைகளை உருவாக்க முடியும்.

மக்கள் வங்கி இந்த நாட்டின் முதன்மை வங்கியாகவும், சமூகப் பொறுப்புடைய வங்கியாகவும் உள்ளதால் இவ்வாறான சமூகப் பணியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த சிசு உதான விசிஸ்ட்டயோ பரிசளிப்புத் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு வாரங்களிலேயே 15,980 விண்ணப்பங்கள் வந்து சேர்ந்தன.

விண்ணப்பித்த மாணவர்களில் அதிகமானோர் மிகவும் திறமை வாய்ந்தவர்களாகவே காணப்பட்டனர். இதுவே அதன் சிறப்பம்சமாகும்.

வடக்கில் இருந்து சுமார் 2000 விண்ணப்பங்கள் பெற்றப்பட்டன.


STUDY IN LONDON
MALAYSIA & INDIA

Why COLLEGEVIEW?

• மும்மொழிகளிலுமான இலவச ஆலோசனை சேவைகள் • ஆண்டு முழுவதுமான விண்ணப்ப நடைமுறைகள் • விரைவான பல்கலைக்கழக அனுமதி • நூற்றுக்குமதிகமான தரமான பல்கலைக்கழகத் தெரிவுகள் • பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு வசதிகள் • பதிவு செய்யும் சகல மாணவர்களுக்கும் இலவச ஆங்கில வகுப்புக்கள் • வெளியிட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் • சர்வதேச தரத்திலான ஆலோசனை சேவைகள் • பகுதிநேர வேலைவாய்ப்புகளுக்கான ஏற்பாடுகள் மேலும் பல சேவைகள்......

Basic Qualifications
G.C.E. (O/L)
Pending A/L results also may apply

1000 £ Scholarship for UK University



Available Courses

Management, Business Ad. (BBA, MBA, Phds), Marketing, HRM, Accounting, Finance, Economics, Law, Computer Science, IT Networking, Pattern Designing & Textile, Hotel Management, Travel & Tourism, Engineering (Aerospace, Electrical & Electronical etc..,) Medicine, Dental, Fine Arts, Beauty Culture, Shipping Courses, Nursing ...

All Courses are available in any field.

September Semester க்கான பதிவுகள் [illegible]


COLLEGEVIEW International
Professional Overseas Educational Consultants & Promoters
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06. Sri Lanka.
Tel : 0094 114 512175 Fax : 0094 112 [illegible]
E-mail : collegeview@visualnet.lk
Mr. A.R.M.Mubarack:0773 113156 Mr. Hassan Mubarak:0714 909670
Yes, we show you the path
(Next to Wellawatta Police Station)



INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

UNIVERSITY OF WESTMINSTER

Walk into IIT on 16th & 17th July 2005
OPEN DAY
From 9.00a.m. to 5.00p.m.



Sanjeev Jayaratnam
B.Sc (Hons), MBA, MBCS, Dip. M, C.Eng, CITP
General Manager | Sales & Consulting, IFS
"I was at IIT (then IICS) from 1990-94 and graduated with 1st Class Honours from the first batch. The foundation and learning experience I received at IIT has been one of the main reasons for my continued career development in the last decade, for which I will always be grateful."

IIT, Sri Lanka's number one higher education institute, joins with the University of Westminster, UK to offer you enormous possibilities in spearheading tomorrow's technology.

- BSc (Hons) Software Engineering
- BSc (Hons) Internet Computing
- BSc (Hons) Information Systems
- BSc (Hons) Computing
- BSc (Hons) Information Systems with Business Management

For more information call Priyanka: 0722 727272 / 236021 2 - ext 106

Academic session 2005-2006. Enrol now!

INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

57 Ramakrishna Road, Colombo 06, Sri Lanka. Tel: 2360212, 2580714, 2361473. Fax: 2362305. E- mail: admissions@iit.ac.lk, http://www.iit.ac.lk



தலைமுடியைக் காத்திடும்...
பிரச்சினைகளைத் தீர்த்திடும்...

BIOTINEX-E
பயோட்டினெக்ஸ்-E

விட்டமின் E+H அடங்கியது




பயோட்டினெக்ஸ்-E இல் விட்டமின் E+H சரியான அளவில் சேர்க்கப்பட்டுள்ளதால் தலைமுடியின் வேர்களுக்கும், சருமத்திற்கும் போஷாக்கை அளித்து, கேசம் உதிர்வதைத் முற்றாகத் தடுக்கிறது.

தினமும் இரண்டு கப்சூல்கள் வீதம் மூன்று மாதத்திற்கு தொடர்ந்து பாவித்து சிறந்த பலனை பெறலாம்.

அருமையான கூந்தல்... அழகான மேனி...

Marketed by: ARKEM , Colombo . Tel: 2470290

# மொபிடெல் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி நியமிப்பு

வர்த்தகம், பிரதிப்பணிப்பாளர் - பிராந்திய உற்பத்தி முகாமைத்துவம், பணிப்பாளர் - விற்பனை ஆகிய பல்வேறு பதவிகளை இவர் வகித்துள்ளார்.

பல நூறு மில்லியன் டொலர்கள் இலாபத்தைக காட்டும் கம்பனிக் கணக்குகளை இவர் கையாண்டுள்ளார்.

மொபிடெல் நிறுவனத்தின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கும் இந்த அனுபவசாலியின் நியமனம் இக் கம்பனியின் பல மில்லியன் டொலர் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்கும் காலகட்டத்தில் நடைபெற்றுள்ளதால் காலத்திற்குப் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

அமரசேகர பேசும்போது "எமது அபிப்பிராயப்படி மொபைல் தொலைத்தொடர்புத் துறையில் GSM உயர்ந்த தரத்தைக் கொண்டுள்ளது. 2004 ஜனவரியில் மொபிடெல் GSM தொழில்நுட்பத்தை புகுத்தியதன் மூலம் 300 வீத வளர்ச்சியை அடைந்துள்ளது என்றார்.

அவர் மேலும் உரையாற்றும்பொழுது, "மொபிடெல் தனது தாய்க் கம்பனியான ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் முழுப் பக்க பலத்துடன் கூடியதாக விளங்குவதால், சிறந்த எதிர்கால வாய்ப்புகளைக் கொண்ட கம்பனியாகவே இதை நான் காண்கின்றேன் - என்றார்.

மேலும், அவர் கூறியதாவது, வாடிக்கையாளர் பாராமரிப்புச் சேவையில் உலகப் புகழ் பெற்ற தரத்தைப் பேணிவரும் நாம், தரச்சிறப்பான முறையில் சேவையைத் தொடர்ந்து வழங்குதல், மற்றும் செயற்பரப்பில் உயர்நத மட்டத்தை உறுதிப்படுத்துவதற்கு வசதியாக GSM விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் 2 ஆம் நிலையைப் பூர்த்தி செய்யும் முகமாக எரிக்சன் கம்பனியுடன் ஒப்பந்தமொன்றைச்செய்து ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவற்றில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம் -என்றார்.

Mobitel
Simple & Amazing

இச் சந்தை பெரியளவில் குரல், தரவு மற்றும் வீடியோ ஒருங்கிணைப்பு என்பவற்றை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதால், மொபிடெல் நல்ல எதிர்காலத்தைக் கொண்டுள்ளது என்பதை நான் நன்கறிவேன்." என அமரசேகர மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையருக்கு 100 வீதம் சொந்தமான கம்பனியாகவிளங்கும் மொபிடெல் (பிரை) லிமிடெட் இலங்கையில் மொபைல் சேவைகளை வழங்கி வரும் ஒரே ஒரு உள்நாட்டுக் கம்பனியாகவும் இருந்து வருகின்றது.

மொபிடெல் பெறுமதிமிக்க பல சேவைகளை வழங்குவதில் அண்மையில் ஈடுபட்டுள்ளது. இச்சேவைகள் சுருக்கக் குறியீட்டுப் பட்டியல் ஒன்றை நினைவில் வைத்திருக்கும் வழியிலாங்களை இல்லாமல் செய்வதுடன் தகவல்களை இலகுவாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கின்றது.

இச் சேவைகள் பாவனை மீதி மற்றும் பட்டியல் விபரங்கள் முதல் விளையாட்டுகள் மற்றும் நிதி சம்பந்தமான புதிய தகவல்களுடன் பல்வேறு வகையான தகவல்களை வழங்குகின்றன. இந்தத் தரச் சிறப்பான சேவைகளை ரோமிங் செய்யும் போதும் பெற்றுக்கொள்ளலாம்.

மொபிடெல் மிகக் குறைந்த கட்டணத்தில் உலகம் முழுவதுமுள்ள மிக முக்கியமான இடங்களுக்கு ரோமிங் வலையமைப்பை வழங்குகின்றது. அத்துடன் தனது வாடிக்கையாளர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்ட ரோமிங் வலையமைப்பையும் வழங்குகின்றது.

## வெற்று மை நிரப்பிகள் அறிமுகம்

கணினிப் பாவனையாளர்கள் தமது பிரதி எடுக்கும் தேவைக்கு வெற்று மை நிரப்பிகளை மீண்டும் மீள் சுற்றில் பாவிக்கக் கூடிய புதியமுறை ஒன்று முதல் தடவையாக இலங்கையில் அறிமுகம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

ABC டிரேட் அன்ட் இன்வஸ்ட்மன்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவன அறிமுகம் செய்துள்ளது.

ஜெர்மனியின் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்குவரும் இந்த மீள்சுற்று செயற்பாடானது, கணினிப் பொருள் பாவனையில் ஒரு திருப்பு முனையாகும். டெஸ்க் டொப் பிரின்டர்களுக்கு இது முழுமையான உத்தரவாதத்தை வழங்கும் முழு அளவிலான தன்மியக்கச் செயற்பாடாகும்.

ABC டிரேட் அன்ட் இன்வஸ்ட்மன்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஏ.ஜயசீலன் கருத்து வெளியிடுகையில், "இது வரை கணினிப் பாவனையாளர்கள் மிகவும் விலைகூடிய புதிய 'இங் காட்ரிஜ்களை' வாங்க வேண்டி இருந்தது அல்லது பழையவற்றைக் கைகளால் நிரப்ப வேண்டி இருந்தது.

இந்தக் கைகளால் நிரப்பும் முறையானது, மிகவும்மலிவான ஒன்றாகக் கருதப்பட்ட போதிலும், பாரம்பரியமற்ற இந்த வழிமுறையானது, உலகம் முழுவதும் பொதுவாகத் தோல்வி கண்ட ஒன்றாகும். அத்தோடு இது தரமான அச்சுப்பிரதிகளைத் தரவும் தவறியுள்ளது.

இதற்கு மாறாக, சர்வதேச ரீதியில் கணினிப் பாவனையாளர் மத்தியில் மீள் சுற்றுமூலம் காட்ரிஜ்களைப் பாவிக்கும் முறையானது, மிகச் சிறந்த தெரிவாக அமைந்துள்ளது. இது முற்று முழுக்க தன்னியக்கச் செயற்பாடு கொண்டது. வாடிக்கையாளர் காத்திருக்கும் போதே, காட்ரிஜ்களை சிறப்பாகச் சுத்தம் செய்து உரியளவு மையை நிரப்ப முடியும்.

இவ்வாறு மீள் சுற்று முறையில் நிரப்பப்பட்ட காட்ரிஜ்களை மீளப் பொதி செய்து அதியுயர் தரம், உத்தரவாதம் என்பனவற்றோடு, அதிசயிக்கத்தக்க குறைந்த விலைகளில் விற்பனை செய்யவும் முடியும்.

இந்த மீள் சுற்றுப் பொறிமுறையின் ஒரு அங்கமாக வெற்றுக் காட்ரிஜ்கள் பல்வேறு விசேட சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. காட்ரிஜ்களை சுத்தப்படுத்தல், காற்று நிரப்பல் என்பன உட்பட இறுதியாக அச்சுப் பிரதி எடுத்தல் வரை இந்தச் சோதனை செயற்பாடு நீடிக்கிறது.

கொழும்பில் உள்ள Print - Rite Re - New Station நிலையத்தில் ஆரம்பகட்டமாக இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய Re - New நிலையங்களை நாட்டின் பல இடங்களிலும் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

# புதிய CDMA தொழில்நுட்பம் சன்டெல் நிறுவனம் அறிமுகம்




கண்டியில் நடைபெற்ற சன்டெலின் CDMA தொழில்நுட்ப அறிமுகத்தின் போது சன்டெலின் முகாமைத்துவப் பணிப்பாளர் லில்லிமோர் லார்சன் CDMA தொலைபேசியை ஏற்று தகவல், தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் டீ. எம். ஜயரட்ண அழைப்பை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

சன்டெல் தொலைத்தொடர்பு நிறுவனம் இலங்கையில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் தொலைபேசி வசதிகளை வழங்கும் நோக்கில் CDMA 2000 1x என்ற தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது.

இது இம்மாதம் 8ஆம் திகதி கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் மிகவும் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தபால், தொலைத்தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் டீ.எம். ஜயரட்ண, செயலாளர் சீ. மலியத்தே,மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, கண்டி நகரபிதா கேசர சேனநாயக்க, தொலைத்தொடர்பு ஒழுங்கு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அருண அமரசேகர மற்றும் சண்டெல் குறியீட்டின் தூதுவர் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் மாவன் அத்தபத்து ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் டீ.எம். ஜயரட்ண கூறுகையில்:-

இலங்கையில் CDMA தொழில்நுட்பத்தை நிறுவுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களுக்கு தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் நோக்கிலேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சன்டெல் போன்ற நிறுவனங்கள் இவ்வாறு துடிப்புடன் செயற்படுவது



இலங்கையின் தொடர்பாடல் கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய உதவியாய் அமையும்.

அதன் அடிப்படையில் நாட்டின் அனைத்துப் பாகங்களையும்இணைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் தொலைபேசி வசதிகளை வழங்கும் நோக்கில் CDMA தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது. - என்றார்.

CDMA தொழில்நுட்பம் கொண்ட இந்த தொலைபேசிகள் கம்பியற்றதாகும். கடைக்குச் சென்று வாங்கிவந்து மின்சாரப்பிளக்கை புகுத்திய உடனே அழைப்புகளை மேற்கொள்ளமுடியும்.

முதற்கட்டமாக 22 மாவட்டங்களுக்கு இச்சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. 500 நகரங்களும், சிறிய கிராமங்களும் இதற்குள் இணைக்கப்பட்டுள்ளன.



40 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்களின் ஊடாக நாடு முழுவதும் CDMA தொழில்நுட்பம் விரைவில் விஸ்தரிக்கப்படும்.

இந்த CDMA தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த தொலைத்தொடர்பு ஒழுங்கு ஆணைக்குழு அனுமதி வழங்குவதற்கு முன்பே சன்டெல் நிறுவனம் பல புதிய பகுதிகளில் இந்த வலையமைப்பை விஸ்தரிக்கத் தொடங்கிவிட்டது.

கதிர்காமம், திஸ்ஸமஹாராம, வரக்காபொல மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களான அம்பாறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை போன்ற இடங்களுக்கு அண்மையில் இதனை விஸ்தரித்தது.

CDMA தொழில்நுட்பம் குறைந்த விலையில் உயர்ந்த மற்றும் ஆழமான தொடர்பாடல் சேவையை இந்நாட்டுக்கு வழங்க உதவும்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சன்டெல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் லில்லிமோர் லார்சன் உரையாற்றுகையில்:-

சன்டெல் நிறுவனம் புதுவகையான மிகச் சிறந்த மற்றும் பயனுடைய சேவைகளை இலங்கைக்கு வழங்க விரும்புகிறது. CDMA தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

CDMA வின் அறிமுகத்துடன் 2,50,000 வாடிக்கையாளர்களை இதனுடன் இணைக்கும் கொள்ளளவை நாம் விரிவுபடுத்தியுள்ளோம். இவ்வருட முடிவுக்குள் 5 லட்சம் தொலைபேசிகளை வழங்குவதே எமது திட்டம்.

இப்போது இலங்கையில் தொலைத்தொடர்பு சேவை புதுயுகத்தின் நுழைவாயிலில் உள்ளது. சண்டெல் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் உள்ள 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுடன் தொடர்புபடுத்த விரும்புகிறோம்.

CDMA தொழில்நுட்பம் கொண்ட தொலைபேசிகள் கையடக்கத்தொலைபேசிகளில் உள்ள வசதிகளைக் கொண்டுள்ளன. எம் போன்ற உஷ்ண நாடுகளில் ஏற்படுகின்ற இன்னல்களாலும் இது அதிகம் பாதிப்புக்குள்ளாகாது.

உள்வரும் அழைப்புகளுக்குக் கட்டணம் அறவிடப்படாதபடியால் இது வாடிக்கையாளர்க்ள் கொடுக்கும் பணத்திற்கு நிச்சயம் பெறுமதி சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த CDMA தொழில்நுட்பத்தை நிறுவதற்காக உலகின் முன்னணி தொலைத்தொடர்பாடல் நிறுவனமான எரிக்ஸன் நிறுவனத்துடன் சன்டெல் நிறுவனம் இணைந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் எரிக்ஸன் 30 தொலைத்தொடர்பாடல் நிறுவனங்களிலிருந்து சேவையை வழங்கிவருகிறது.

Suntel

கடந்த 8 வருடங்களாக சன்டெல் நிறுவனம் தொலைத்தொடர்புத்துறையில் இலங்கையில் சிறந்த சேவையாற்றிவருகிறது.

சன்டெல் வடக்கு, கிழக்கு உட்பட 20 நகரங்களைத் தனது சேவை வலையமைப்புக்குள் அடக்கியுள்ளது. - என்றார்.

S-lon இல்லம்

அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கின்றோம்






Authentic Certification KEMA KEUR KEMA - HOLLAND

அறிமுகப்படுத்துகின்றோம்

KEVILTON Protection Systems

உங்கள் இல்லத்தில் அல்லது அலுவலகத்தில் ஏற்படும் Sort circuit பாரிய விபத்தாக மாறி முழு கட்டிடத்தையும் தீக்கிரையாக்கலாம். கெவில்டன் Protection device (MCB) இனை பொருத்தி உங்கள் சொத்துக்கள் மின்னபாயத்தில் இருந்து பாதுகாப்பு பெறுவதினை உறுதி செய்து கொள்ளுங்கள்.

கெவில்டன் Protection System மூலம் உங்களின் பெறுமதியான உயிரையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

- Rating up to 63A
- B, C & D Protection Curve
- 1 to 4 Pole Configuration
- 6 KA Breaking Capacity

என்றும் KEVILTON

Complete range ■ High breaking capacity ■ International standards

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

24.07.2005

# சமாதானத்துக்குக் குறுக்கே நிற்கும் துணைப் படைகளை அரசு விலக்குமா?

கடந்த மூன்றரை வருடங்கள் நடைமுறையில் இருந்த சமாதானச் சூழலுக்கு விடைகொடுத்து, யுத்தச் சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசுக்கு நல்லெண்ணச் சமிக்ஞை ஒன்றை - நல்ல செய்தி ஒன்றை - விடுதலைப் புலிகளின் தலைமை விடுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை வன்னிக்கு வருகை தந்த நோர்வே பிரதித்தூதர் ஒட்வர் லக்ரிரேட், கண் காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் ஆகியோர் மூலமாக இந்தச் செய்தியை விடுதலைப் புலிகளின் தலைமை அனுப்பியுள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் போராளிகள் கொலை செய்யப்படுவது, கைது செய்யப்பட்டு அச்சுறுத்தப்படுவது, அரசியல்துறை அலுவலகங்கள் தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதால் சீற்றமடைந்த விடுதலைப் புலிகளின் தலைமை கடுமையான சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

போராளிகளைப் பாதுகாக்கும் நோக்கில், கிழக்கில் அரசியல் பணிகளில் ஈடுபட்ட போராளிகளை தமது பிரதேசத்துக்குத் திருப்பி அழைத்து விட்டனர் புலிகள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைந்திருந்த அரசியல் துறை அலுவலகங்களையும் மூடினர்.

தமது போராளிகளின் பாதுகாப்பான - சுதந்திரமான - போக்குவரத்துக்களை சமாதான சூழலுக்கு முன்பு இருந்த வழிமுறைகளுக்கு கொண்டுபோகப் போவதாகவும் அறிவித்தது புலிகளின் தலைமை. போராளிகளின் போக்குவரத்துக்கு தமது தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றைப் பயன்படுத்தப் போவதாகவும் அறிவித்தது.

அவ்வாறு சுயபாதுகாப்புடன் போராளிகளின் நடமாட்டம், போக்குவரத்து இடம் பெறும்போது, இராணுவத்தினர் அதற்கு இடையூறு விளைவித்தால் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்படுவோம் என்றும் புலிகள் எச்சரித்தனர்.

அவ்வாறு புலிகள் தமது போராளிகளின் போக்குவரத்தை தமது படையணிகளின் உதவியுடன் ஒழுங்கமைக்கும்போது ஏற்படக் போகும் மோதல் யுத்தத்துக்கான கதவைத் திறந்து விடும் என்று எதிர்பார்க்கலாம்.

*உள்ள ஆள்களுக்கு சிறிலங்கா அரசு தனது ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள்ளும் ஒழுங்கமைப்புக்குள்ளும் இணையும் வாய்ப்பை அளித்து வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் பணிபுரிய வகை செய்யும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

இந்தச் சரத்தின் படி அரசும் படைகளும் செயற்பட்டிருந்தால் தற்போதைய யுத்தச் சூழல் உண்டாகும் பின்னணி வந்திருக்காது. யுத்த நிறுத்த உடன்படிக்கையும் முறிந்து போகக்கூடிய சந்தர்ப்பமும் எழுந்திருக்காது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை கடந்த மூன்றரை வருட காலமாக சீராக, செம்மையாக நடைமுறைப்படுத்தி, கடைப்பிடித்து வரும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு தற்போதைய சூழல் சீற்றம் தருவது நியாயமானதே என்று மக்கள் தரப்பில் சுட்டிக் காட்டப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் போராளிகள் கொல்லப்படுவது, அரசியல் அலுவலகங்கள் தாக்கப்படுவது போன்ற சம்பவங்களின் பின்னணியில் தமிழ்க் குழுக்களும் படைத் தரப்பும் இருக்கின்றன என விடுதலைப் புலிகளின் தலைமை திரும்பத் திரும்பக் கூறுகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி - இந்தத் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் வடக்கு - கிழக்கில் இருந்து வெளி யேற்றப்படும் போதுதான் சமாதான சூழல் செம்மையாகப்பேணப்படும். அரசுடன் சமா தானப் பேச்சுக்களையும் ஆரம்பிக்க முடியும்.

உடனடியாக அரசும் படைத்தரப்பும் இணைந்து இதைச் செயற்படுத்தாவிட்டால் யுத்தச் சூழல் தவிர்க்கமுடியாததாகிவிடும் என்று விடுதலைப் புலிகளின் தலைமை கூறிவிட்டது.

**பந்து அரசின் பக்கம்**

தற்சமயம் பந்து அரசுப் பக்கமும் படைத்தரப்புப் பக்கமுமே உள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமை விடுத்துள்ள இப்போதைய சமிக்ஞையை அரசும், படைத் தரப்பும் கவனத்தில் எடுத்துத் தமது செயற்பாட்டை முன்னெடுப்பார்களேயானால் ஈடுபடுவரா? அடுத்து வரும் நாள்களில் இதற்கான பதில்கள் கிட்டும். அந்த நாள்கள் நல்லதாக அமையட்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்டபடி இயல்பு வாழ்க்கை கிட்டவில்லையே என்ற விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்கள் கொந்தளிப்பு அடைந்து அரசுக்கு எதிராக - சர்வதேசத்தின் கண்களைக் திறக்க -வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க முனைந்துள்ளனர்.

**மக்கள் கொந்தளிப்பு**

மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை, சுதந்திரமான கடற்றொழிலுக்கு அனுமதி கிட்டவில்லை, சுதந்திரமான நடமாட்டத்துக்கு வழி ஏற்படவில்லை, அதி உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படவில்லை.

இவற்றால் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்கள் ஏமாற்றம் அடைந்த நிலையில் தங்கள் முடிவைத் தாங்களே எடுக்கக்கூடிய வகையில் தன்னாட்சிக்கான போராட்டங்களை நகர்த்திச் செல்லத் தயாராகிவிட்டனர்.

'மூன்றரை வருடங்களாக ஏமாற்றப்பட்டது போதும், இனியும் பொறுக்க முடியாது. உடனடியாக யுத்தத்தை ஆரம்பியுங்கள். எமது தன்னாட்சியை நோக்கிய பயணத்தை உடன் தொடங்குங்கள்' என்று பொதுமக்கள் தங்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் தலைமையிடம் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

'படையினரின் நடமாட்டத்தை முடக்கப்போகிறோம். முகாம்களை சுற்றி வளைக்கப்போகின்றோம். அதற்கு அனுமதி தாருங்கள்' என்று புலிகளின் தலைமைக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்துவிட்டனர் பொதுமக்கள்.



# பொறுமைக்கு முடிவு கட்டுமாறு கொந்தளிக்கின்றனர் மக்கள்

இந்நிலையில் யுத்த நிறுத்த உடன்பாடு முடிவுக்குக் கொண்டுவரப்படுவதுடன், தமிழர் தரப்பின் மீது- விடுதலைப் புலிகளின் மீது - படைகள் யுத்தத்தைத் திணிக்கும் சூழல் உருவாகும்.

இந்த நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக - எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடும் சந்திப்பாக அமைந்தது நோர்வே தூதரக அதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக் குழுவின் சந்திப்பு.

இந்தச் சந்திப்பின் போது, யுத்தக் சூழலைத் தவிர்க்க அரசும் படைத்தரப்பும் என்னென்ன நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்பதை விடுதலைப் புலிகளின் தலைமை நோர்வேத் தரப்பு ஊடாக அரசுக்கு உறுதியாக - நல்லெண்ண அடிப்படையில் - தெரிவித்துவிட்டது.

- அரச படைகளின் துணையோடு, அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளில் இயங்கும் சகல தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களும் உடனடியாகக் களையப்பட வேண்டும்.
- துணைக்குழுக்கள் அனைத்தும் தமிழர் தாயகப் பகுதியில் இருந்து உடன் வெளியேற்றப்பட வேண்டும்.

**ஒப்பந்த வாசகம்**

புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1-8 சரத்தில் -

*தமிழ்த்துணை இராணுவக் குழுக்களை யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வரும் தினத்தில் இருந்து முப்பது நாள்களுக்குள் சிறிலங்கா அரசு ஆயுத மற்றவர்களாக்கும். இந்த அணிகளில்*

நாடு யுத்தத்துக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்க முடியும். நாட்டையும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

கடந்த மூன்றரை வருடங்களாக இதை நடைமுறைப்படுத்தாத அரசு இனியா செய்யப் போகின்றது என்ற ஐயப்பாட்டையும் விடுதலைப் புலிகளின் தரப்பு வெளிப்படுத்தியுள்ளது.

எங்களுக்கு எதிராக நிழல் யுத்தத்தைத் தீவிரமாக்கிக் கொண்டிருக்கும் படைத்தரப்பு, இந்த விடயத்தில் இறங்கி வருமா என்பது கேள்விக்குரிய விடயம் என்று சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளனர் புலிகள்.

உண்மையிலேயே இந்த நாட்டில் யுத்தம் வெடிக்கக் கூடாது என்பதில் சர்வதேச சமூகம் கொண்டுள்ள கரிசனையை மதித்து யுத்த நிறுத்த உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அரசும் படைகளும் நடை முறைப்படுத்த முன்வந்தால் சமாதானச் சூழல் தக்க வைக்கப்படும் என்ற செய்தியை விடுதலைப் புலிகளின் தலைமை விடுத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யுத்தத்துக்கு கால்கோலினார் என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டு தலைமைப் பதவியில் இருந்து விலகிச் செல்லாமல் உடனடியாக விரைந்து நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுப்பாரா? அல்லது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி மார்தட்டி சிங்கள மக்களிடம் வாக்கு வேண்டி ஆட்சியைத் தக்கவைத்தது போன்ற செயற்பாட்டில் மீண்டும்

'பொறுத்தது போதும் பொங்கி எழுவோம்' என்ற கோஷத்துடன் அரசுக்கும் படைத்தரப்புக்கும் எதிராக வெகுஜனப் போரை ஆரம்பித்து விட்டார்கள் பொதுமக்கள்.

வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் தன்னாட்சியை நிலைநாட்ட சர்வதேசத்தின் ஆதரவைக்கோரி எழுச்சிப் பிரகடனங்களை வெளியிடவும் அவர்கள் தயாராகிவிட்டனர். மாவட்டங்கள் தோறும் ஒன்று கூடி ஓரிடத்தில் இந்தப் பிரகடனத்தை சர்வதேச சமூகத்துக்கு விடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எழுச்சி கொண்ட மக்களை அடக்கி, ஒடுக்கி விடமுடியாது என்ற வரலாற்றுப் படிப்பினையை இலங்கை அரசு புரிந்து செயற்படுமா என்பதே இன்று எழும் கேள்வி.

இலங்கை அரசு புரிந்தும் புரியாத மாதிரி நடக்க முனைந்தாலும், சர்வதேச சமூகம் மக்களின் எழுச்சிக்கு மதிப்புக் கொடுத்து அமைதி நிலை தொடர ஆவனளளள செய்ய முன்வரவேண்டும்.

அப்போதுதான் சர்வதேசத்தின் பிரசன்னத்தின் பலன் மக்களைச் சென்றடைய ஏதுவாகும். சர்வதேசம் வெறுமனே அறிக்கைகளை விட்டுக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. சிங்கள அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமைகளை நிறுத்த ஆவன செய்ய வேண்டும்; அழுத்தம் கொடுக்கவேண்டும்.

'தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம். அந்த இனத்தையும் சமமாக மதித்து நட! சமமாக உரிமைகளை வழங்கு! , அவர்களைத் தங்களது தாயகத்தில் சுதந்திரமாக வாழ வழிவிடு!' என்று சிங்களத் தலைமைகளுக்கு சர்வதேசம் இடித்துரைக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளில் ஒன்று.

இந்த வகையில் சர்வதேசம் செயற்படுமா? இல்லாவிட்டால் சிங்களத்தின் சொற்படி நடக்குமா? அதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். சர்வதேசம் உரிய வகையில் செயற்படாவிட்டால் இந்த அழகிய தீவகற்பத்தில் இரத்த ஆறு ஓடுவது தவிர்க்க முடியாததாகி விடலாம்..

— குகா

# யாழ். பாணம்



## “முன்வாசனை”

**இரு** தசாப்த கால தொடர் யுத்தச் சூழலின் பின்னரான போர் நிறுத்த உடன்பாடு,நாட்டில் அமைதிச் சூழல் உருவாக வழிவகுத்தது. உள்நாட்டில் வாழும் எம்மவருக்கு மட்டுமன்றி, புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாணத்தவர் பலருக்கும் நிம்மதியும், மகிழ்ச்சியும் கிட்ட இந்த உடன்பாடு காரணமாய் அமைந்தது. அன்று முதல் வெளிநாடுகளில் வாழும் நம்மவர்கள் இங்குள்ள சுற்றங்களைக் காணும் நோக்கில் வந்து சில வாரங்கள் தங்கி மீள்வது வழக்கமாகிவிட்டது. அது நியாயமானதும் கூட. வசதி வாய்ப்பு அமைந்ததால் பல தடவைகள் இங்கு வந்து யாழ்ப்பாண மண்ணின் வாசனையை அனுபவித்து மீளும் சந்தர்ப்பம் ஒரு சிலருக்கு வாய்த்ததுண்டு.

யுத்தத்துக்கு முகம் கொடுக்க அஞ்சியோ, வாய்ப்பைப் பயன்படுத்தும் நோக்கிலோ வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தோர், விடுமுறையில் யாழ்ப்பாணம் வரும் வேளையில் போர் காரணமாக ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்கு உள்ளாகி இழப்புக்கள், துயரங்களால் மன விரக்தியுற்ற நம்மவரில் சிலர், வெளிநாடுகளிலிருந்து வந்த ஒரு சிலரின் படோபமான நடையுடை பாவனை, பகட்டான பேச்சு என்பவற்றால் அதிருப்தியுற்று, அவர்களைக் கேலியும் கிண்டலும் செய்வதை நாம் காண நேரிடுகிறது.

அதேசமயம் புலம்பெயர்ந்தோர் இங்கு வந்து தங்கி நிற்கும் வேளையில் வெளிநாடு செல்லுமுன் இங்கு தாம் வாழ்ந்த நிலை, சூழல் என்பவற்றை மறவாது நடக்க முற்பட்டால், தமது உறவுகளின் பாசத்தையும் பரிவையும் ஈட்டி, நற்பெயரோடும் மனநிறைவோடும் திரும்பிச்செல்ல இயலுமல்லவா?

இன்றைய யாழ்-பாணத்தை எய்வதற்கான கட்டியம் கூறவே மேற்சொன்ன பீடிகை.

அவர் எனது அயலவர்; எங்களது நட்பு மிக நெருக்கமானது, ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் ஜேர்மனிக்குச் செல்ல முடிந்ததால் அவரது மகனால் ஓரிரண்டு ஆண்டுகளில் ஜேர்மனிய பிரஜா உரிமையைச் சிரமமின்றிப் பெறமுடிந்தது. அடுத்த சில ஆண்டுகளின் பின் தனது பெற்றோர், உடன் பிறந்தோரை ஜேர்மனிக்கு அழைத்துக்கொள்ளத்தக்க அனுமதியை ஜேர்மனிய அரசு அவனுக்கு வழங்கியது. அவனது தந்தை - எனது நண்பரைத் தவிர அவனது குடும்ப உறுப்பினர் அத்தனை பேரும் ஜேர்மனி சென்று அவனுடன் தங்கிவிட விருப்பம் கொண்டனர். ஆனால், எனது நண்பர் யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லக் கண்டிப்பாக - உறுதியாக - மறுத்து விட்டார்.

தனது மீதிக்கால வாழ்க்கையும், மரணமும் இந்த யாழ்ப்பாண மண்ணிலேயே கழிய வேண்டு மென்பதில் உறுதியாய் இருந்த விசித்திரமான மனிதர் அவர். பிடிவாதக்காரரான அவரது நிலைப்பாட்டை எவராலும் மாற்ற இயலவில்லை. முடிவில் அவரைத் தவிர குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஜேர்மனி சென்று அவரது மகனுடன் இணைந்து கொண்டனர்.

இத்தனைக்கும் குடியிருந்த வீடும் பயன்தரும் தோட்டக்காணியும் நண்பரின் பெயரிலேயே இருந்தன. விவசாய முயற்சிகளோடு அவரது பொழுது கழியும். தாமே தமது உணவைத் தயாரித்துக் கொள்வார். சுதந்திரமான திருப்தியான வாழ்க்கை வாய்த்திருப்பதாகத் திருப்திப்பட்டுக் கொள்வார்.

ஆண்டுகள் சில கழிந்து இடையிடையே நோய் வாய்ப்பட்டார். பின்னர் அடிக்கடி நோய் வருத்தியது. கடைசியில் அடுத்தவர் உதவியின்றித் தனித்தியங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். நோயாளியாகிவிட்ட அவரை ஜேர்மனிக்கு அழைக்கக் குடும்பத்தவர் விரும்பவில்லையோ அல்லது அந்த நாட்டின் சட்டதிட்டங்கள் அனுமதிக்கவில்லையோ தெரியவில்லை. அவரால் அவரது குடும்பத்துடன் கடைசிவரை இணையவே முடியவில்லை.

இத்தனைக்கும் அவரது தங்கையின் மகன் கண்ணனே அவரை அக்கறையுடன் கவனித்து வந்தான். அவர் பாயில் முடங்கிய வேளை தனது குடும்பத்தினரையும் அங்கேயே தங்கவைத்து நிரந்தரமாகவே அவருடன் தங்கி அவரைக் கவனித்துக் கொண்டான். தனது வைத்தியச் செலவுக்காக அவர் வீட்டை விற்றுவிட முடிவு செய்த போது அன்றையவேளைப் பெறுமதியை நாலு பேரைக் கொண்டு மதிப்பிடச் செய்து அந்த மதிப்பீட்டுத் தொகையைத் தானே செலுத்தி அவரது வீட்டைத் தனது உடைமையாக்கிக் கொண்டான்.

ஏறக்குறைய இரண்டாண்டு காலம் படுத்த படுக்கையாயிருந்த அவருக்கு எந்தவிதக்குறையுமின்றி - வைத்திய வசதிகள் உட்பட சகல தேவைகளையும் கண்ணனே முன்னின்று நிறைவேற்றி வைத்தான். பல தடவைகள் செய்தியனுப்பியும் நண்பரின் மனைவியோ, பிள்ளைகளோ இங்கு வந்து அவருக்கு வேண்டிய சேவை எதனையும் நிறைவேற்றி வைக்கவில்லை. கடைசியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் நோய் முற்றி ஒரு நாள் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் நண்பரின் உயிர் பிரிந்தது. அது குறித்து அவரது குடும்பத்தவருக்குக் கண்ணன் தகவல் அனுப்பிவைத்த போதிலும் அவர்களில் எவரும் இங்கு வந்து நண்பரின் இறுதிக்கிரியைகளை நிறைவேற்ற முன்வரவில்லை. ஏனையோரின் ஆலோசனையின் பேரில் நண்பரின் இறுதிக்கிரியைகள் யாவும் கண்ணானாலேயே நிறைவேற்றப்பட்டன. வீடு விற்ற பணத்தில் மீந்திருந்ததைக் கொண்டு எந்தவிதக் குறைவுமின்றி நண்பரின் மீதமிருந்த கிரியைகள், சடங்குகள் யாவும் கண்ணனால் முறைப்படி நிறைவேற்றப்பட்டன.

சென்ற மாதம் நண்பரின் மகன் திடீரென்று யாழ்ப்பாணம் வந்திருந்தான். உறவினர் எவரோடும் அவன் இத்தனை நீண்ட காலமாய் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லையே! அதனால், புத்திசாலித்தனமாக யாழ். நகரில் விடுதியொன்றில் தங்கிய அவன் ஒரு நாள் மாலை தனது தந்தை வாழ்ந்த - தான் பிறந்து வளர்ந்த - வீட்டுக்கு வந்திருந்தான். வரவேற்று உபசரித்த கண்ணனிடம் தனது தந்தையின் கடைசிக்கால வாழ்க்கை, மரணம் குறித்து அவன் எதுவுமே தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டவில்லை. சம்பிரதாயப் பேச்சுகளின் பின்னர் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தான்.

தனது தந்தையாரை ஏமாற்றி குறைந்த விலைக்குக் கண்ணன் வீட்டை வாங்கிவிட்டதாகக் குற்றம் சாட்டியதுடன், கண்ணன் வீட்டுக்காகச் செலுத்திய தொகையைத் தான் செலுத்தி தன் தந்தையின் நினைவாக அவ்வீட்டை வாங்கிவிட விருப்பம் தெரிவித்தான்.

கூடவிருந்தோர் அதிர்ச்சியடைந்த போதிலும், அந்த வீட்டுக்காக, தான் செலுத்திய பணத்தையும் அதற்கு இத்தனை காலத்துக்குரிய வட்டியையும் செலுத்துமாறும் தான் மீண்டும் அவ்வீட்டைக் கையளித்து விடுவதாகவும் கண்ணன் தெரிவித்தான்.

தான் ஜேர்மனிக்குச் சென்று இது குறித்து முடிவெடுத்து அறியத் தருவதாகக் கூறிச்சென்ற எனது நண்பரின் மகன் இற்றைவரை அது குறித்து எதுவுமே தெரிவிக்கவில்லை.

எனக்கு ஓர் உண்மை புரிகிறது. பெற்ற தந்தை உயிருடன் இருக்கும் வரை எந்தவித பற்றும் பாசமும் காட்டாத அந்த மகன் இத்தனை பணம் செலுத்தி அந்த வீட்டை மீளப் பெற்றுத் தந்தைக்கு நினைவுச் சின்னமா அமைக்க நினைத்தான்?

இல்லவே இல்லை. வந்த இடத்தில், எவரோ ஒரு சிலர் கயிறு கொடுத்திருக்கக்கூடும். இப்படி ஒருபோடு போட்டால் கண்ணனிடமிருந்து ஒன்றிரண்டு லட்சங்களைக் கறந்து விடலாம் என அவன் எண்ணியிருக்கலாம்.

போர் நிறுத்தம் வந்ததன் பின்னர் நாட்டில் பொருள்களின் விலைவாசி மட்டும் ஏறியதில்லை. யாழ்ப்பாணத்தில் காணிகள், வீடுகள் பெறுமதியும் விஷம் போல ஏறியதென்னமோ உண்மைதான். ஆனால் ஒன்று. புலம் பெயர்ந்து வெளிநாடுகள் சென்றதால் நண்பரின் மகன் போன்றோரின் மனதில் மனிதத்துவமுமல்லவா செத்து விட்டது.

கடைசியாக ஒன்று,

பருவ காலத்துக்கு ஏற்பவே மழையும் வெய்யிலும்; அமைதிச் சூழலால் விஷ ஜுரம் போல் ஏறிச் சென்ற காணிப் பெறுமதி அமைதிச் சூழல் குலைந்தால் காற்றுப் போன ‘பலூன்’ போலாகி விடக்கூடும்.

மனிதத்துவமே என்றும் நின்று நிலைபெறும்.

**—— பொன்வேளன்**

---

## வாய்ச் சொல்லில் வீரரடி!

‘**2107** ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி காலை 6 மணி.’

அருண் செய்யவேண்டிய பணிகள், சந்திக்க வேண்டிய மனிதர்கள், கடைப்பிடிக்கவேண்டிய நேர ஒழுங்குகள் என்பவற்றைக் கம்பியூட்டர் பட்டியல் இட்டுக்கொண்டு வந்தது.

*‘காலை உணவு 8 ஏ.எம் - எம் 420 ஹொட்டேல்’*
*‘மதிய உணவு 12 பி.எம் - எல் 400 ஹொட்டேல்’*
*‘இரவு உணவு 20 பி.எம்- என் 360 ஹொட்டேல்’*

இறுதியாக ‘இன்று ராகுலனின் பேத்டே’ என்பதையும் கம்பியூட்டர் நினைவுபடுத்தியது. எழுந்தவன் தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மீண்டும் வந்து கம்பியூட்டர் முன் உட்கார்ந்தான். கம்பியூட்டர் திரையில் விநாயகர், முருகன், சிவன் கடவுள்களை வரவழைத்து தனது காலை வணக்கத்தை நிறைவு செய்துகொண்டான். அதன் பின் இன்ரநெற் வழியாகப் பத்திரிகைகளை வாசிக்கத் தொடங்கினான்.

“முதல் பக்கத்தில் ‘ரியு 480 இளைக்கள்’ தங்களுக்குச் சகல துறைகளிலும் இட ஒதுக்கீடு வேண்டும்! என்று வலியுறுத்தி வருகின்றார்கள். ரியு 480 என்ற அடையாள எண் சோதனைக்குழாய் மூலம் பிறந்தவர்களைக் குறிக்கின்றது. இவர்கள் மொத்தச் சனத்தொகையில் சுமார் 20 சதவீதம் ஆகும்”.

கீழே ‘செயற்கை ஓசோன் படலம் பூர்த்தியாகும் நிலையில் சுமார் ஐந்நூறு கோடி இந்திய ரூபா செலவாகின்றது’.

இரண்டாவது பக்கத்தில் ‘மத்திய கிழக்கில் ஈரான், ஈராக், பலஸ்தீனம், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடையே பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது’ அப்பா அடிக்கடி சொல்லுவார் இவை எல்லாம் ஒரு காலத்திலை சண்டைபோட்டுக் கொண்ட நாடுகளாம்.

‘உலக வல்லரசான இந்தியாவிடம் இருந்து விஞ்ஞான, தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ள அமெரிக்கா விருப்பம்....’ அடுத்து

‘செவ்வாய்க்கிரகத்தில் இருக்கும் சட்டங்களும், ...த்துகளும் பூமிக்குப் பொருந்தாது.... சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு’

‘தலைமன்னார், இராமேஸ்வரம் கேபிள் வீதியில் இரண்டு ரோபோக்களிடையே ஏற்பட்ட மோதலினால், ஐந்து நிமிட நேரம் போக்குவரத்து ஸ்தம்பிதம்’

நடுப்பக்கத்தில் ‘சென்னையில் உள்ள பிரபல நடிகை தனது இருபத்தைந்தாவது கணவனை விவாகரத்துச் செய்தார்’

கடைசிப் பக்கத்தில் ‘செவ்வாய்க் கிரகத்திற்கும் பூமிக்கும் இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டி முதல் முதலாக நாளை கல்கத்தாவில் இடம்பெற இருக்கின்றது’

பத்திரிகை படித்துமுடித்து வேலைக்குப் புறப்பட்டான் அருண் அவனது ரூம் இருபதாவது மாடிப் பிளாட்டில் இருந்தது. அங்கிருந்து கேபிள் கார் வழியாக அலுவலகத்துக்கு போனான். அங்கே அவன் செய்யவேண்டிய வேலைகள் கம்பியூட்டரில் பட்டியலிடப்பட்டிருந்தன. அவனுக்கு ஊழியர்களினது சம்பளம் பற்றிய கணக்காய்வு செய்யவேண்டி இருந்தது. ‘பே’ சீற்றைச் செலக்ற் பண்ணி ஒவ்வொருவருடைய நெற்சலறியை ஓடிற் பண்ணும்படி கம்பியூட்டருக்கு கட்டளை பிறப்பித்தான். தனது சலறியையும் பார்த்தான். ‘ஒன்பது லட்சத்து அறுபதாயிரம்’ என்று காட்டியது. அப்பா அடிக்கடி கூறுவார் தனது ஆரம்பகாலச் சம்பளம் வெறும் ஐம்பதாயிரம் ரூபாய்தான் என்று. அவனுக்குச் சிரிப்பாக இருக்கும். எவ்வளவு பணவீக்கம் இங்கு இருக்கிறது?

அப்போது ‘மாலினி’ என்ற அவனுடன் வேலைசெய்யும் பெண் அவனருகே வந்தாள். மாலினியின் ஆயுட்காப்புறுதிப் பணமான இருபது மில்லியன் ரூபாயை இன்று அவளுக்கு வழங்க வேண்டியிருந்தது. அதற்கான ‘கிறடிற் கார்ட்’ ஒன்றைக் கம்பியூட்டர் மூலம் பெற்றுக்கொடுத்தான். மாலினியின் இதயம் முற்றாகச் செயலிழந்த போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துபீட மாணவன் ஒருவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு செயற்கை இருதயத்தைப் பொருத்தி அவளுடைய உயிரைக் காப்பாற்றி இருந்தார்கள்.

அப்பா அடிக்கடி சொல்லுவார் முன்பு ‘எய்ட்ஸ்’ என்ற ஒரு கொடிய நோய் இருந்ததாம். அந்தக் காலத்தில் இப்போது போன்ற மருத்துவ வசதிகள் ஒன்றும் இல்லாததினால் பலர் உயிர்களை இழந்தார்களாம்.

ஆனால், இன்று மனிதனை இறவாமல் செய்வதற்குக்கூட மருந்து கண்டுபிடித்துள்ளார்கள். சென்னையில் உள்ள மருத்துவபீட டாக்டர்கள் சிலர் மனிதனின் மரபணுக்களைக் கொண்டு, மனித உடலிலுள்ள செல்களை புதுப்பித்துக் கொள்வதற்கும், எந்தக் காலத்திலும் எலும்புகள் பழுதடையாமல் இருப்பதற்குமான ஒரு மருந்தைக் கண்டு பிடித்துள்ளார்கள். மனிதனை மரணத்தில் இருந்து காப்பாற்றுவதற்கான முதலாவது கண்டு பிடிப்பு இது என்று உலகம் பாராட்டுகின்றது.



அன்று வேலை முடிந்து வீடு திரும்பிய போது முன் ஹோலில் அப்பா ‘அஜித்குமார்-சிம்ரன்’ நடித்த ஒரு பழைய காலத்துப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். தனது அறையில் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டான் அருண். இரவு 9 மணி ஆனதும் மீண்டும் கம்பியூட்டர் முன்னால் வந்து உட்கார்ந்தான். ஸ்கானரை ஒன் செய்து கெமராவிற்குத் தனது முகத்தைக் காட்டிக்கொண்டு, நியூயோர்க்கில் இருக்கும் நண்பன் இராகுலனுடன் இன்ரநெற் மூலம் தொடர்பு கொண்டான். திரையில் சிரித்த முகத்தோடு இராகுலன். தனது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தமிழில் தெரிவித்துக்கொண்டான்.

ஒரு காலத்தில் ஆங்கிலம்தான் உலக மொழியாக இருந்ததாம். இன்று தமிழ்மொழி இவ்வளவு உன்னதமான நிலையை அடைந்ததற்கு இவனைப் போன்ற பலர்தான் காரணம். அவன் நியூயோர்க்கில் தமிழ் ஆய்வு மையத்தில் பணிபுரிந்தாலும் சனி, ஞாயிறு தினங்களில் கொழும்பு வீட்டுக்கு வந்துபோவான். அவனோடு பலதரப்பட்ட விடயங்களையும் பேசிமுடித்து இறுதியில் -

‘அருண் உன்னுடைய காதல் விசயங்கள் என்ன மாதிரி மச்சான்?’ என்று கரிசனையுடன் கேட்டான் ராகுலன். அருணனது முகத்தில் கவலை தெரிந்தது. சிறிது நேர அமைதிக்குப் பின் ‘ஓம் மச்சான் அவள் என்னை நிராகரிச்சிட்டாள். நான் அட்வான்சாய் இல்லையாம். எல்லாத்துக்கும் மேலாய் ஓர் ஆண்கூட தன்னாலை திருமணம் முடித்து சேர்ந்து வாழமுடியாதாம் அதனாலை’

### ஒரு கற்பனைச் சித்திரம்

‘அதனாலை!’ ‘தன்னுடைய சிநேகிதி குமுதாவோடை சேர்ந்து வாழ முடிவெடுத்திட்டாள். அடுத்த வாரம் இருவருக்கும் றெஜிஸ்ட்டர் மெரேச்சாம்’ என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டான் அருண்.

முன் ஹோலில் இருந்து செய்திகள் ஆரம்பிக்கும் சத்தம் கேட்டது. அவனுடைய அப்பா இந்த நவீன காலத்திலும் ரீ.வியில் செய்திகள் பாராமல் சாப்பிட மாட்டார்.

‘செய்திகள் வாசிப்பவர் ரோசினி. இலங்கை இனப் பிரச்சினைக்கு வெகு விரைவில் அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் என்று அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது’

‘ஆ...... கடவுளே!’

தனது இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு கட்டிலில் விழுந்தான் அருணாச்சலம்.

**இணுவையூர் உத்திரன்.**

# தொடர்கதையாகும் இல்லத்து வன்முறை
# பெண்களின் அபிவிருத்திக்குத் தடைக்கல்




தென்னாசியப் பிராந்தியத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்செயலானது, தொடர்ச்சியாகப் பெண்களின் மனித உரிமைகள், அபிவிருத்தி, சமாதானம், குடும்பக் கட்டமைப்பு ஆகியவற்றுக்குப் பெருந் தடங்கலாகவும், அச்சுறுத்தலாகவும் உள்ளது.

ஆய்வுகளின் படி இலங்கையில் 60% பெண்கள் இல்லத்து வன் முறையாலும், துஷ்பிரயோகத்தினாலும், விசேடமாகப் பாலியல் தொல்லை, பாலியல் வன்முறை, வன்புணர்ச்சி போன்ற தீய செயல்களாலும், இல்லங்கள், அலுவலகங்கள், தனியான இடங்களில் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். தென்னாசியாவில் ஒவ்வொரு இரு பெண்களுக்கு ஒருவர் இல்லத்துவன்முறை, பாலியல் வல்லுறவு, தகாத உறவு இவற்றால் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இல்லத்து வன்முறை என்பது பெண்களது வாழ்வில் தொடர்கதை போன்ற ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. நாகரிக மடைந்து வரும் நவீன உலகில் உலக மயமாக்கல் கொள்கை பூதாகரமாக எழுந்துள்ள இக்கால கட்டத்தில் பெண்கள் இல்லங்களில் தமக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை எனும் அநீதி நிறைந்த ஒரு சூழ்நிலைக்குள் மௌனம் சாதித்தல் அறியாமையாகும். எனவே, மௌனத்தைக் கலைத்து, இந்த வலையிலிருந்து பெண்களுக்கு விழிப்புணர்வையும், வலுவூட்டலையும் ஏற்படுத்துவதே 'தேவை நாடும் மகளிர் அமைப்பு' (வின்) இன் பிரதான குறிக்கோளாகும்.

பெண்களை அதிகமாக இல்லங்களில் வன்முறைக்கு ஆளாக்குபவர்கள் ஆண்களே. ஆணாதிக்கம் செலுத்தி பெண்களை துஷ்பிரயோகம் செய்வதில் வல்லமையும் செல்வாக்கும் உடையவராக ஆண்கள் விளங்குகின்றனர். பெண்களை அடக்கி ஆள்வதில் பெரும்பாலான ஆண்கள் தமது செல்வாக்கைச் செலுத்துவது மட்டுமன்றி, பல துஷ்பிரயோகங்களையும் புரிந்து பெருமிதம் கொள்கின்றனர். இல்லத்து வன்முறைகளால் குறிப்பாக கணவன் – மனைவிக்கு இடையில் வாக்குவாதங்கள், கருத்து வேற்றுமைகள் ஏற்படும் போது அதனால் பாதிப்படைபவர்கள் பிள்ளைகள். இவ்வாறான சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் பிள்ளைகள் பிற்காலத்தில் தாமும் வன்முறைகளில் ஈடுபடுவர்களாக மாறுகின்றனர். அதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்க நேரிடுகிறது.

**சமூகத்தில் பற்றியெரியும் ஆபத்து மிக்க தீ இல்லத்து வன்முறையாகும். இதை அணைக்க ஒன்றிணைவோம்!!**

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்தில் பொதுவாக சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் சம்மந்தமான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால், கொழும்பில் உள்ள பிரதான அலுவலகம் 'தேவை நாடும் மகளிர் அமைப்பில்' (WOMEN IN NEED) ஒவ்வொரு நாளும் உதவி நாடி வரும் பெண்களுக்கு தேவைக்கேற்றவாறு உளவளத்துணைச் சேவை, சட்ட ஆலோசனை, வழிகாட்டல் ஆகியன உளவளத்துணையாளர், சட்டத்தரணிகளால் இலவசமாக வழங்கப்படுகின்றன. இலக்கம் 122, கொட்டா றோட், பொரளையில் அமைந்துள்ள இடர் சேவை நிலையத்தில் இல்லத்து வன்முறை, குடும்பப் பிரச்சினைகளால் பாதிப்படைந்த பெண்களுக்கும், துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகளுக்கும் உளவளத்துணை மூலம் இத்தகைய பாதிப்பிலிருந்து வெளியேறவும், ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும் இலவச சேவை வழங்கப்படுகின்றது.

குடும்பம் /வீட்டு வன்முறைகளால் துன்புறும் பெண்களைக் கருத்திற் கொண்டு 1987ஆம் ஆண்டில் முதன் முதலாக தம்மை இச் சேவைக்கென அர்ப்பணித்த பெண்கள் குழுவொன்றினால் 'தேவை நாடும் மகளிர் அமைப்பு' ஆரம்பமானது. தமது சேவைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் இந்த அமைப்பு தனது பிரதான அலவலகம் ஈறாக கண்டி, மாத்தறை, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடர் நிவாரண நிலையங்களை (Crisis Centre) அமைத்துள்ளது. இலக்கம் 22/1, றக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 22.10.2004 இல் 'தேவை நாடும் மகளிர் அமைப்பு' அலுவலகம் திறக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட சேவைகளை இவர்கள் வழங்கி வருவதுடன், ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கும் இந் நிறுவனத்தால் பல சேவைகள் வழங்கப் பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும், வெளி மாவட்டங்களிலும் இல்லத்து வன்முறையால் பாதிப்படைந்த பெண்கள், சிறுவர்களுக்கு அவசர வேளையின்போது 'வின்' காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள 'Hot line' தொலைத்தொடர்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



Hot line தொடர்பு:- 011- 4718585 ஆகும். அதுமட்டுமன்றி நிர்க்கதிக்குள்ளாகி, இன்னலுற்று கைவிடப்பட்டுள்ள பெண்கள் / பிள்ளைகளுக்கு சிறிது காலம் தமது சூழ்நிலைகளை மறந்து வாழ 'வின்' தற்காலிக புகலிடம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

கொழும்புத் தேசிய வைத்தியசாலை அவசர விபத்துச் சேவை, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, டி சொய்சா மகளிர் வைத்தியசாலை ஆகியவற்றில், 'வின்' இடர் நிவாரண சேவை நிலையங்கள் அமைந்துள்ளன. வன்முறைகளால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்படுவர் களுக்கு ஒரே இடத்தில் ஒரு முகப்படுத்தப்பட்ட வைத்திய சேவை, உளவளத்துணை, சட்ட உதவி ஆகியன வழங்கப்படுகின்றது.

பாதிப்புற்ற பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆதரவு வழங்கும் 'வின்' நிறுவனம் ஒரு இலாபம் கருதாத அரச சார்பற்ற நிறுவனமாகும். பெண்களின் வாழ்வில் ஏற்படும் வன்முறைச் சூழலை வன்முறையாகக் கண்டிக்கும் 'வின்' இறுதிவரை பெண்களின் மேம்பாட்டுக்காகச் சேவை செய்வதையே தொலை நோக்காகவும், உன்னத இலக்காவும் கொண்டு பணி புரிகிறது.

**– சந்திரா – தியாகராஜா**

## தாயாகும் உங்களுக்கு...



- கர்ப்பம் தரித்த நாள்முதல் பிரசவத்திற்குத் திட்டமிடுங்கள்.
- ஏற்கனவே குழந்தைகள் பெற்றெடுத்த பெண்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள்.
- பிரசவத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு டாக்டரை அணுகி உடலைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.
- புகையிலை போடும் பழக்கம் இருந்தால் அதை அறவே நிறுத்தி விட வேண்டும்.
- டாக்டரின் ஆலோசனையின் பேரிலேயே எந்த மாத்திரையையும் உட்கொள்ள வேண்டும்.
- கர்ப்பம் சகஜமான நிலையில் இருக்கிறதென்றால் வழக்கமான வீட்டு வேலைகளைச் செய்யலாம்.
- எளிய உடற்பயிற்சிகள் மூலம் தசைகளை வலுவூட்டுதல் பிரசவத்தை எளிமையாக்கும்.
- கர்ப்பம் தரித்த பெண் நீரிழிவு நோய் உடையவராக இருந்தால் விஷேட கவனம் எடுத்துக்கொள்வது அவசியம்.
- போதையளிக்கும் எந்தப் பொருளையும் சாப்பிடக்கூடாது.
- உணவில் பொதுவாகக் கட்டுப்பாடு தேவையில்லை. ஆனால், அளவான சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும்.
- முட்டை, பால், மீன் கோழி ஆகியவற்றைச் சாப்பிடுவது நல்லது.
- தினசரி பால் அருந்துவது நல்லது.
- கருத்தரித்து முதல் ஏழு மாதங்களில் மாதம் ஒரு முறையும், எட்டாவது மாதத்தில் மாதம் இரு முறையும், ஒன்பதாவது மாதத்திலிருந்து குழந்தை பிறக்கும்வரை ஒவ்வொரு வாரமும் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது பாதுகாப்பானது.

~ சந்தியா

### அர்த்தமுள்ள வாழ்விற்கு...

*மனை வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டும் உயரிய பண்பு ஒரு இல்லத் தலைவியிடம் இல்லையாகில், ஒருவனது வாழ்வு எத்துணைச் சிறப்புக் கொண்டதாயினும் பயனற்றுப் போகும்.*

~ திருவள்ளுவர்

## சந்தியாவின் கடிதங்கள்



**ஹாய் பிரியா,**

உன் பதில் கண்டேன். மிகவும் சந்தோஷம்.

இக் கடிதத்தில் கணவனது அன்பைக் கவர்ந்து குடும்பத்தைச் செம்மையாக நடத்துவதற்கு சில ஆலோசனைகளை எழுதுகின்றேன்.

(ஆலோசனைகளை மட்டுமே என்னால் கூறமுடியும். அதைச் செயற்படுத்துவது மனைவியரின் கையிலேயே – சாமர்த்தியத்திலேயே உள்ளது.)

எந்தக் கணவனும் தன் மனைவி அழகாக இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவகை அழகு தான். அதை வெளிப்படுத்துவதிலேயே சாமர்த்தியம் தங்கியுள்ளது. வெளியில் செல்லும் வேளை என்று மட்டுமில்லாது எந்நேரமும் (நாம் சமைக்கும் நேரத்திலும் கூட) சுத்தமாகவும் சீராகவும் நம்மைப் பேணவேண்டும். அதாவது, எம்மை எந்த நேரமும் அழகுபடுத்திக் கொண்டே இருக்கவேண்டும்.

அழகுபடுத்தல் என்றால் ஆடம்பரச் செலவுக்கு வழிசமைத்தல் என்பதல்ல. எளிமையும், சுத்தமுமே உண்மையான அழகு. அவற்றைக் கடைப்பிடித்தாலே அழகாகி விடுவோம். அந்த அழகு நிச்சயம் கணவனை நம்பால் ஈர்த்துக் கொள்ளும். குறிப்பாக கணவனின் ரசனை அறிந்து நம்மை அழகுபடுத்த வேண்டும்.

இதேபோல் வீட்டையும் சுத்தமாகவும் அழகாகவும் பராமரிக்க வேண்டும்.

குடும்ப நிர்வாகத்தில் சமையலும் ஒரு கலை தான். உலகத்திலுள்ள அநேக ஆண்கள் (சில விதிவிலக்குகளும் இருக்கலாம்) உணவை ரசித்து, ருசித்து உண்பதில் பலே கில்லாடிகள். எனவேதான், பாட்டிகள் சொல்லுவினம் 'சமையலாலே உன் கணவனைக் கட்டிப்போடு' என்று. வசதியான வீடுகளில் சமையல்காரரும் இருப்பினம். ஆனால், மனைவியின் கையால் ருசியான உணவை சமைத்து கணவனுக்குப் பரிமாறி உண்ணும் போதுதான் அவர்களிடையே நெருக்கம் அதிகரிக்கும்.

கணவனுடன் தனித்திருக்கும் போது அவரைக் கிண்டல் செய்யலாம் (ரசித்து சிரிக்கக் கூடிய கணவனுக்கு மட்டும்....) ஆனால், என்னதான் அன்பான, தமாஷான கணவனாய் இருந்தாலும் பிறர் முன்னிலையில் தன்னைக் கிண்டல் செய்வதை விரும்பமாட்டான். இவ்வாறு செய்யும்போது இவருக்குமிடையில் பிணக்குகள் தோன்றுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக உளவியலாளர்கள் கருத்துக் கூறுகின்றார்கள்.

அடுத்து பிறருடன் ஒப்பிட்டுப் பேசுதல். இது முற்றாகவே தடை செய்யப்படவேண்டியது.

என்ன, பிரியா நான் சொல்லும் ஆலோசனைகள் ஆண்களின் அடிமைகளாக நம்மை மாற்றுவதற்கு வழிசமைக்கும் என்று நினைக்கின்றாயா?

உண்மையிலேயே குடும்ப வாழ்வு சிறப்பதற்கு இதுதான் நல்ல வழி. வாழ்க்கையில் வெற்றி கண்டு வளமாக வாழும் பெண்களைக் கேட்டால் நிச்சயம் இதை ஒத்துக்கொள்வார்கள்.

நாம் விட்டுக் கொடுக்கும் போது தான் நமக்கும் மற்றவர்கள் விட்டுக்கொடுப்பார்கள். அதாவது, நாம் நம் கணவனை மதித்து வாழும் போது நமக்கும் உரிய இடத்தைக் கணவனிடமிருந்தும் பெற்றுக்கொள்ளமுடியும்.

**பிரியமுடன் சந்தியா**

# வரலாறு எழுதிய கடற் பயணங்கள்...



தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு திடீரென எழுந்த கற்பனைக் கதையல்ல. காலாகாலமாக தேங்கியிருந்த உணர்வு தனக்கென சரியான பாதையைத் தேர்ந்தெடுத்த போது அது ஆயுத மேந்துமளவுக்குத் தூண்டப்பட்டது. ஆரம்பகால விடுதலைப் போரில் தமிழனுக்கென்று இராணுவ பலம் இருந்ததில்லை. அந்தப் பலம் வளர்ந்து கொண்டிருந்த காலமது. ஆங்காங்கே ஸ்ரீலங்கா, இந்திய இராணுவத்தை முடக்கிவிடும் தந்திரோபாயக் கெரிலாத் தாக்குதல்களே நடந்தேறின. அவை இராணுவத்திற்கு பலத்த நெருக்கடிகளைக் கொடுத்தன. அவ்வாறான சிறுசிறு தாக்குதல்களும் தமிழனின் ஆரம்பகால அத்திவார வெற்றிகளாக அமைந்தன. இருந்தபோதிலும் அரசால் அன்று தடைசெய்யப் பட்டிருந்த உணவுப் பொருள்கள், மருந்துப்பொருள் களைப் பெற்றுக்கொள்ள இரகசியப் போக்குவரத்துப் பாதைகளின் தேவை வடக்கு - கிழக்கு பகுதியெங்கும் மிகவும் தேவையாக இருந்தது. இவ்வாறான காலகட்டத்தில் புலிகள் தங்களினதும் , தம் மக்களினதும் தேவைகளை நிறைவு செய்ய கடல்வழிப் பயணங்களை சரியான முறையில் பயன்படுத்தினர். தங்கள் தளபதிகள், உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது மக்களின் மருத்துவ வசதி, உணவுப்பரிமாறல், செய்தித் தொடர்பு போன்றவற்றுக்காகவும் சிறுபடகுகள் மூலம் கடல்வழிப் பயணங்களை ஏற்படுத்தி இருந்தனர். அதன் மூலம் தங்கள் தேவையை தாமே நிறைவேற்றும் துணிவும், திட்டங்களும் நல்ல முகாமைத்துவமும் அவர்களிடையே இருந்தன.

இவை பற்றி வாசிக்கும் நல்ல காலங்கள் எனக்குக் கிடைத்தது. அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'சுதந்திரவேட்கை' என்ற நூலில் 'புதிய தரிசனங்கள்' என்ற அத்தியாயத்தில் மிகத் தெளிவாக தங்கள் கடற் பயணங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கடற்புலிகளின் வழித் நடத்தல்கள், அவர்களின் மதிநுட்பம், துணிச்சல் போன்றவற்றை அவர்களோடு இருந்த அனுபவத்தை வைத்து எழுதியிருக்கிறார். சில பயணங்கள் நெஞ்சை உருக்குபவையாக உள்ளன. அந்த நூலில் கூறப்பட்ட சில பயண அனுபவங்களை உங்களுக்குச் சொல்வதினூடாக நீங்கள் அந்த நூலை விரும்பிப் படிக்க முனைவீர்கள்.

போராட்டம் சுலபமானதல்ல. துப்பாக்கியோடு திரியும் தமிழ் இளைஞர்கள் இலட்சிய வேட்கையோடு போராடுபவர்கள். தலைவர்களை, தங்கள் தளபதிகளைக் காப்பற்ற உயிரும் கொடுக்கும் உத்தமர்களாக இருக்கிறார்கள். சுருக்கமாகக் கூறின் ஒவ்வொரு போராளியும் ஒவ்வோர் உயிராயுதம். தங்கள் தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளும் பண்பு கொண்டவர்களாக ஆரம்பகாலக் கட்டமைப்பு இருந்தது.

**அன்ரன் பாலசிங்கத்தின் கடற்பயணம்**

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அன்று அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களின் உடல் நிலை சுகவீனமுற்று மோசமடைந்தது. மருத்துவ வசதிகளைப் பெறும் பொருட்டு இந்துமா கடலைக் கடந்து இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த அனுபவத்தை நேரே கண்ட அடேல் பாலசிங்கம் அவர்கள் வியப்படையும் வகையில் அந்நூலில் குறிப்பிடுகிறார்.

'எம்மை எதிர்கொண்டு ஓடி வந்தது இந்துமா கடல். நாம் பிசகான வேளையில் வந்திருக்கிறோம் என்பதையும், அடுத்துவரும் பலமணி நேரம் வாழ்க்கையே வெறுக்கும் அளவுக்கு நிலைமை மோசமானதாக இருக்கப்போகிறது என்பதையும் அது தயங்காமல் எமக்கு உணர்த்தியது. வேண்டாத விருந்தாளிகளாக நாம் அந்தப் பரந்த நீர்பரப்பில் நின்றோம். மேலேழுந்து சுழற்றியடித்த அலைகள் வெளிப்படையாகவே தமது சீற்றத்தை காட்டின. விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசை, படகின் அணியத்தில் கட்டளை நிலையெடுத்து நின்று படகைப் பொறுப்போடு நேர்த்தியாகச் செலுத்திக் கொண்டிருந்தார். கொந்தளிக்கும் கடலிலே சீறியெழும் அலைகளினுடாக சூசையும் அவரது அணியினரும் இலகுவாகப் படகோட்டும் இலாவகம் கண்டு நான் மரியாதை கலந்த வியப்போடு நின்றேன். வெறியாடும் கடல் மீது தடுமாறிச் செல்லும் படகில் உறுதிதளராது அவர்கள் கால் பதித்து நின்றார்கள். குளிர் நீர் படகு மீது சவுக்கடியாக விழுந்து அவர்களைத் தெப்பமாக நனைத்த போதும் கடமையில் கண்ணாக நின்று செல்லும் திசையின் இலக்கைக் குறிவைத்து, படகினை நுட்பமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இளம் போராளிகள்தான். ஆயினும் வயதிற்கு மிஞ்சிய சாமர்த்தியமும், தன்னம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது. சினந்து எழும் அலைகளின் மிரட்டல்களுக்கு கிறங்காது கடலும் படகும் ஆட தாமும் இலாவகமாக அந்த ஆட்டத்திற்கு ஒத்திசைவாக அசைந்தவாறு அவர்கள் படகோட்டினார்கள். தளபதி சூசை காட்டிய திசையிற் பார்த்தோம் எமக்குப் பின்னால், தூரத்திலே மங்கலாக இரண்டு கரும் புள்ளிகள் தெரிந்தன. இரண்டு படகுகள். எமது வேகத்திற்கு அனுசரணையாக வந்து கொண்டிருந்தன. நாம் சென்று கொண்டிருந்தது போன்ற அதே மாதிரியான படகுகள். ஆனால் தூரத்தில் சிறிய உருவத்தில் தெரிந்தன. துள்ளிப் பாய்ந்து, முல்லைத் தீவுக் கடற்பரப்பை உழுதபடி வந்து கொண்டிருந்தன. எமது காவற் கவசங்கள் இவை. துணிச்சல், தியாகம், அர்ப்பணிப்பு அவற்றோடு வெடிமருந்துகளும் நிரம்பிய படகுகள். இவர்கள் கடற்கரும்புலிகள். எமது பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்ட வர்கள்.

'நாம் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக தமது உயிரையும் கொடுக்கத் தயாராக வந்தவர்கள். எமது பயணத்திற்கு அச்சுறுத்தலாக சிறிலங்கா கடற்படைப் படகுகள் வருமேயானால் அவற்றோடு மோதி அவற்றை அழித்தொழிக்கும் முடிவோடு வந்துகொண்டிருந்த ஆண்களும், பெண்களும் இவர்கள். எமது உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய தியாகத்தையும் புரிய மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது இந்த அன்பிற்கும், மதிப்பிற்கும் தகுதியுடையவர் அல்லர் என நான் உணர்ந்து கொண்டது இது தான் முதற் தடவையல்ல. தளபதி சூசையை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். சிங்களக் கடற்படையால் எழக்கூடிய ஆபத்துகள் பற்றி நன்கறிவார் என்பதும், அப்படியான ஆபத்தான சூழ்நிலை எழுந்தால் அதனைச் சமாளித்து வெற்றி கொள்ளும் திறனாற்றல் அவரிடமுண்டு என்பதிலும் எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது'

இவ்வாறு அது தொடர்ந்து செல்கிறது. கிட்டத்தட்ட இரு தசாப்பதத்திற்கு முன்னர் கடற்புலிகளின் துணிச்சல் நல்லதொரு நிர்வாகக் கட்டமைப் பையும், இராணுவ பலத்தையும் பெற்றிருந்தது. பேரினவாத சக்திகளின் பலத்தை சிதறடிக்கும் துணிச்சல் மிக்க போராளிகள் அத்திவாரக் கற்களை - ஒரு விடுதலை இயக்கத்தின் சுதந்திர வீட்டைக் கட்டுவதற்காக - அடுக்கி இருந்தார்கள்.

மேலும் அந்த பயணம் தொடர்ந்தது. "யாரிடம் போய் நியாயம் கேட்பது. எந்த மனித நேய அமைப்புகளும் முன்வரத் தயாரில்லை. நமக்கு நாமே துணை. நாம்தான் விடுதலை பெறவேண்டும். வளர்ந்து கொண்டிருக்கும் இயக்கத்தில் ஓர் உயிர் இழப்பும் பெரியதோர் இழப்பு. அவ்வாறான ஒவ்வோர் இழப்புக்களையும் சுமந்து கொண்டு அடுத்த கட்டத் திற்குள் நுழைய நெஞ்சைக் கல்லாக்க வேண்டும்."

"அவ்வாறான பயணத்தில் நடுக்கடலுக்குள் வந்து விட்டோம். நாம் போக வேண்டிய தூரத்தை விட ஓடிவந்த தூரம் அதிகமென்பது தெரிந்தது. ஆகவே திரும்பப் போவதில்லை. பயணம் தொடர வேண்டியதுதான். வேறொரு வழியில்லை என்பது அவருக்கு (சூசை) தெரியும். சூசை என்னைப் பார்த்தார். கடற்போராளிகள் ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எதையாவது செய்ய வேண்டும் என்று சூசை தவித்தார். படகின் வேகத்தைக் குறைக்குமாறு ஒட்டியிடம் உரத்துக் கூறினார். 'கடற்படைப் பீரங்கிப் படகுகள் திருகோணமலையிலிருந்து புறப்பட்டு விட்டன' என்று பதில் வந்தது. எட்டத்திலிருந்து வரப்போகும் ஆபத்தை ஊதாசீனப்படுத்தியவராக 'கொஞ்ச நேரம் மெதுவாக ஒட்டு' என்று சூசை திரும்பவும் கத்தினார். ஆழ் கடலின் ஊடாகவும், அதிகரிக்கும் இருட்டின் ஊடாகவும் கடலின் நிலைமைக்கு ஏற்றவாறும் பாலாவின் உடல் உபாதைக்கு ஏற்றவாறும் படகின் வேகத்தை மாற்றியபடி சென்று கொண்டிருந்தோம். சூசை தான் குந்தியிருந்த அணியத்தின் விளிப்பிலிருந்து ஒரு கணமும் நகரவில்லை. கடல் மீது தமது கூர்மையான பார்வையைத் தூரத்தில் பரத்திய படி இருந்தார்" என அவர் விபரிக்கிறார்.

இவ்வாறு உடல் நலம் பாதிக்கப்படும் சூழ்நிலையில் கூட, போராளிகள் மனம் தளராத துணிவோடு நகர்ந்தார்கள். தம் தலைவனின் கட்டளையை ஏற்ற ஒப்பற்ற போராளிகள்.

"இவ்வாறு தொடர்ந்த பயணத்திலும் பல அசம்பாவி தங்களை எதிர் கொண்டு தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து நிறைவேற்ற வேண்டும் என்ற இலட்சியத்தோடு இருந்த போராளிகளின் மனோ திடத்திற்கு நடுவே அடுத்த மாற்றம் நிகழ்ந்தது. அந்த சிறிய படகிலிருந்து இனி நாம் பெரிய கப்பலுக்கு மாறவேண்டும்.

"எமது கப்பலில் இருந்து இன்னுமொரு சரக்கு கப்பலுக்கு நாம் ஏற வேண்டும். அருகருகாக அணுகிய போது எதிர்பாராத ஒரு பிரச்சினை தோன்றியது. அமைதியாக நிற்கமாட்டேன் என்று கடல் பிடிவாதமாக இருந்தது. கடும் கடலடி எத்திக் கொண்டிருக்கும் இரண்டு கப்பல்களின் பக்கத் தடை யணைகள் ஒன்றோடு ஒன்று மோதுவதும், மோதிய அதிர்ச்சியில் விலகி வழிவதும், அப்படி விலகும் போது இரண்டுக் கும் இடையே பென்னம் பெரிய இடைவெளி கிழிவதும், இவையெல்லாம் ஒரு கப்பலில் இருந்து அடுத்த கப்பலுக்குச் செல்வது முடியவே முடியாது என்று உணர்த்தியது. கப்பலின் தளத்தில் நாம் எல்லோரும் நின்று கொண்டிருந்தோம். என்ன செய்வது என்ற சிந்தனை. ஐம்பது அடி கீழே, கடலின் பயமும் பயங்கரமும் தெரிந்தன. அதில் இரும்புக் கலங்கள் இரண்டும் முட்டி மோதிக் கொண்டிருந்தன. இரண்டுக்கும் குறுக்காக நடைப் பலகையைத் தொடுத்து அதில் நடப்பது என்பது அசாத்தியம். கப்பல்களின் ஆட்டத்தில் பலகை பொறிந்து விழும். ஒரு கப்பலில் இருந்து அடுத்த கப்பலுக்குக் கம்பான் வடத்தில் கப்பல் வீரர்கள் ஏறியது போல எம்மாற்போக முடியாது. இவ்வாறான சூழலிலும் அந்தக் கப்பலுக்குள் அவர்கள் மாறினார்கள்.

"நாம் பாய வேண்டியிருக்கும். ஆனால், எப்போது என்பதே கேள்வி. காத்திருப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. கடல் சீர் ஏற்பட்டு கப்பல்கள் ஆடாமல் நிற்கும் ஒரு நிலை வருமளவும் வாடி இருக்கத் தீர்மானித்தோம். பின் போராளிகளின் துணையோடு சரக்கு கப்பலினுள் மாறியதாக அவர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு அக்கால கட்டத்தில் ஏற்பட்ட அவசரத் தேவையைக் கடற்புலிகள் துணிரகமாகச் செய்திருந்தார்கள். அவற்றுக்கான துணிவும், திட்டமிடலும்,நிர்வாக ஒழுங்கமைப்புக்களும் யார் கற்பித்தார்கள்? எங்கிருந்து பெற்றார்கள்? எல்லாம் இலட்சியப் பாதையை அடைவதற்கான ஓர் உணர்விலிருந்து வெடித்தெழுந்தவை தான்.

பின்னர் அந்தப் பயணம் போராளிகளின் துணை யோடு கரையை அடைய முனைந்தது. "வெளிநாடு ஒன்றின் கடற்கரைப் பகுதிக்குள் சட்ட விரோதமாகச்



சென்று கொண்டிருந்தோமாதலால் அகப்பட்டு விடக் கூடாது என்பதற்காக கரைக் காவலரும் கடற்படையினரும் வருகின்றார்களா எனப் பார்த்த படியே சென்றோம்." இவ்வாறான ஒரு பயணத்தின் பின் ஒரு பாதுகாப்பான அமைதியான சூழலை அடைந்தோம் எனப் பயத்தோடும், நிம்மதியோடும் சாதித்துவிட்ட துணிச்சலோடும் அடேல் பாலசிங்கம் அவர்கள் அந்த நூலில் குறிப்பிடுகிறார். இவை ஒரு கதையல்ல. அறிந்தும், அறியாமலும் இருக்கும் விடையமல்ல. ஒவ்வொரு தமிழனினதும் நெஞ்சில் புகுந்திருக்க வேண்டிய அனுபவங்களாக இவை மாறவேண்டும்.

இவை மட்டுமல்ல "தமிழீழ விடுதலைப்போராட்டம் உள்ளிருந்து ஒரு நோக்கு" என்ற சுதந்திர வேட்கை யில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய, அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்று நிறையவே இருக்கின்றன. ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் அந் நூலைப் பெற்று அதிலிருக்கும் அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நாளைய எம் பிரதேசத்தின் வரலாறு சொல்லும் நல்ல புத்தகங்கள் இவையே.

அ.லக்ஷ்மன்
யாழ்.பல்கலைக்கழகம்.

# தமிழ்த் தேசியத்தை வீறுகொண்டு எழவைத்த ஆடிக்கலவரம்

ஆடிவேல் விழாவை வரவேற்பதற்காகக் கொழும்பு, காலி வீதி விழாக்கோலம் பூண்டிருந்தது. பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயில் அழகுற வாழை, தோரணங்கள் மற்றும் வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு பார்ப்போரைக் கவர்ந்திழுத்தது.

ஜூலை 23ஆம் திகதி இரவு பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயிலில் என்றுமே இல்லாதளவு பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பல்வேறு கலை நிகழ்வுகள் அடியார்களைப் பரவசப்படுத்தின. ஆலயத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அன்று நள்ளிரவு நடக்கப்போகும் அந்தப் பயங்கரத்தை அறிந்திருக்க வாய்ப்பில்லை தானே. கதிர்காமக் கந்தனுக்குத் திருவிழா. காலியில் அது பெருவிழா.

விடிந்தால் திங்கட்கிழமை எல்லாமே அழிந்து போயிருந்தன. காலி வீதியில் கட்டுக்கட்டாக அடுக்கி



வைக்கப்பட்டிருந்த கரும்புத்தடிகள் முருகனது பூசைக்குப் பயன்படாமல் தமிழனது முதுகிற்குப் பூசை செய்யப் பயன்படுத்தப்பட்டன. இந்தக் கரும்புத் தடிகளை முறித்து தமிழரைத் துவம்சம் செய்து எரியும் நெருப்பில் தூக்கிப்போட்டதை நேரில் கண்ட தமிழர் எப்படி மறப்பர்?

அந்த ஆடிக்கலவரம்தான் இன்று தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கு வித்திட்டது எனலாம். 1983 ஆடித் திங்களில் தமிழனது வாழ்வுக்குக் குழி தோண்டப்பட்டது. அதே நாளில் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் கட்டுநாயக்கா விமானத் தளத்தில் சிங்கள தேசத்தின் பேரினவாத அராஜகர்களுக்குக் குழிதோண்டப்பட்டது. அப்போது இந்தப் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் மீண்டுமொரு கலவரத்தைத் தொடங்க அச்சப்பட்டனர். விடுதலைப் புலிகளின் பலத்தை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் தமிழ்த்தேசியம் இன்று தனது இலக்கு நோக்கி நகர்கிறது. இந்தச் சூழலில் எத்தனை கலவரத்தை சிங்களத் தலைமைகள் மேற்கொண்டாலும் அதனை முறியடிக்கத் தமிழ்த்தேசியம் தயாராகவே இருக்கிறது என்பது வெளிப்படை.

பௌத்த சிங்கள பேரினவாதிகளின் வெறியாட்டம்தான் (கறுப்பு) ஜூலைப் படுகொலைகளாகும். தமது குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசே முன்னின்று நடத்திய கொடூரத்தைத் தென்னிலங்கை கண்டது. நாகரிகமுள்ள மனித சமூகம் தலைகுனிந்து நின்றது. உலகில் இவ்வாறான மோசமான சம்பவத்தை எங்குமே காணமுடியாது.

பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்டு மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் தாக்குதலுக்குள்ளாகினர். தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆண்டாண்டு காலமாகச் சிறப்புடன் வாழ்ந்த தமிழர்கள் தமது வாழ்விடங்களை விட்டு அகதிகளாயினர். வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் சூறையாடப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. எரியும் நெருப்பில் தமிழர்களை உயிரோடு தூக்கிப் போட்டனர். இதில் பச்சிளம் குழந்தையும் தப்பவில்லை. இந்தக் கொடுமைகளைச் சிங்கள சமூகம் வேடிக்கை பார்த்து நின்றது.

## கட்டுநாயக்காவில் பழிதீர்ப்பு

நள்ளிரவு திம்பிரிகசாயவில் மூட்டிய தீ தென்னிலங்கையெங்கும் வேகமாகப் பரவியது. ஜூலை 24ஆம் திகதி வழக்கம்போல் கொழும்பு மாநகரம் சுறுசுறுப்புடன் காணப்பட்டது. அன்று திங்கட்கிழமையாக இருந்ததால் அதுமேலும் உற்சாகமாக இருந்தது. அன்றாட கடமைக்காகச் சனக்கூட்டம் காலையில் நிரம்பி வழிந்தது. காலை 9 மணி இருக்கும். கோட்டையில் இருக்கும் தமிழரது கடைகள் சூறையாடப்பட்டு, கொளுத்தப்பட்டன. அது மேலும் தீவிரமடைந்து தமிழர்கள் வர்த்தக ஆதிக்கம் செலுத்திய புறக்கோட்டைப் பகுதிக்கும் பரவியது. தமிழரது வர்த்தக நிறுவனங்கள் எரிக்கப்பட்டபோது எழுந்த புகை மண்டலம் வானத்தை இருட்டாக்கியது. சில மணி நேரம் விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதேபோன்று 17 வருடங்களின் பின்னர் கட்டுநாயக்காத் தாக்குதலில் விமானம் பறப்பதை நிறுத்தி, தமது பழியைத் தீர்த்து கொண்ட னர் தமிழர்கள்.

கொழும்பு மாநகரப் பகுதிகளிலும், அதை அண்டிய புற நகர்ப்பகுதிகளிலும் இருந்த தமிழரது வாழ்விடங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. சிங்களக் காடையர் கூட்டம் தமிழரது சொத்துக்களைத் தேடி அழித்தனர். தமது கடமைகளை ஆற்ற பஸ்களில் பயணம் செய்த தமிழர்கள் வழிமறிக்கப்பட்டு, கீழே இறக்கப்பட்டு, நையப்புடைக்கப்பட்டனர்; கூரிய ஆயுதங்களினால் தாக்கி கொல்லப்பட்டனர். வீதிகளில் நடந்து சென்ற தமிழர்கள் பொல்லுகளாலும் கம்பிகளாலும் தாக்கப்பட்டு அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் போடப்பட்டனர். கொழும்பு மாநகர அனைத்து வீதிகளிலும் தமிழருக்குச் சொந்தமான வணிக நிறுவனங்கள் இருந்தன. அதனால், அனைத்து வீதிகளிலும் தீச்சுவாலை சுடர் விட்டு எரிந்தது. எங்கு பார்த்தாலும் அழுகை ஒலியும், கூக்குரல்களும் கேட்ட வண்ணமாயிருந்தன. தமிழனாகப் பிறந்ததுதான் இவர்கள் செய்த ஒரே குற்றம். அதற்காகவே தமிழர்கள் துன்பத்தை அனுபவித்தார்கள். அந்தத் துன்பத்தைத் தந்தவர்களுக்கே திருப்பித் துன்பத்தைத் தர வேண்டுமென்ற உறுதிப்பாட்டோடு தமிழ்த்தேசியம் எழுந்தது.

ஆடிக்கலவரம் தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கு வித்திட்டு விடுதலைப் போராட்டத்தை மேலும் வீச்சாக்கியது. அதுவே இன்று உச்சநிலையடைந்து தமிழர் தாயகத்தைக் கட்டியெழும்பும் உன்னத நிலைக்கு உயர்ந்தது.

தமிழினப் படுகொலை செய்தவர்கள் தமிழ் இளைஞர், யுவதிகளைக் காரணமின்றிக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். தமிழ்ப்பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் கள். தமிழரது சொத்துக்களைச் சூறையாடி ஏப்பம் விட்டார்கள். தமிழரது சொத்துக்களுக்கு தீமூட்டி எரித்தார்கள். தமிழரது நிலங்களை ஆக்கிரமித்து ஏதிலியாக்கினார்கள். இவை அனைத்தையும் செய்தது இந்த பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தான். இவர்கள் இன்றும் திருந்தினார்களா? இனி மேலும் திருந்துவார்களா? பேரின வாதிகள் என்றால் தமிழருக்குத் தீங்கு செய்த அனைத்துச் சிங்களவர்களுக்கும் பொருந் தும். பேரினவாத வன்முறை கட்டவிழ்த்து விடப்படும்போது மனித உரிமை வாதிகளும் நீதித்துறையினரும் மௌனமாகிக் கொண்டனர் என்பதுதான் இங்கு வேடிக்கையானது.



கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதலில் அழிந்த விமானம்

## ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய மௌனம்

ஜூலை 23 நள்ளிரவு தொடங்கிய சிங்கள ஆட்சியாளர்களின் வன்முறை இந்திய வெளிவிவகார அமைச்சர் பி.வி. நரசிம்மராவ் இலங்கை வரும் வரை நீடித்தது. ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களோ அல்லது அரசுத் தலைவர்களோ தமிழர்கள் மீது தாக்குதல் நடைபெறுவதை நிறுத்துமாறு கோரி ஓர் அறிக்கைதானும் விடவில்லை என்பது தமிழர்களை ஆத்திரம் கொள்ளச் செய்தது.

1970 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக்கட்சி 1977 இல் பதவிக்கு வருவதற்காகத் தமிழருடைய வாக்குகளை எதிர்பார்த்தது . ஜே.ஆரும், பிரேமதாசாவும் தமிழர் வாழ்விடங்களை நோக்கிச் சென்றனர். தமிழரின் வாக்குப் பலத்தால் ஆட்சிபீடமேறி அதிகாரத்தைப் பலப்படுத்தினர். அதே ஜே.ஆரும் பிரேமதாசாவும் மேல்மாடியில் நின்றுகொண்டு தமிழர்கள் கொன்றொழிக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர். இந்த வரலாற்றுப்பதிவு தமிழர்களின் மனங்களில் ஆழமான பிளவை ஏற்படுத்தியது எனலாம்.

தமிழன் ஆண்ட பரம்பரை. இலங்கை முழுவதற்கும் சொந்தக்காரன். ஆனால், இன்று வாழ இடம்தேடும் அவலம். சுதந்திர தாகம் தமிழனது தணியாத தாகம். அதனைப் பெறுவதற்கு முயற்சிக்கிறான். இழந்த நாட்டை மீட்க உயிரையும் கொடுக்கச் சித்தமாயுள்ளான்.

1982 கொழும்பு உயர்நீதிமன்றில் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்ற இளைஞர்கள் நீதிபதி முன் நிறுத்தப்படுகிறார்கள்.

பங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுவருகிறது. இந்த இளைஞர்கள் இறுதி வாக்குமூலத்தில் குறிப்பிடுகின்றார்கள் 'எங்களது கண்களைத் தானம் செய்கின்றோம். இந்தக் கண்களூடாக மலரப் போகின்ற தமிழீழத்தைக் காணவேண்டும்' என தங்கள் விருப்பத்தை நீதிபதியிடம் தெரிவித்தனர்.

## சிறைக்குள் நடந்தவை

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அப்போது தமது கண்களை இன்னொரு பார்வையற்ற தமிழனுக்குப் பொருத்தினால் தமிழீழம் மலரும் போது அந்தக் கண்களினால் தமிழீழத்தைக் காணலாம் என்பது அந்த வீரஞ்செறிந்த இளைஞர்களின் அவாவாக இருந்தது. அவர்களின் அந்த உயர்ந்த நோக்கைப் புரிந்து கொள்ளாத இனவாதக் கும்பல்கள் புதிய மகசின், வெலிக்கடைச் சிறைக்கூடங்களுக்குள் புகுந்து தமிழ்க் கைதிகளைக் கூரிய ஆயுதங்களால் தாக்கி சித்திரவதை செய்து கொன்றனர். இந்தப் படுகொலைகளின் உச்சமாகத் தமிழீழம் காணவேண்டுமென அயராது தமது வாழ்வை அர்ப்பணித்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோரின் கண்களும் கூரிய ஆயுதங்களால் தோண்டி எறியப்பட்டன; தலைகள் வெட்டி வீசப்பட்டன. சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் இவ்வாறு கோரமாகப் படுகொலை செய்யப்படுவதற்குச் சிறைக்காவலர்கள் உடந்தையாக இருந்துள்ளனர் என்பதை ஆணைக்குழுவே உறுதிசெய்தது. ஆயினும், சிறைக்காவலர் மீது அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.


தென்னிலங்கை மற்றும் மலையகமெங்கும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வகைதொகையின்றித் தாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பாதுகாப்பின்றி உடைமைகளைக் கைவிட்டு உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் அடைக்கலம் புகுந்தனர். ஆயினும், வன்முறையில் ஈடுபட்டோர் அந்த இடங்களையும் விட்டு வைக்கவில்லை. வன்முறை யாளர்கள் அங்கும் தாக்குதல் நடத்தினர். வன்முறைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற் கான எந்தவொரு நடவடிக்கை எடுப்பதையும் ஆட்சியாளர்கள் முற்றுமுழுதாகப் புறக்கணித்திருந்தனர். அதுவே தமிழ் மக்களை அச்சம் கொள்ளவைத்தது. தாம் பாதுகாப்பாக, சுதந்திரமாக வாழ வேண்டுமானால் தமிழர்களுக்கு என்றொரு நாடு வேண்டும் என்பதை ஜூலைச் சம்பவங்கள் ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்த்தின.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா கலவரத்தைத் தொடக்கினார். கலவரம் தமிழரது வரலாற்றைத் தீக்கிரையாக்கும்; தமிழனது முதுகெலும்பை முறித்துவிடும்; தமிழனது வரலாறு இத்தோடு முடிந்துவிடும் என ஜே.ஆர் எண்ணினார். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியினால் ஜே.ஆரின் எண்ணங்கள் புதையுண்டு போயின.

விடுதலைப் புலிகளின் திருநெல்வேலித் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் சடலங்கள் 1983 ஜூலை 23 அன்று மாலை அடக்கம் செய்யும் நிகழ்வு பொரளை மைதானத்தில் இடம்பெற்றது. அன்றிரவு கொழும்பு திம்பிரிகசாய நகரில் தமிழருக்குச் சொந்தமான கடைகள் பல ஆறையாடப்பட்டு தீவைக்கப்பட்டன. திருநெல்வேலி தாக்குதல் சம்பவத்திற்கும் ஜூலைக் கலவரத்திற்கும் சம்பந்தமில்லை. அது ஒரு சாட்டுத்தான். இது ஏற்கனவே ஆட்சியாளரால் திட்டமிடப்பட்ட ஒன்று.

## ஜே.ஆரின் செய்தித் தணிக்கை

தமிழர்களுக்கெதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட ஆட்சியாளர்கள் பல முனைகளிலும் தயாரிப்பு வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். அதன்



1983ஜூலைக் கலவரத்தின் போது......



புகைமண்டலத்துடன் பகை மூண்டு......



எரிந்த கார்.....

உச்ச செயற்பாடாக 1983 ஜூலை 20 ஆம் திகதி செய்தித் தணிக்கையை அரசு பிறப்பித்திருந்தது.

தமிழின அழிப்பை மேற்கொள்வதை உலகிற்கு மறைப்பதற்குச் செய்தித் தணிக்கை அவசியம் என ஜே.ஆர். விரும்பினார். தமிழரின் பலத்தை ஜே.ஆர் நன்கறிவார். தமிழரின் பலத்தை உடைக்கத் திரைமறைவில் பலவற்றைச் செய்தார்.

தமிழன் நாதி இல்லாதவன். அவனைக் கொன்றால் யார் கேட்கப் போகிறார்கள். எவ்வளவு கொல்ல முடியுமோ அவ்வளவு கொல்லட்டும் என அதனை ஜே.ஆர். ஊக்குவித்தார். தென்னிலங்கையில் பற்றி எரிந்த அரச பயங்கரவாதம் இன்று வரை தொடர்வதை எந்தவொரு சிங்கள அரசியல்வாதியாலும் அணைக்க முடியவில்லை. சிங்கள பௌத்த பேரினவாதிகள் தென்னிலங்கையில் 1983 ஆடி போல் வன்முறைகளை தொடங்க ஆர்வம் கொண்டுள்ளனர். என்ன நடக்கும் என்பதும் தெரியும். ஆனால், அன்று விதைத்ததை இன்று அறுவடை செய்ய வேண்டிய அவலம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் அவர்களுக்குண்டு.

அன்று நடந்த ஆடிக்கலவரம் இன்று எமது தேசிய எழுச்சிக்குக் கட்டியம் கூறுகிறது. போராற்றல் மிக்க படைபலத்தை நிறுவ வழி ஏற்படுத்திக் கொடுத்தது. அது இரு நாடு; இருபடைகள் என்ற நிலையை சர்வதேச அரங்கில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் துணிச்சல் மிக்க போராற்றல் உலகை வியக்க வைத்தது. 83 ஆடித் திங்களில் அடி வாங்கிய தமிழன் 2000ஆம் ஆண்டு கட்டுநாயக்கா விமானத்தளத்தைத் தாக்கியதால் சிங்களவன் தமிழனின் காலடியில் வீழ்கிறான். காலம் மாறுகிறது; சொகுசாக இருந்த சிங்களவன் வீட்டுக் கதவுகளை யுத்தம் தட்டியது....

கலி

# சிறுவர் உரிமைகள் என்றால் என்ன?

சிறுவர்களாகிய நாங்கள் எமது நாளாந்த வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பல விடயங்கள் தேவை எனக் கருதுகின்றோம். எமது ஆரோக்கியத்திற்கு போசாக்கு நிறைந்த உணவு தேவை. சுத்தமான உடையும் சுகாதாரப் பராமரிப்பும் தேவை. உடல்ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பாலியல் தொடர்பாகவும் நாம் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என நாங்கள் கருதுகின்றோம். எம்மிடையே உள்ள திறமைகளும் ஆற்றல்களும் வளர்க்கப்படவேண்டும். எமது படிப்பு தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் எங்களுடைய விருப்பங்கள் வெறுப்புக்களையும் சில கருத்துக்களையும் கூறப் பிள்ளைகளாகிய எங்களுக்கு விருப்பம் உண்டு.



இப்படியாக நாங்கள் உயிர்வாழவும், பாதுகாக்கப்படவும் திறமைகளில் வளரவும் கருத்துக்களைக் கூறவும் எமக்குத் தேவை உண்டு. இந்த அடிப்படைத் தேவைகளையே சிறுவர் உரிமைகள் என்று சிறுவர்களாகிய நாங்கள் விளங்கிக்கொள்கின்றோம்.


சிறுவர் உரிமை என்பதனைக் கண்கொண்டு பார்க்கும் போது சிறுவர்களாகிய நாம் எதனைப் பெற வேண்டுமென நினைக்கின்றோம்? எமது எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும். நாம் எமது நாட்டுக்கும் வீட்டுக்கும் பிரயோசனமானவர்களாக மாறவே விரும்புகின்றோம். சிறுவர்களாகிய எமது உரிமைகள் பற்றி பெற்றோர்கள் மத்தியிலும் பெரியவர்கள் மத்தியிலும் ஏன் எம் போன்ற சிறுவர்கள் மத்தியிலும்கூடப் போதிய விழிப்புணர்வு இல்லை. சிறுவர் உரிமைகள் பற்றி எல்லோருக்கும் நல்லதெளிவு இருந்தால், சிறுவர்களின் உரிமைகள் சரியாக வழங்கப்பட்டால் சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்படையும்; எமது சமுதாயமும் முன்னேற்றமடையும்.

**வ.விசாகன்** இளந்தளிர் சிறுவர் கழகம்.
(நன்றி : சிறுவர் குரல்)

## விடுகதைகள்

- வெளிச்சத்தில் தொடர்வான், இருட்டில் மறைந்திடுவான் அவன் யார்?
  *நிழல்*
- ஆடி வருவாள்; பாடி வருவாள்; வந்த இடம் தெரிந்ததும் வந்த வேகத்தில் திரும்பி விடுவாள் அவள் யார்?
  *கடல் அலை*
- பகல் எல்லாம் ஊரைச் சுற்றுவான்; இரவில் கதவு ஓரமாகக் காத்துக்கிடப்பான் அவன் யார்?
  *செருப்பு*
- வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு; வயிறில்லை. அது என்ன?
  *பட்டம்*
- போட்டதை எடுக்க முடியாது என்றாலும் பூமிக்கு ஆழகாச்சு அது என்ன?
  *கோலம்*
- உனக்குச் சொந்தமானது; ஆனால், உன்னை விட அதிகமாக மற்றவர்களே உபயோகிப்பார்கள் அது என்ன?
  *பெயர்*

**ஜா.தேஜனா,**
*தரம் 4,*
*யா/ மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம்.*



**இ.ஜனீசன்,**
*தரம் 1B,*
*யா/ இந்து ஆரம்ப பாடசாலை.*




# சோம்பேறி எலி


ஒரு வீட்டில் கல்யாணவீட்டிற்காக நிறையப் பலகாரங்கள் செய்து வைத்திருந்தார்கள். அவற்றை எலிகள் போய்ச் சாப்பிட்டன. அதைத் தடுக்க ஏதாவது செய்யவேண்டுமென வீட்டுக்காரர் நினைத்தார்.

அன்று அண்ணா எலியும் தம்பி எலியும் பலகாரம் உண்பதற்குச் சென்றன. ஓரிடத்தில் வடையொன்று கிடந்தது. அதன் வாசனை நாவூற வைத்தது.

பையொன்றில் பொதி செய்யப்பட்டிருந்த பலகாரத்தை உண்பதற்காக அண்ணா எலி பையைப் பற்களினால் கடிக்கத் தொடங்கியது.

'அண்ணா ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? வெளியே இருக்கும் வடையை உண்ணலாமே?' எனத் தம்பி எலி கேட்டது.

'எதையும் கஷ்டப்பட்டு முயற்சி செய்து பெற்றுக் கொள்ளவேண்டும். இலகுவாகக் குறுக்குவழியில் போய்ப் பெற்றுக்கொள்ள நினைத்தால் ஆபத்தில் மாட்டிக்கொள்ளுவோம். அல்லது நாம் அடைய நினைத்த பொருள் கிடைக்காது போய்விடும். நல்ல தின்பண்டங்களைப் பொதி செய்து வைத்திருப்பார்கள். இப்படி இலகுவில் எடுக்கக்கூடியதாக இருக்கும் வடை நல்லதாக இருக்காது' என அண்ணன் கூறியது.



'அது நல்ல வடையாகத் தான் தெரிகிறது. நீதான் வீணாகக் கஷ்டப்படுகிறாய். நான் கஷ்டப்படமாட்டேன். அதை உண்ணப்போகிறேன்' என்று தம்பி எலி சொல்லியது.

அது போய் வடையைக் கடித்ததும் வடை எலிப்பொறியில் வைக்கப்பட்டிருந்ததனால் பொறியில் அகப்பட்டுக்கொண்டது.

'அண்ணா என்னைக் காப்பாற்று' என்று தம்பி எலி அழுதது.

'நான் புத்திமதி கூறியும் நீ பிடிவாதமாகக், கஷ்டப்படாமல் உண்ண நினைத்தாயே. இப்போது பொறியில் அகப்பட்டு விட்டாயே. என்னாலும் உன்னைக் காப்பாற்ற முடியவில்லையே' என அண்ணன் எலி சேர்ந்து அழுதது.

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

## விந்தைச் செய்திகள்

### விந்தை மனிதன்



கொககுகள் ஒற்றைக் காலில் நின்று ஓய்வு எடுப்பதைப் பார்திருக்கிறோம். கொக்குகளைப் போல் ஒற்றைக் காலில் வெகுநேரம் நிற்கும் மனிதர்களும் இருக்கின்றனர். ஆப்பிரிக்காவில் உள்ள சூடான் நாட்டு 'ஷில்லுகு' என்ற பழங்குடி மக்கள்தான் இவ்வாறு ஒற்றைக்காலில் நிற்பவர்கள், கடவுளின் அன்பை வேண்டித்தான் இந்த ஒற்றைக் கால் தவம்செய்கிறார்களாம்?

### கமரா பிலிம்



இன்று கமரா, பிலிம் என்று சொன்னால் எல்லோருக்கும் தெரியும். 'பிலிம்' என்ற வார்த்தை எப்படி உருவானது தெரியுமா? கிரேக்க மொழியில் 'பெல்மா' என்றால் காலுக்கு கீழே உள்ள மெல்லிய தோல் என்று பொருள். இவ்வார்த்தை ஆங்கிலத்தில் 'பில்மென்' என அழைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு பில்மென், 'பிலிம்' என ஆகிவிட்டது. மெல்லிய தோல் போல் இருப்பதால் இதைப் 'பிலிம்' என்கின்றனர்.

### நுளம்பு



நுளம்புகள் கடித்ததும், கடித்த இடத்தில் அரிப்பு ஏற்படுகிறதே ஏன் என்று தெரியுமா? நுளம்பு எம்மைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் போது, ரத்தம் உறைந்து போனால் உறிஞ்சமுடியாது. இதனால் நம்மைக் கடித்ததும் நுளம்புகள் தமது வாயில் சுரக்கின்ற ஒரு திரவத்தை நமது தோலுக்குள் செலுத்துகிறது. இந்தத் திரவம் உள்நுழைத்து ரத்தம் உறைவதைத் தடுத்து விடுகிறது. இதன்பிறகுதான் நுளம்பு இரத்தத்தை உறிஞ்ச ஆரம்பிக்கிறது.

இத் திரவம் உட்சென்றதும்தான் எமது தோலில் அரிப்பு ஏற்படுகிறது.


### பிளமிங்கோ



இந்தியாவில் உள்ள பறக்கும் பறவைகளில் குறிப்பிடத்தக்கது பிளமிங்கோ(Flamingo) இதை தமிழில் சராஸ் நாரை, பூ நாரை, செங்கால் நாரை என்றும் அழைப்பர்.

### கறையான்

கறையானை ஆங்கிலத்தில் வெள்ளை எறும்புகள் என்று பொருள்பட White Ants என்று அழைத்தாலும் அவை எறும்பு இனம் அல்ல.



தொகுப்பு - **நாராயணசாமி கஜேந்திரன்,**
யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.

## வார்த்தை விளையாட்டு

| க | ய | ல் | வி | ழி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

கண்ணின் ஒத்தசொல் - 45
மீனின் ஒரு இனம் -123
நாயைக் கண்டால் எறிவது - 13
வாழ்க்கைக்குத் தேவை - 134
பாடலுக்கு ஒருபெயர் - 14
அழகான பெயர் - 12345

*- மதுரா*

# பறக்கும் பிராணி வெளவால்

வெளவாலை பறவை என்று கூறுவதை விடப் பறக்கும் பிராணி என்று கூறலாம். இது பாலூட்டும் உயிரினத்தைச் சேர்ந்தது. குட்டி போட்டுப் பாலூட்டும் பிராணிகளுக்கு இறக்கைகள் கிடையாது. ஆனால் வெளவாலின் உடலில் பறக்கச் சிறகுகள் உண்டு.

பழைய உயிரினங்களின் என்புக்கூடுகளை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் பூமியில் 6கோடி வருடங்களுக்கு முன்பே வெளவால்கள் இருந்ததாகக் கண்டுபிடித்துள்ளனர். துருவப் பிரதேசங்களைத் தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் வெளவால்கள் காணப்படுகின்றன.

பெரும்பாலான வெளவால்கள் புழு, பூச்சிகளைத் தின்று உயிர் வாழ்கின்றன. சூடான பிரதேசங்களிலுள்ள வெளவால்கள் பூக்கள், பழங்களை உண்கின்றன. மற்றப் பிராணிகளின் இரத்தத்தைக் குடித்து உயிர் வாழும் வெளவால்களும் உண்டு. இவை 'வாம்பயர் வெளவால்கள்' என அழைக்கப்படுகிறது . இதனால் தான் பலர் வெளவாலைப் பார்த்து பயப்படுகிறார்கள்.



இரத்தம் குடிக்கும் வெளவால்கள் ஏறத்தாழ 30 சென்ரிமீற்றர் அகலமானது. இதன் பற்கள் ஊசி போன்று கூரானவை; இந்தப் பற்களின் உதவியால் இந்த வெளவால்கள் எந்த மிருகத்தினதும் உடலைத் துளையிட்டுத் தனது நாக்கினால் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும்.

பசு, சேவல், குதிரை போன்றவற்றின் இரத்தங்களைக் குடிப்பதில் இதற்குத் தனி ஆனந்தம் உண்டாகுமாம். வெளவால்கள் ஓய்வாக இருக்கும் போது மரக்கிளைகளில் தலைகீழாகத் தொங்கும். இதன் தலைப்பகுதி கீழ் நோக்கி இருக்கும். பின்னங்கால்களின் விரல்களினால் மரக்கிளைகளைப் பற்றிப் பிடித்துக்கொள்கிறது. நேராக நிற்க முடியாத இதன் உடலமைப்புத் தலைகீழாகத் தொங்கத்தான் வசதியாக இருக்கும்.

– கவிதா

## அன்பாய் இருக்கக் கற்றுக்கணும்



அன்பாய் இருக்கக் கற்றுக்கணும்
அன்பால் பிறரை கவர்ந்துக்கணும்.

ஆதவன் வருமுன் எழுந்துக்கணும்
ஆடல் பாடல் படிச்சுக்கணும்

இகழ்வார் நெஞ்சில் ஒட்டிக்கணும்
இல்லார் நிலையைப் புரிஞ்சுக்கணும்

ஈனதை புறம்பே தள்ளிக்கணும்
ஈடில்லா நட்பைப் பெற்றுக்கணும்.

உழைப்பால் உயர்வை அடைஞ்சுக்கணு
உண்மையே பேசக் கற்றுக்கணும்.

ஊரார் போற்ற சிறந்துக்கணும்
ஊக்கமாயுன்னை வளர்த்துக்கணும்

எதிலும் திட்டம் வகுத்துக்கணும்
எல்லாம் திறம்பட செஞ்சுக்கணும்.

ஏழைக்கு உதவ தெரிஞ்சுக்கணும்
ஏழ்மையை ஒட்டி விரட்டிக்கணும்

ஐயம்மின்றி நடந்துக்கணும்
ஐங்கரனை துதித்து வணங்கிக்கணும்.

ஒருவருக்கொருவர் புரிஞ்சுக்கணும்
ஒற்றுமையாய் இங்கு கூடிக்கணும்

ஓதும் நேரம் ஒதுக்கிக்கணும்
ஓய்வும் நன்றாய் எடுத்துக்கணும்

ஔஷதமின்றி மேனி காத்துக்கணும்
அஃதே வாழ்வென கற்றுக்கணும்.

கி.துளசிகரன்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# "...பழைய பாடல்போல புதிய பாடல் இல்லை..."



– ஸ்ரனி சிவானந்தன்

ஒரு காலத்தில் 'பொப்' இசைப்பாடல்கள், மெல்லிசைப்பாடல்களால் ரசிகர்களின் மனங்களைக் கொள்ளை கொண்டவர் பாடகர் ஸ்ரனி சிவானந்தன். யாழ்.மாநகரசபைப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகும் இப்போதும் பாடிக்கொண்டிருக்கிறார். அவரது இசை உலக அனுபவங்கள் காத்திரமானவை. அது பற்றி அவரே கூறுகிறார்.

❑ தங்களைப் பற்றி.....

❖ என்னுடைய சொந்த இடம் காங்கேசன்துறை. தற்போது மட்டுவில் தெற்கில் வசித்து வருகின்றேன். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் எனது கல்வியைத் தொடர்ந்து பின்னர் யாழ்.மாநகரசபையில் வருமான மேற்பார்வையாளராகக் கடமையாற்றி தற்போது அதிலிருந்து ஓய்வு பெற்றுள்ளேன்.



பிரபல தென்னிந்தியப் பாடகர் ரி.எம் சௌந்தரராஜன் தம்பதியருடன்.....

❑ எப்படி இந்த இசைத்துறையில் காலடி எடுத்து வைத்தீர்கள்?

❖ என்னுடைய தந்தையார் ஒரு சிறந்த நாடகக் கலைஞன். அதிலும் காத்தவராஜன் கூத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அத்துடன், அதில் பிற்பாட்டுப் பாடுபவர். அப்போது நான் படிக்கின்ற காலத்தில் அப்பாவுடன் கூடச் செல்வேன். அதனாலோ என்னவோ... தெரியாது என்னுள்ளே ஒரு இயல்பான கலைஞானம் சங்கமித்து விட்டது. அதன் பிரதிபலனே என்னை ஒரு பாடகனாக்க வேண்டும் என்று அயராது முயற்சித்தேன்.
என்னுடைய முதல் அரங்கினை நான் படித்த கல்லூரிதான் அமைத்துத் தந்தது. 12 வயதில் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவில் பாடல் ஒன்றைப் பாடினேன். அப்போது அங்கு கற்பித்த ஆசிரியர்கள் என்னைப் பாராட்டினார்கள்.

❑ பின்பு எப்படி உங்களுக்கு இசைக்குழுவில் பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது? அது பற்றி.....

❖ அப்போதெல்லாம் என்னுடைய ஆற்றலை வெளிப்படுத்த ஒரு களத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். அதன் பலனாக 23 வயதில் காங்கேசன்துறை அம்மன் கோயிலில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சியில் பாஸ்கரன் என்பவர் மூலம் 'பாஸ்கரன் இசைக்குழுவில்' பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்குப் பின்னர் 1968ஆம் ஆண்டிலிருந்து 5வருட காலமாக 'ரெக்ஸ்'என்னும் இசைக்குழுவினை நான் இயக்கி வந்தேன். பின்னர்84ஆம் ஆண்டிலிருந்து கண்ணன் இசைக்குழுவில் பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த இசைக்குழுவின் இயக்குநர் இசைவாணன் எம்.கண்ணன் மூலமாகவே இலங்கை முழுவதும் என்னைஅறிமுகம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

❑ இலங்கை வானொலியில் பொப்பிசைப் பாடல்களைப் பாடியுள்ளீர்களே.... அந்த அனுபவம் பற்றிக் கூறுங்களேன்....

❖ கண்ணன் இசையமைப்பில் 1973ஆம் ஆண்டு இலங்கை வானொலியில் என்னுடைய சொந்தக்குரலில் 'குலுங்கி குலுங்கி அவள் நடக்கிறாள்....', 'சைவக்கடை சாப்பாடு சரியில்லை....', 'அன்றொரு நாள் அவள் என்னை அழைத்து.....' ஆகிய பாடல்களைப் பாடினேன். அத்துடன், 1980 ஆம் ஆண்டு இலங்கை வானொலி நடத்திய மெல்லிசைத் தேர்வில் தரம் 'ஏ' இல் சித்தியடைந்து, என்னுடைய சொந்தக்குரலில் 32 பாடல்களைப் பாடினேன். அதில் 'மாலைவேளை தென்றல் காற்று....', 'கடவுளைக் காணுகின்றேன்....', 'இனிய தமிழே உந்தன் புகழ் பாடுகிறேன்....', 'இதயத்திலே உன்னைப் பூட்டி......' ஆகிய பாடல்கள் பிரபல்யம் பெற்றன. என்னுடைய வளர்ச்சிக்குப் புகழ்பெற்ற பாடல்களாக அவை அமைந்தன.

❑ ஈழத்துத் திரைப்படங்களுக்குப் பாடியுள்ளீர்களாமே..... அது பற்றி....

❖ ஆம். 1978 ஆம் ஆண்டு ஈழத்துத் திரைப்படங்களான 'ஏமாளிகள்' படத்தில் கண்ணன். நேசம் ஆகியோரின் இசையமைப்பில் பாடியுள்ளேன். இந்தத் திரைப்படம் ராஜா தியேட்டரில் நீண்ட நாள்களாக ஓடி வசூலைக் கொடுத்தது. அடுத்து 'நெஞ்சுக்கு நீதி' திரைப்படத்தில் தென்னிந்திய நடிகர் ஸ்ரீகாந்துக்குப் பின்னணிக் குரலில் 'விடியும் வரை குடித்தாலும் வெட்கமில்லை' என்ற பாடலைப் பாடினேன். 'எனக்கென்றொரு உலகம்', 'தெய்வம் தந்த வீடு' ஆகிய படங்களிலும் பாடியுள்ளேன்.

❑ தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடினீர்களா?

❖ 1996ஆம் ஆண்டு 'கடலிலே காவியம் படைப்போம்' ஒலி நாடாவில் 'கடலிலே காவியம் படைப்போம்' என்ற பாடலைப் பாடினேன். அதன் பின்னர் பாடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் போராளிக் கலைஞனும் தற்போது மாவீரராகிவிட்டவருமான தமிழீழ எழுச்சிப்பாடகர் சிட்டுவுடன் பாடினேன். தற்போது எழுச்சிப் பாடகர்கள் எஸ்.ஜி.சாந்தன், சுகுமார் ஆகியோருடனும் இசைக்குழுக்களில் பாடி வருகிறேன்.

❑ தென்னிந்தியப் பாடகர்களுடன் இணைந்து பாடும் சந்தர்ப்பம் கிடைத்ததா?



பாடகி வாணி ஜெயராமுடன்......

❖ ஆம், 1982ஆம் ஆண்டு தென்னிந்தியப் பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் இசைப்பயணத்திற்கென இலங்கை வந்திருந்தார். அவரோடு கண்டி, கொழும்பு உள்ளிட்ட ஐந்து இடங்களில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சிகளில் இணைந்து பாடினேன்.
அதற்கு முன்னர் 1978ஆம் ஆண்டு இசை நிகழ்ச்சிக்காக இந்தியா சென்றிருந்தேன். அங்கு தென்னிந்திய நடிகர் மேஜர் சுந்தரராஜன் தலைமையில் சென்னையில் இடம்பெற்ற 'வானமுதம்' எனும் இசை நிகழ்ச்சியில் பாடினேன். அப்போது பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் வாழ்த்துக்கள் கிடைத்தன. பின்னர் இந்தியாவில் பல இடங்களில் இசைக்குழுக்களில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது.

❑ தென்னிந்தியாவில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது என்கிறீர்கள். அப்படியாயின் தென்னிந்தியத் திரைப்படங்களில் பாடுவதற்கு முயற்சிக்கவில்லையா?

❖ நான் இந்தியாவில் இசைக்குழுக்களில் பாடுகின்றபோது தென்னிந்தியத் திரைப்படமொன்றில் பாடும் சந்தர்ப்பத்தினைப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் பெற்றுத்தந்தார். அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று இறுதிக் கட்டத்தினை நெருங்கும்போது அது கைநழுவிவிட்டது. அதற்கான காரணம் நான் இலங்கையைச் சேர்ந்தவன் என்பதால்தான் என்பது பின்னர் அறிந்தேன். இத்தகைய காரணத்தினால் அந்த முயற்சி தோற்றுப்போக அதனைக் கைவிட்டேன்.

❑ ஆன்மீகப்பாடல்களைப் பாடியுள்ளீர்களா?

❖ 'மருதடிப் பிள்ளையார்.....', 'நல்லைநகர் வீதியினிலே' ஆகிய பாடல்களைப் பாடினேன். இதனைப் பாராட்டி மறைந்த கலைஞர் வீரமணிஐயா அவர்கள் எனக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வைத்து விருதினை வழங்கினார். இவைதவிர கவிஞர் சூரியநிலாவின் 'சந்தனக்காற்று' ஒலிநாடாவிலும், திருமறைக்கலாமன்றத்தின் எம்.ஜேசுதாசனின் இசையில் திருப்பாடுகளின் காட்சியிலும் பாடியுள்ளேன்.

❑ அந்தக்காலத்தின் இசையமைப்புக்கும், இந்தக் காலத்தின் இசையமைப்புக்குமிடையே உள்ள வேறுபாடுதான் என்ன?

❖ தற்போது நான் ராகம்ஸ் இசைக்குழுவில் பாடல்களைப் பாடி வருகிறேன். அந்தக் காலத்து இசைக்குழுவினர் 'எக்கோடியன்', 'ஆர்மோனியம்' போன்ற ஒரு சில இசை வாத்தியங்களுடன்தான் இசை நிகழ்ச்சியை நடத்தினார்கள். ஆனால், இன்று அப்படி அல்ல. நவீன வாத்தியக் கருவிகளுடன் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.
அப்போதெல்லாம் பாடல்களுக்கு மட்டுந்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்று இசைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதனால் தற்காலத்துப் பாடல்களைக் கேட்பதும் பாடுவதும் கூடக் கடினமாக உள்ளது.
அப்போதைய பாடல்களில் ஒரு தத்துவம் பொதித்திருக்கும். அமைதியான இசையமைப்புச் செறிந்திருக்கும். ஆனால், இன்று பாடல்களில் அர்த்தமில்லை. மொழியில்லை, அத்துடன் ஆரவாரமான இசையமைப்பு கூட. இது பாடல்களைக் கேட்கின்ற - பாடுகின்ற - கலைஞனின் ரசனையைக் குழி தோண்டிப் புதைத்து விடுகின்றது என்று சொன்னால் சாலப்பொருந்தும்.

❑ இன்றைய இளம் பாடகர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

❖ என்னுடைய இசை வாழ்க்கையில் நான் பெற்ற அனுபவத்தை வைத்து இன்றைய இளம் பாடகர்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால்...., இசைவாழ்க்கையென்பது புனிதமானது. எத்தகைய துன்பங்கள் இருந்தாலும் இந்தத் துறையில இருக்கும் கலைஞனுக்கு அந்தத் துன்பம் பறந்து போய் விடுகிறது. இத்தகைய புனிதமான கலையினை நாம் உணர்வுபூர்வமாக மதித்து அதனைத் தொடர்ந்து செல்ல வேண்டும். அதைவிட கலைஞன் தனக்குரிய கௌரவத்துடன் - தனக்குரிய சுயமுயற்சியுடன் தன்னுடைய கலைப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

— செவ்வி கண்டவர் கவிதரன்

## அலைகள் பாடின.....

நான் இப்படி ஒரு நாளும்
வருந்தியது கிடையாது.

பிரிவின்
நீள் துயரத்தை - இதுவரை
தாங்கியதே இல்லை.

துறைமுக அலை
கரைமோதி சிந்துகிறது
நீர்த்துளியோடு ஈரமணல்
அள்ளிவந்து
விழி மீது கொட்டுகிறது.....

குளிர்காற்று
உப்பை எடுத்து வந்து
மேனி துளைக்கிறது
சீவி வந்த தலைமயிரை
குழப்பிப் போடுகிறது.....

வேதனை
உயிர்ப்பெடுத்து வந்து
விழிமீது நிமிர்கிறது

அவன் சிரிக்கிறான்....
ஓடி வந்து எனது வாய்க்குள்
வெல்லக்கட்டியை திணிக்கிறான்...

மணலை
இரு கைகளாலும் அள்ளி
என்மீது தூவுகிறான்....

எனது,
வார்த்தைகள் நாக்கைப் பிளந்து
புதைந்து கொள்கின்றன.....

அவன்,
என்னைக் கட்டிப்பிடித்து
தூய எச்சில்படிய
முத்தமழை பொழிகிறான்.....

இருள் கவிழ்ந்தது
கடலலை ஆர்ப்பரித்தது
எனைப்பார்த்து - அவன்
புன்னகைக்கிறான்.....
எனது விழியிலிருந்து
கண்ணீர் வழிகிறது......

விடைபெற்று - அவன்
போகின்றான்......
விடைகொடுத்து - நான்
விழித்திருக்கிறேன்.....

விடிகாலையில்
தேசக் கவிஞனின் வரிகளை வாங்கி
அலைகள் பாடின......
அவனை கரும்புலியாக்கிவிட்டு

- சுதேசிகன்

## தோழிக்கு மடலொன்று!

பூவை நீ
அதற்காக
பாவை வாழ்வுனக்கு
ஒரு பொழுதும்
வேண்டாம்!

மனிதர் பலவிதந்தான்
அதற்கேன்
சிறு தயக்கம்
ஒரே மனிதரென்றால்
உலகேது தோழி!

காகங்கள் திட்டி
மாடுகள்
மரிப்பதில்லை!
ஊமைகள் பாடி
உலகு அறிந்ததில்லை!

தோல்விகள் இருப்பின்தான்
வாழ்வே சவால் விடும்!

சவால்கள் அதிகரித்தால்
வெற்றிகள்
உனதாகும்!

முடிவுகள் ஒரு போதும்
சொல்லி வருவதில்லை!
திருப்பங்கள்.....
நிஜமாயின்
வாழ்வின் அர்த்தமென்ன?

மதிக்கத் தகுந்தோரை
மதிக்கக் கற்றிடு!
மிதிக்க வேண்டியயோரை
கனவிலும்
மதித்திடாதே!

உனதுவே உனக்காய்
உண்மையாயிரு!
பிறர்க்காய்
வெகுண்டு ஒதுங்கி
வாழாதே!

ச.நிரஞ்சனி
சங்கத்தானை.

# தமிழருக்கு உரிமை வழங்க

# அரசமைப்பு இடம் தருமா?

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பின் மீது இலங்கை உயர்நீதிமன்றம் விதித்திருக்கின்ற இடைக்காலத் தடை உத்தரவு இலங்கையின் அரசியலில் ஏற்கனவே இருந்த பரபரப்பை - பதட்டத்தை - இரட்டிப்பாக்கி விட்டிருக்கிறது. சமாதான முயற்சிகள் அஸ்தமித்துக் கொண்டிருந்த சூழ் நிலையில் - மீண்டும் போர் அரக்கன் எம்மைச் சூழ்ந்து விடுவானோ என்று மக்கள் எல்லாம் அங்கலாய்த்துக் கொண்டிருந்த கால்கட்டத்தில் - அமைதி நிலை இன்னும் சில ஆண்டுகளாவது நீடிக்கும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றை மக்கள் மனங்களில் ஏற்படுத்தி விட்டிருந்தது பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைதான்.

**மக்களின் நம்பிக்கையில் விழுந்த பேரிடி!**

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை ஓரளவுக்காவது மீளக்கட்டியெழுப்பப்படும் என்ற திருப்தி ஒரு புறமிருக்க -

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கிறது என்ற விடயம், இப்போதைக்கு மீண்டும் யுத்தம் ஏற்படாது என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், பொதுக்கட்டமைப்பின் மீது உயர் நீதிமன்றம் விதித்திருக்கின்ற இடைக்காலத் தடை உத்தரவு அத்தகைய நம்பிக்கைகளையெல்லாம் தகர்த்தெறிந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. நீதித்துறையின் அதி உயர் அமைப்பாகத் திகழ்வது உயர்நீதிமன்றமே. அந்த உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை விமர்சிப்பது உசிதமானதல்ல. ஆனாலும் நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பதட்டத்துக்கும் பரபரப்புக்கும் மேற் குறிப்பிட்ட நீதிமன்றத் தீர்ப்பே முக்கியமான காரணம் என்பது அரசியல் அறிஞர்கள், சட்டத்துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமின்றி சாதாரண பொதுமக்களுக்கும் நன்கு புரிந்த ஒன்று.

தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு தருவதற்கு தெற்கில் பல சக்திகள் தடையாக இருந்திருக்கின்றன; இருந்து வருகின்றன. அந்த வரிசையில் நீதித்துறையும் இணைந்து விடுமோ என்ற அச்சம் இப்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது.

**தடையும் இடையூறுகளும் எதிர்பார்க்கப்பட்டவையே!**

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இலங்கை அரசியலில் - இருதரப்பு அமைதி ஏற்பாடுகளில் இதுபோன்ற தடைகள்- இடையூறுகள் அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் பொதுக்கட்டமைப்பு மீதான தடை இடைஞ்சல் புதிதல்ல; தமிழர் தரப்பினர் எதிர்பார்த்ததுமல்ல.

தமிழ் மக்களுக்கு - அவர்களின் பிரச்சினைகளுக்கு - தீர்வுகாண்பதற்கென இரண்டு இனங்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்படுகின்ற ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட - எரித்தழிக்கப்பட்ட - வரலாறுகள் இலங்கைத்தீவிலே முன்னரும் பல தடவைகள் அரங்கேறியிருக்கின்றன.

1956ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட பண்டா -செல்வா ஒப்பந்தமே இந்த கசப்பான வரலாற்றின் தொடக்கம் எனலாம். அன்றிலிருந்து இன்றுவரை எத்தனையோ ஒப்பந்தங்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது.

பொதுக்கட்டமைப்பு என்பது ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் க்கைத் தரத்தை ம்ண்டும் கட்டியெழுப்புவதற்கான இடைக்கால ஏற்பாடுதான்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கும் ஆழிப்பேரலைப் பொதுக்கட்டமைப்புக்கும் துளியும் தொடர்பில்லை என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். அப்படியிருக்க, இதுவே தமிழருக்கு நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கும் செயல் என்று துள்ளிக் குதித்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள், கூச்சல் எழுப்பினார்கள், நீதிமன்றம் வரை சென்றார்கள்.

அவர்களின் அரசியல் லாபம் நாடிய விருப்பத்துக்கு உயர் நீதிமன்றம் ஓரளவுக்காவது தீனி போட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் எந்த வொரு சர்வ வல்லமை படைத்த - சகல அதிகாரங்களும் கொண்ட- உயர் தலைவராக இருந்தாலும் அவர் இந்த நாட்டில் ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டிருக்கும் அரசமைப்புச் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே நடந்து கொள்ளவேண்டும் - சட்டத்திற்கு உட்பட்டே தனது முடிவுகளை எடுக்க வேண்டும் - என்ற நியதி இங்கு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

சட்டத்தின் சில ஏற்பாடுகளை மீறுகின்றது என்பதற்காகவே பொதுக்கட்டமைப்பின் மீது தடை விழுந்திருக்கிறது.

**நீதித்துறையால் யதார்த்தத்தை புரிந்துகொள்ள முடியாதா?**

சட்டத்திற்கு உட்பட்ட வகையில் அமையாத எதனையும் தடுத்து நிறுத்தும் ஓர் இயந்திரமாகவே நீதித்துறைகள் இயங்குவதுண்டு. அதற்கு அப்பால் யதார்த்தத்தை - மக்களின் விருப்புவெறுப்புக்களை - நாட்டின் சமாதானத்தைக் கருத்தில் எடுத்து - காலமாற்றங்களுக்கு ஏற்றவகையில் - சிறிதளவேனும் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க வாய்ப்பில்லை. அது நீதித் துறையின் தவறுமல்ல.

ஆனால், இலங்கையின் நீதி ஒழுங்கு முறைகளும், சட்டதிட்டங்களும் தயாரிக்கப்பட்ட போது - வகுத்துக் கொள்ளப்பட்ட போது அதிலே தமிழர் தரப்பினரின் விருப்பங்கள் - சம்மதங்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதும் - மாறாக தமிழ்மக்களின் உரிமைகளை மழுங்கடிப்பதற்கென்றே சில சரத்துக்கள் சேர்க்கப்பட்டன என்பதும் காலங்காலமாக தமிழ் அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வந்திருக்கின்ற விடயங்களாகும்.

**இலங்கையின் சட்ட திட்டங்களை ஏற்றுக்கொண்டனரா புலிகள்?**

அரசுக்கு எதிராக போர் புரிந்த விடுதலைப் புலிகள் போரை நிறுத்தி அரசுடன் சமாதான வழியில் பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்த போது அவர்கள் இலங்கையின் சட்ட திட்டங்கள், நிர்வாக ஒழுங்கு முறைகளையும் ஏற்றுக்கொண்டு விடவில்லை.

அதாவது இனப்பிரச்சினைக்கு அரசுடன் பேசி சமாதான வழியில் தீர்வுகாண முடியுமானால் அதற்கு தமிழர்கள் தயார் என்ற நிலைப்பாட்டில்தான் புலிகள் பேச்சுக்கு முன்வந்தார்கள்.

சமாதானத்துக்கான - தீர்வுக்கான - முயற்சியை ஏற்றுச் சமரசம் பேசுவதற்கு முன்வந்ததன் மூலம் அவர்கள் இலங்கையின் சட்டங்களையும் அரச மற்றும் ஏனைய துறைகளின் செயற்பாடுகளையும் முழுமையாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று பொருள் கொள்ளமுடியாது. அது முற்றிலும் தவறான சிந்தனையாகும். எனவே, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நீதிமன்றத் தடையைக் காரணம் க திமன்றம் தடுத்து விட்டது இனி நாங்கள் எதுவுமே செய்ய முடியாது. எனவே, நீதித்துறையின் சட்ட வரம்புக்கு அமைவாக மீண்டும் ஒரு கட்டமைப்பை - உடன்படிக்கையை ஏற்படுத்துவதுதான் சிறந்தவழி என்ற சாரப்பட அரசோ அரசுத் தலைவி சந்திரிகாவோ புலிகள் தரப்பிடம் கேட்டுக்கொள்ள முனைந்தால் அது கேலிக்கிடமாகவே அமையும்.

புலிகளைப் பொறுத்தவரை தமது எதிர்த்தரப்புடன் - சர்வதேச சமூகத்தின் சாட்சியுடன் ஓர் ஒப்பந்தத்தை அவர்கள் செய்து விட்டார்கள்; அவ்வளவுதான். இப்போது அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி - ஒப்புக் கொண்டதற்கு அமைவாக விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு புலிகள் தரப்பு அரசிடம் உத்தியோகபூர்வமாக உரிமையுடன் கேட்டிருக்கிறது.

கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கு அரசுத் தரப்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து தமக்கு அக்கறை எதுவுமில்லை என்றும் - அவற்றைப்பற்றியெல்லாம் தாங்கள் அலட்டிக் கொள்ளவே மாட்டார்கள் என்றும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் இலங்கையில் உயர் நீதிமன்றத்தீர்ப்புக் குறித்து புலிகளுக்கு எந்தவித அக்கறையும் கிடையாதுஎன்பதை அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார்.

**நிலைமையை தமிழ்மக்கள் சரிவர உணரவேண்டும் !**

இந்த விடயம் தொடர்பாக தமிழ்மக்கள் சில தெளிவான விளங்கங்களைக் கொண்டிருக்கவேண்டியது அவசியமாகிறது.

அதாவது இலங்கையின் அரசமைப்புச் சட்டங்களுக்கு அமைவாகவே - ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டே - தமிழர் பிரச்சினையும் நோக்கப்படுமானால் அமைதிவழியிலான தீர்வு முயற்சிகள் ஒருபோதுமே சாத்தியப்படாது என்று உறுதியாகக் கூறலாம். ஏனென்றால் அரசமைப்பில் தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்கப்படலாம் - என்ற நியதி - சட்டம் இல்லவே இல்லை.

எனவே, சட்டத்திற்கு அமைவாக வழங்குவதற்கு அரசுகள் சம்மதிக்கின்ற உரிமைகள் உருப்படியற்ற - வெறும் கண்துடைப்பான தீர்வாகவே அமையும். அத்தகையதொரு மேலெழுந்த வாரியான தீர்வுத்திட்டத்தை விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

**அரசமைப்பை மாற்ற முடியுமா?**

சரி, அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு கிடைக்காது என்பது ஒருபுறமிருக்க அரசமைப்பை மாற்றக்கூடிய புறநிலை இப்போதைக்கு இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் சரிப்பட்டு வராது என்ற உண்மை தெரியவரும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசமைப்பை மாற்றுவதென்பதும் இப்போதைக்குச் சாத்தியமில்லை. எனவே, அரசமைப்பும் இலகுவில் மாறாது. அரசமைப்புக்கு அப்பாற்பட்ட தீர்வும் சாத்தியப்படாது என்ற உண்மையை தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகமொத்தத்தில் பொதுக்கட்டமைப்பு மட்டுமல்ல இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபையோ, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி அரசோ தமிழருக்குக் கிடைப்பது சாத்தியமற்றது என்ற யதார்த்தத்தை தமிழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டியதாகிறது.

அவ்வாறு புரிந்துகொள்வதன் மூலமே தமிழ்மக்கள் தமக்கான பாதையை வரித்துக்கொள்ளமுடியும்.

**சந்திரமதனா**

## “மறைபொருள் வலிமை”

என்னுள் நிகழும்
ஒவ்வொரு மாற்றமும்
உன்னை எதிர்கொள்ளலுக்கான
ஆயத்தங்களின் ஆரம்பங்கள்

நான் ஆற்றும் கருமமொவ்வன்றிலும்
நீ ‘மறைபொருள்’ ஊக்கியாகிறாய்
நீ என்னைப் புரிதலுக்கான
அவகாசங்கள்
செத்துக் கொண்டிருந்தாலும்....
உனது ஞாபகங்களின் ‘வலிமை’
ஆக்கிரமிப்பில் நான்
செயல்களுக்கு வடிவங்
கொடுக்கிறேன்

எங்கென்றாலும்...
எவனோடென்றாலும்
உன் வாழ்க்கை தொடங்கலாம்!
நடக்கலாம்!!
அது குறித்தெல்லாம்
என் கவலைகள் தீராது.

ஞாபகங்களின் முகங்களுக்கு
முகமூடி போடாது
சித்தன் போக்காய்
அலையும் என்னிடத்தே
உந்தன் பசுமை நினைவுகள்
பரவிக் கிடக்கும் வரை...
நான் உயர்வதும் ... உயிர்ப்பதும்
காலத்தின் கட்டளையாய்
என்னுள் எதிரொலித்படியே வாழும்.

*த.அஜந்தகுமார்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

